கல்கி

KALKI
20.10.85
ரூ 1.50.



வீரப்பனுக்கு வீழ்ச்சியா?

வண்ணமயமானது வாழ்க்கை
கோ-ஆப்டெக்ஸ் அதை
ஒளி மிகுந்ததாக ஆக்குகிறது




இந்த ஆண்டு தீபாவளிக்கு
கோ-ஆப்டெக்ஸின் புதிய
புதிய ரக வண்ணத் துணி
களைத் தேர்ந்தெடுத்து
வாங்குங்கள்



20-50%
சிறப்புத் தள்ளுபடி

கோ ஆப்டெக்ஸ்
கைத்தறி

Efficient:-DIPR


'லக்ஷ்மி' எழுதும்
சொர்க்கத்தின்
கதவுகள்
தொடர்கதை
கல்கி தீபாவளி
சிறப்பிதழில் ஆரம்பம்.
அதிக பக்கங்கள் :: அதே விலை



ஜெயலலிதாவை மீண்டும் கொள்கை பரப்புச் செயலாளராக நியமித்ததோடு, அதே நாளில் வீரப்பனிடமிருந்து செய்தி– விளம்பரத்துறை இலாகாவையும் எம். ஜி. ஆர். பறித்தார். இந்த எதிர்பாராத செயலால் வீரப்பன் கோஷ்டி விழ்ச்சியடைந்து கொண்டு வருகிறதோ என்று அனைவரும் புருவத்தை உயர்த்தி யோசிக்கிறார்கள். உண்மையிலேயே வீரப்பனுக்கு விழ்ச்சிதானா? கல்கி பத்திரிகையோடு வீரப்பனே மனம் விட்டுப் பேசுகிறார்...

வீரப்பனுக்கு வீழ்ச்சியா?

கல்கி: அண்மையில் மணி விழா கண்ட உங்களுக்கு முதலில் கல்கி வாசகர்கள் சார்பிலும் கல்கி நிறுவனம் சார்பிலும் வாழ்த்துக்கள். நீங்கள் எம். ஜி. ஆரைச் சந்திக்கும் முன் — அரசியலுக்கு வரும்முன் சிறுவயதில் எப்படி உங்கள் வாழ்க்கையைத் துவக்கினீர்கள்? உங்களுடைய அரசியல் நுழைவும், எம். ஜி. ஆர். சந்திப்பும் எப்படி

நிகழ்ந்தன? இவற்றையெல்லாம் சுருக்கமாகச் சொல்லுங்கள். உங்கள் வாழ்க்கையின் ஆரம்பத்திலிருந்தே பேட்டியைத் துவங்குவோம்...

ஆர். எம். வீரப்பன்: புதுக்கோட்டையிலிருந்து ஏழு மைல் தொலைவிலுள்ள வல்லத்தராகோட்டை என்னும் ஊர்தான் நான் பிறந்த ஊர். எனது குடும்பம் சாதாரண விவசாயக் குடும்பம். என் பெற்றோருக்கு மொத்தம் ஏழு குழந்தைகள். ஏழாவதாகப் பிறந்தவன்தான்நான். ஏழில்ஒன்றுசிறு வயதிலேயே இறந்து விட்டது. எனக்குச் சுமார் இரண்டு வயது ஆகும் போதே அப்பா காலமாகிவிட்டார். அதனால் சிறு வயதிலேயே 'அப்பாவைத் தின்றவன்' என்ற வெறுப்பு என் குடும்பத்தாருக்கு என் மீது வந்துவிட்டது!

அந்த வெறுப்பின் பாதிப்புகளாலோ என்னவோ அந்தக் குழந்தைப் பருவத்திலேயே இரவில் தூங்கிக் கொண்டிருக்கும் போது என்னையறியாமலேயே தூக்கத்தில் எழுந்து என் அப்பா சமாதிக்குச் சென்று விடுவேனாம். அதனால் என் தாயார் என்னைத் தனது முந்தானையில் முடிந்து கொண்டுதான் தூங்குவார்களாம்! அந்த வியாதி இப்போதும்கூட எப்போதாவது ஒரு முறை—ரொம்பவும் டென்ஷனாக இருக்கும் போது வந்துவிடுகிறது. அதனால் நான் தூங்கும் போது இன்னமும் எச்சரிக்கையாகத்தான் தூங்க வேண்டியிருக்கிறது! அது கிடக்கட்டும்.

சிறு வயதிலேயே அப்பாவை இழந்து விட்டதால் என் மூத்த அக்காள் குடும்பம் ஹோட்டல் (உண்மையில் அது டீக்கடைதான்) நடத்திக் கொண்டிருந்த நாச்சியார்புரத்திற்குச் சென்று விட்டோம். என் அத்தான் சோமசுந்தரமோ நல்ல குடிகாரர். அதனால் நான் என்னதான் சுட்டிப் பையனாக இருந்தாலும் — நன்றாகப் பாடி ஊரிலுள்ள அனைவரும் பாராட்டும்படியானதொரு நிலையிலிருந்தாலும் என்னைப் போட்டு அடித்து விடுவார்.

வறுமைச் சூழ்நிலை காரணமாக என்னால் ஆறாம் வகுப்புக்கு மேல் படிக்க முடியவில்லை. அதனால் நல்ல பாடகனாக நான் நாடகத்தில் சேர்ந்துவிட வேண்டுமென்று காத்திருந்தேன். எனது பன்னிரண்டாவது வயதான அந்த நேரத்தில்,ஒரு முறை கார்த்திகைத் திருவிழாவுக்காக என் அக்காள் குன்றக்குடி சென்றபோது நானும்துணைக்குச் சென்றேன். அந்த நேரத்தில் காரைக்குடியில் 'டி. கே. எஸ். பிரதர்ஸ்' நாடகக் குழு முகாமிட்டிருந்தது.

என் அக்காள் துணைக்காக வேறு பலர் வந்து விட்டதால், என்னை வீடு திரும்பச் சொல்லிவிட்டார். நான் வீடு திரும்பாமல். காரைக்குடி சென்றேன். அங்கு சங்கரன் பிள்ளை என்பவரின் சிபாரிசில் டி. கே. எஸ். நாடகக் கம்பெனியில் மூன்றாண்டு ஒப்பந்தத்தின் பேரில் சேர்ந்து விட்டேன். என்னைக் காணாமல் தேடிய வீட்டாரும் நான் பத்திரமாக ஓரிடத்தில் வேலைக்குச் சேர்ந்திருப்பதைக் கேள்விப்பட்டுத் திருப்தியடைந்து விட்டார்கள். அப்போது (1939ல்) என் முதலாண்டுச் சம்பளம் மாதம் மூன்று ரூபாய். இரண்டாமாண்டுஐந்து;மூன்றாமாண்டுஏழு. இதுதான் ஒப்பந்தம். அந்த மூன்றாண்டுகளும் நடித்து வந்தேன்.

மூன்றாண்டுகள் முடிந்த பிறகு, பாடத் தெரிந்த ஒரு நல்ல நடிகனாக நான் வர முடியாது என்று தெரிந்து கொண்டேன். அதனால் நடிகனாகும் ஆசையை விட்டுவிட்டேன். இருந்தாலும் அந்த நாடகக் கம்பெனியிலேயே நிர்வாக வேலைகள் — கணக்கெழுதுதல் — நாடக டிக்கெட்டுகள் விற்றல் போன்ற வேலைகளைச் செய்து கொண்டிருந்தேன்...

கல்கி: அப்போது நீங்கள் நாடக டிக்கெட்கள் விற்றதைத்தான் மதுரை ஆதீனம் உங்களை 'சினிமா தியேட்டரில் டிக்கெட் கிழித்தவர்' என்று பேசினாரோ...?

ஆர். எம். வீ: அது எனக்குத் தெரியாது. ஒருமுறை பாலக்காட்டில் நாடகக் குழு முகாமிட்டிருந்த போது நாடகக் குழுவிலிருந்த கே. ஆர். ராமசாமி 'பூம்பாவை' சினிமாவுக்காகச் சென்னை புறப்பட இருந்தார். எனக்கும் சென்னை வர ஆசை. அதனால் 'என் அம்மாவுக்கு உடல்நிலை சரியில்லை' என்பதானதொரு பொய்த் தந்தியை வரவழைத்து நானும் சென்னைக்குக் கிளம்பினேன். அதை எப்படியோ தெரிந்து கொண்டு என்னை மீண்டும் பிடித்துக் கொண்டு சென்று விட்டார்கள். குழுவிலிருந்த சங்கரன் அண்ணாச்சி அனைவரையும் அடி அடி என்று 'மஞ்சள் பத்து' போடும் அளவுக்கு அடித்துவிடுவார். ஆனால் அன்று அவர் என்னை ஏனோ அடிக்கவில்லை. 'போகிறாயா?' என்றார். 'போறேன்' என்றேன். விட்டுவிட்டார். வீட்டுக்குக் கிளம்பி விடுவதென்று முடிவு செய்து, சென்றேன். அங்கு போய்ப் பார்த்த போது,



அத்தானின் குடியால் ஹோட்டல் சரிவர நடக்காததால் ஹோட்டலை மூடிவிட்டு அனை வரும் காரைக்குடிக்குச் சென்றிருந்தார்கள். நானும் காரைக்குடிக்கே சென்று விட்டேன்.

அங்கு சில காலம் பெட்டிக்கடை நடத்திக் கொண்டிருந்தேன். பிறகு அங்கேயே ராணுவ உடை தயாரிக்கும் கம்பெனி ஒன்றில் வேலைக்குச் சேர்ந்தேன். அங்கு கணக்கெழுதுவதிலிருந்து பார்சல் ஏற்றி இறக்கும் வேலை வரை அனைத்தும் செய்தேன். அந்தச் சமயத்தில் தான் பெரியார் திராவிடர் கழகம் தொடங்கினார். காரைக்குடியில் தி. க. பிரமுகரான ராமசுப்பையா (டைரக்டர் எஸ். பி. முத்துராமனின் தந்தை) விடம் எனக்கிருந்த ஈடுபாட்டால் நான் அண்ணாவின் 'திராவிட நாடு' பத்திரிகைக்கு ஏஜெண்டானேன். பிறகு 'குடியரசு' பத்திரிகையையும் விற்றேன். அதற்காக என் காதுக் கடுக்கனை விற்று டெபாஸிட் கட்டினேன்.

அப்பொழுது ராமநாதபுரம் மாவட்டத்தில் பெரியார் சுற்றுப் பயணம் செய்து கொண்டிருந்தார். அவருக்கு உதவியாக ராமசுப்பையா உடன் சென்றார். திடீரென்று ராமசுப்பையாவுக்கு உடல்நிலை சரியில்லாமல் போனதால் தனக்குப் பதிலாகப் பெரியாருடன் என்னை அனுப்பி வைத்தார். அப்போதுதான் எனக்குப் பெரியாரோடு தொடர்பு ஏற்பட்டது. தொடர்பு என்றால் சரிசமமாக உட்கார்ந்து விவாதிக்கும் தொடர்பு அல்ல. கறுப்புச் சட்டை, தி. க. வெளியீடுகள் ஆகியவற்றையெல்லாம் விற்று நான் ஒழுங்காகக் கணக்குக் கொடுப்பேன். அதனால் என்னைப் பெரியாருக்கு மிகவும் பிடித்துப் போய்விட்டது. தன்னோடு ஈரோடு வர முடியுமா என்று கேட்டார். நானும் சரியென்று அவரோடு சென்றுவிட்டேன். அப்போது ஈரோட்டில் கருணாநிதி 'குடியரசு' பத்திரிகையில் பணியாற்றிக் கொண்டிருந்தார்!

அந்தச் சமயத்தில் நடந்த ஒரு சுவையான சம்பவம். சுற்றுப் பயணம் முடிந்து ஈரோடு செல்லும் போது பெரியகுளம் ஜமீன்தார் ஒருவர் பெரியாருக்கு நாய் ஒன்றைப் பரிசாகக் கொடுத்திருந்தார். அதைக் கொண்டு செல்லும் பொறுப்பு என்னுடையதானது. வழியில் நான் அவசரமாகச் சிறுநீர் கழிக்கச் சென்ற போது நாய் என்னிடமிருந்து சங்கிலியைப் பிடுங்கிக் கொண்டு ஓடிப் போய் விட்டது. அதைத் தேடி நான் பின்னாலேயே ஓட என்னைக் காணாமல் பெரியார் என்னைத் தேட ஓர் ஆளை அனுப்ப... இப்போது நினைத்தாலும் சிரிப்புத்தான்!

பிறகு நீடாமங்கலத்தில் தி. க. மாநாடு நடந்தது. அந்த மாநாட்டில் கறுப்புச் சட்டை, திராவிட நாடு பிரதிகள் ஆகியவற்றை விற்பதற்காக நான் செல்ல வேண்டியிருந்தது. அந்த நேரத்தில் தஞ்சாவூரில் கே. ஆர். ராமசாமி அவர்கள் நாடகக் குழு முகாமிட்டிருந்தது. அதைக் கேள்விப்பட்டதும் எனக்கு மீண்டும் நாடகக் கம்பெனி ஆசை வந்துவிட்டது. மாநாட்டை முடித்துக் கொண்டு ஈரோடு சென்றதும் 'அம்மாவுக்கு உடம்பு சரியில்லை' என்று மீண்டும் ஒரு பொய்த் தந்தியைப் பெரியாரிடம் காட்டி மீண்டும் நான் நாடகக் குழுவுக்கே வந்துவிட்டேன்.

கல்கி: பெரியாரிடமிருந்து வேலையை விட்டு ஓடிவர என்ன காரணம்?

ஆர். எம். வீ.: பெரியாரிடம் எனக்கே ஒரு சலிப்பு ஏற்பட்டு விட்டது. எனக்குப் பெரிய மனிதனாக வளர வேண்டும் என்று ஆசை; அது பெரியாரிடமிருந்தால் நடக்காது. அவர் யாரையும் வளர விடமாட்டார். அண்ணா மட்டும்தான் அதற்கு விதிவிலக்கு. அதனால்தான் நான் நாடகக் கம்பெனிக்கே வந்துவிட்டேன். அந்தச் சமயத்தில்தான் அண்ணாவின் 'ஓர் இரவு' நாடகம் கே. ஆர். ஆர். குழுவால் நடத்தப்பட்டது. அப்போதுதான் அண்ணாவோடு பேசிப் பழகும் வாய்ப்பும் கிடைத்தது. அந்தப் பழக்கமும் ஒரு நெருங்கிய பழக்கம் என்று சொல்லிவிட முடியாது. காரணம் நான் முழுக்க முழுக்க நிர்வாக வேலைகளைத்தான் கவனித்துக் கொண்டிருந்தேன்!

கே. ஆர். ஆர். நாடகக் குழுவும் நஷ்டத்தால் கலைக்கப்பட்டது. அதனால் நான் சென்னைக்கு (50 ஆம் ஆண்டு) வந்து செட்டில் ஆனேன். வந்த புதுசில் வால்டாக்ஸ் சாலையில் தெரு ஓரத்தில்தான் பெரும்பாலான இரவு நேரத் தூக்கமெல்லாம் நடக்கும்! பிறகு 53 ல் — கருணாநிதி பார்ட்னராக இருந்து எம். ஜி. ஆர். தயாரித்த 'நாம்' என்ற சினிமா தோல்வியடைந்தது. அப்போது எம். ஜி.

அடுத்த இதழில்...

உலக அரங்கில் உஷா!

– கவர்ஸ்டோரி



உங்கள் குழந்தையின் சீரான வளர்ச்சி, முதல் ஆண்டில் அவன் பெறும் ஊட்டத்தைப் பொறுத்துள்ளது.



பால் அடங்கிய ஃபாரெக்ஸ் திட உணவு அவனது வளர்ச்சிக்குத் தேவையான ஊட்டச்சத்துக்கள் அனைத்தும் நிரம்பியதாகும்

பால் அடங்கிய ஃபாரெக்ஸ் திட உணவு, உங்கள் குழந்தையின் ஊட்டச்சத்துத் தேவைகளை மனதில் கொண்டு விசேஷமாகத் தயாரிக்கப்பட்டுள்ளது.

ஃபாரெக்ஸ் புரதம் செரிந்தது, கூடுதல் இரும்புச்சத்து உள்ளது, சரியான விகிதத்தில் கால்ஷியமும் ஃபாஸ்ஃபரஸும் அடங்கியது. குழந்தையின் வளர்ச்சிக்கு இவை அத்தியாவசியமாகும்.

ஏறக்குறைய நான்காவது மாதம் முதல், குழந்தைக்குப் பால் அடங்கிய ஃபாரெக்ஸ் திட உணவு கொடுங்கள். அவன் ஆனந்தமாக வளருவதைக் காணுங்கள்.

பாசத்துடன் வழங்குவோர் கிளாக்ஸோ!



ஏற்கெனவே பால் அடங்கியது

CLARION/B/GX/8/203- R

ஆர். நாடக மன்றத்தின் நிர்வாகப் பொறுப்பை நான் ஏற்று நடத்தும் ஒரு வாய்ப்புக் கிடைத்தது. 53 ஆம் ஆண்டு அக்டோபர் முதல் தேதியன்றுதான் நான் முதன் முதலாக எம். ஜி. ஆர். அவர்களைச் சந்தித்தேன். 53—56 வரை எம். ஜி. ஆர். நாடக மன்றத்தில் அறுபது ரூபாய்ச் சம்பளத்தில் பொறுப்பாளராக இருந்தேன். பிறகு 56 ல் துவங்கப்பட்ட எம். ஜி. ஆர். பிக்சர்ஸின் முதல் மேனேஜிங் டைரக்டரானேன். அந்த அளவுக்கு நிர்வாகத்தில் நான் பெயர் பெற்றவனாக விளங்கினேன்.

கல்கி: எம். ஜி. ஆர். சம்பந்தப்பட்ட நிறுவன நிர்வாகங்களில் சரி, அரசியலில் எப்படித் தொடர்புபடுத்திக் கொண்டீர்கள்?'

ஆர். எம். வீ: 58 களில் எம். ஜி. ஆர். இமேஜை வளர்த்து எம். ஜி. ஆர். ரசிகர் மன்றங்களை ஒழுங்குபடுத்தி, அவற்றையெல்லாம் அரசியலுக்குத் திருப்பினேன். அதை நான் மிகவும் திட்டமிட்டுச் செய்தேன். எம். ஜி. ஆர். படம் வெளிவரும் போது அதற்காகக் கொண்டாடப்படும் வெற்றி விழாக்களைக் கூடக் கூர்மையாகத் திட்டமிட்டுச் செய்வேன். எம். ஜி. ஆர். சம்பந்தப்பட்ட எந்த விஷயமானாலும் அது வீரப்பனுக்குத் தெரியாமல் இருக்க முடியாது என்னும் அளவுக்கு அவரிடமும் மற்றவர்களிடமும் செல்வாக்குப் பெற்றேன். 58 — 72 வரையிலான கால இடைவெளியில் நான் இவற்றைத்தான் செய்து கொண்டிருந்தேன். ஒரு பக்கம் எம். ஜி. ஆரிடம் சம்பளம் வாங்கிக் கொண்டிருந்தாலும் மறுபுறம் 'சத்யா மூவீஸ்' படக் கம்பெனியைத் தொடங்கி எம். ஜி. ஆருக்குச் சம்பளம் கொடுத்துப் படம் எடுக்கவும் தொடங்கினேன்.

கல்கி: சரி, 72 ல் அ. தி. மு. க. உருவான போது நீங்கள் என்ன செய்தீர்கள்? அதில் நீங்கள் உடனடியாக உறுப்பினராகி விட்டீர்களா?

ஆர். எம். வீ: அ. தி. மு. க. என்னும் குழந்தை பிறக்கும் போது கூட இருந்த தாதி நான். அதில் உறுப்பினராகும் பேச்சு எங்கேயிருந்து வரும்? அந்தச் சமயத்தில் எம். ஜி. ஆர். வெளியிட்ட முதல் அறிக்கையை எழுதியவனே நான்தான். எம். ஜி. ஆர். ஒரு விஷயத்தைச் சொல்லி அதை அறிக்கையாகத் தயார் செய்யும்படி யாரிடம் கூறினாலும் அதை மீண்டும் அவர் படித்துப் பார்க்காமல் வெளியிட மாட்டார். ஆனால் அந்த அறிக்கையை எழுதியது வீரப்பன் என்றால் அவர் ஒரு போதும் மீண்டும் படித்துப் பார்க்க மாட்டார். அந்த அளவுக்கு அவருடைய கருத்துக்களைப் பிரதிபலிப்பவன் நான்! இன்னும் சொல்லப் போனால் பெரியவர் சக்கரபாணி அவர்களுக்குக் கொடுக்காத மரியாதையைக் கூட எனக்குக் கொடுப்பவர் எம். ஜி. ஆர்.

கல்கி: தி. மு. க. விலிருந்து எம். ஜி. ஆர். விலக்கப்பட்ட போது நீங்கள் எப்படி உணர்ந்தீர்கள்?

ஆர். எம். வீ: தி. மு. க. பிளவாகிப் போய் விடுமோ என்று நான் அப்போது அழுதே விட்டேன். ஒரு போதும் அழாத நானே அப்போது அழுதேன் என்றால் கட்சியின்மேல் எந்த அளவுக்குப் பற்றுக் கொண்டிருந்தேன் என்பதைப் பார்த்துக் கொள்ளுங்கள். எப்படியாவது அந்தப் பிளவைத் தடுக்க முடியுமா என்று கருணாநிதியைச் சந்தித்துப் பேசினேன். ஆனாலும் முடியவில்லை.

கல்கி: இப்படி வெளியில் பிரபலமாகாமல் திரைமறைவில் இருந்து கொண்டே பல காரியங்களைச் செய்து கொண்டிருந்த நீங்கள் எப்படிப் பிரபலமானீர்கள்?

ஆர். எம். வீ: 72 ஆம் ஆண்டு அக்டோபர் 22 ஆம் தேதி முதன் முதலில் காஞ்சிபுரத்தில் கூட்டப்பட்ட அ. தி. மு. க. மாநாட்டின் போது என்னைப் பொருளாளராக இருக்கும்படி எம். ஜி. ஆர். கூறிய போது, நான், "வேண்டாம்; உங்களுடனேயே நான் இருப்பதால் என்னைக் கணக்குப் பிள்ளை என்று சொல்லுவார்கள். அதனால் எஸ். எம். துரைராஜைப் பொருளாளர் ஆக்குங்கள்!" என்று மறுத்துவிட்டேன். பிறகு நடந்த திண்டுக்கல் இடைத்தேர்தலில் தேர்தல் பணிகளைக் கவ



னித்தேன். ஆனால் எஸ். டி. எஸ்ஸைக் கேட்டால் திண்டுக்கல் வெற்றிக்குத் தான்தான் பொறுப்பு என்பார். 77 — பொதுத் தேர்தலின் போது எம். ஜி. ஆர். என்னிடம், 'தேர்தலில் போட்டியிடுங்கள். வெற்றி பெற்று அமைச்சராகலாம்!' என்றார். அதற்கு நான், 'அமைச்சராகித்தான் தீர வேண்டும் என்றால் தேர்தலில் வெற்றி பெற்றுத்தான் ஆக வேண்டும் என்பதில்லை. அதற்குப் பல வழிகள் இருக்கின்றன!' என்று சொல்லித் தலைமை நிலையச் செயலாளராக இருந்து மொத்தத் தேர்தல் பணிகளையும் கவனித்துக் கொண்டேன்.

தேர்தலில் அ. தி. மு. க. மாபெரும் வெற்றி பெற்று ஆட்சி அமைத்த போதும் நான் அமைச்சர் பதவி வேண்டாம் என்றுதான் சொன்னேன். காரணம், நான் அமைச்சராகி விட்டால் அவரிடம் பார்க்கும் வேலையை முதலில் விடவேண்டும். அதனால் அவரிடம் கைநீட்டிச் சம்பளம் வாங்க முடியாதே என்பதை எடுத்துச் சொன்னேன். அவர், ஒப்பவில்லை. மறுபடி வற்புறுத்தினார். அதன் பிறகுதான் அமைச்சராக ஒப்புக் கொண்டேன். அந்த அளவுக்குப் பதவியை விட எம். ஜி. ஆருடன் இருப்பதையே பெரிதாக நினைப்பவன் நான்.

என்ன செய்கிறார் ஜெயலலிதா?

ஜெயலலிதா படு சீரியஸாய் தரையில் சம்மணமிட்டு உட்கார்ந்து, என்ன செய்து கொண்டிருக்கிறார்?

விவரம் 15 ம் பக்கம்.



கல்கி: இந்த அளவுக்கு எம். ஜி. ஆர். மேலும், கட்சியின் மேலும் பற்றுக் கொண்டிருக்கும் நீங்கள் — எம். ஜி. ஆரின் இறுதி முடிவுக்குக் கட்டுப்பட்டு நடக்கும் நீங்கள், கொள்கைப் பரப்புச் செயலாளராக ஜெயலலிதா நியமிக்கப்பட்ட பிறகு அவரை எதிர்ப்பதற்கு என்ன காரணம்? அது எம். ஜி. ஆர். எடுத்த முடிவுதானே? ஜெயலலிதாவால் உங்களுக்கு என்ன இடைஞ்சல்?

ஆர். எம். வீ: அது ஒரு ஆழமான விஷயம். இருந்தாலும் தனிப்பட்ட முறையில் எனக்கு ஜெயலலிதா மீது எந்தவித எதிர்ப்பும் இல்லை. ஆனால் கட்சியின் பெரிய பதவிக்கு வரக்கூடிய ஒருவர் அந்தக் கட்சியில் முறையாக வளர்ந்து அந்தப் பதவிக்கு வர வேண்டுமே தவிர, வேறு காரணங்களால் வரக் கூடாதல்லவா! அதனால்தான்.

கல்கி: வேறு காரணங்கள் என்றால்...?

ஆர். எம். வீ: அந்தக் காரணங்களையெல்லாம் நாம் இப்போது அலச வேண்டாம். அவர் எப்போது எம். ஜி. ஆரைச் சந்தித்தார் — எப்படிச் சந்தித்தார் — எம். ஜி. ஆருக்கும் அவருக்கும் இடையில் என்ன உறவு — எனக்கும் எம். ஜி. ஆருக்கும் இடையில் என்ன உறவு என்பதையெல்லாம் நான் காலம் வரும்போது சொல்கிறேன்.

கல்கி: எம். ஜி. ஆரின் இறுதி முடிவுக்கு நீங்கள் கட்டுப்பட்டிருக்க வேண்டாமா?

ஆர். எம். வீ: 82லிருந்து 84 வரை கட்டுப்பட்டுத்தானே இருந்தோம். அதன் பிறகு எம். ஜி. ஆர்.தானே அவரைக் கொள்கைப் பரப்புச் செயலாளர் பதவியிலிருந்து நீக்கினார்! ஏன் நீக்கினார்? புரிந்து கொண்டார்; அதனால்தான் நீக்கினார்.

கல்கி: இப்போது அவரேதானே ஜெயலலிதாவை மீண்டும் அதே பதவியில் நியமித்திருக்கிறார்!

ஆர். எம். வீ: இதற்கும் காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.

கல்கி: அப்போது ஜெயலலிதா நீக்கப்பட்டதற்கு எஸ். டி. எஸ். பிரச்னைதான் காரணமா?

ஆர். எம். வீ: அதுவும் ஒரு காரணமே தவிர அதுவே காரணம் இல்லை. ஏனெனில் எஸ். டி. எஸ். போன்றவர்கள் எம். ஜி. ஆரை எப்போதும் தலைவராக ஏற்றுக்கொண்டதே இல்லை.

கல்கி: எம். ஜி. ஆர். அமெரிக்காவில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த சமயத்தில், எம். ஜி. ஆருக்கும் ஜானகிக்கும் நடந்த திருமணத்தைக் கூட சந்தேகத்திற்குரியது என்று பேசிய அந்த ஜெயலலிதாவைத்தான் எம். ஜி. ஆர். மீண்டும் கொள்கைப் பரப்புச் செயலாளர் ஆக்கியிருக்கிறார். இதற்கு என்ன காரணம்?

(மீதி அடுத்த இதழில்.......)

அட்டை வண்ணப்படம்: மனோ.

கலைமகள், கல்கி, அமுதசுரபி தீபாவளி மலர்கள் பரிசு

சென்னை, ஸ்ரீராம் குருப் நிறுவனத்தினர்களின் நாணயம், நிர்வாகத் திறமை தமிழ்நாட்டினருக்கு நன்கு தெரியும். எட்டு கிளைகளுடன் ஐம்பதினாயிரம் அங்கத்தினர்களுக்கு மேல் வளர்ந்து இன்று வருடத்துக்கு ரூ. 15 கோடிக்கும் மேல் சீட்டுத் தொகை பட்டுவாடா செய்கின்றனர். தென் இந்தியாவில் தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், கர்நாடக மாநிலங்களில் நன்கு வேரூன்றி வருகின்றனர். அடுத்த ஆண்டில் பம்பாய், தில்லி, கேரளா என திட்டமிட்டுள்ளதாம்.

இந்த ஆண்டு அக்டோபர் 23ந் தேதி விஜயதசமியன்று அவர்களது புதிய கிளை பெங்களூர் மல்லேஸ்வரத்தில் கர்நாடக கல்வி அமைச்சரால் திறக்கப்பட உள்ளது.

இந்த விழாவையொட்டி இவர்கள் போற்றத்தக்க புதிய திட்டங்களை அறிவித்துள்ளார்கள்.

இது இளைஞர் ஆண்டு. இளைஞர்களுக்கு மிகவும் இன்றியமையாதது பொது அறிவு. ஸ்ரீராம் குருப்பின் புதிய ரூ. 15,000 சீட்டுத் திட்டத்தில் (மாதம் ரூ. 500 வீதம் 30 மாதங்கள்) அங்கத்தினர்களாகச் சேர்பவர்களுக்கு புகழ் பெற்ற **HAMLYN JUNIOR ENCYCLOPEDIA** (1000 வண்ணப் படங்கள் கொண்ட அறிவுக் களஞ்சியம்) ஒன்றினைப் பரிசாக வழங்குகிறார்கள்.

விஜயதசமியன்று இன்னொரு புதுமை. வங்கிகளில் பணிபுரியும் தம்பதிகள் ஸ்ரீராம் சீட்டு குருப்புகளில் சேர்ந்து பணம் எடுக்கும் போது ஜாமீன் கையெழுத்து இன்றியே பணம் பெற புதிய திட்டம் அறிவித்துள்ளார்கள். இந்தத் திட்டத்தின் வெற்றியையொட்டி இதே சலுகையை இன்சூரன்ஸ் கம்பெனிகளுக்கும் விரிவாக்க இருக்கிறார்கள்.

இல்லத்தரசிகளுக்காக "பிரஸ்டீஜ் பிரஷர் பான்" அன்பளிப்புத் திட்டமும் அறிவித்திருக்கிறார்கள்.

தமிழ் இலக்கியத்துக்கு 'அமுதசுரபி' மாத இதழ் மூலம் ஸ்ரீராம் டிரஸ்ட் நிறுவனத்தினர் செய்து வரும் தொண்டை தமிழகம் நன்கு அறியும். தீபாவளி மலர்கள் என நினைக்கும் போது கலைமகள், கல்கி, அமுதசுரபி மலர்கள் உடனே நினைவுக்கு வரும்.

இந்த வருடம் விஜயதசமியன்று ரூ. 5000 சீட்டு குருப்பில் (மாதம் ரூ. 125 — 40 மாதங்கள்) சேரும் எல்லா புதிய அங்கத்தினர்களுக்கும் "அமுதசுரபி" தீபாவளிமலர் தீபாவளியன்று அவர்கள் வீடு தேடி ஸ்ரீராம் குருப் பரிசாக வரும். இது ரகசியம்.

கலைமகள்/கல்கி தீபாவளி மலர்களையும் பரிசாகப் பெற வேறொரு திட்டத்தையும் தெரிவித்துள்ளார்கள்.

ஸ்ரீராம் குருப் அங்கத்தினர்கள், மெம்பர்கள், டெபாஸிட்தாரர்கள், பங்குதாரர்கள் எல்லோருக்கும் ஒரு பரிசுக் கூப்பனை அனுப்பி உள்ளார்கள். இந்தப் பரிசுக் கூப்பனை பெங்களூரில் உள்ள தங்களது நண்பர்கள் அல்லது உறவினர்களுக்கு அனுப்பி விஜயதசமியன்று மல்லேஸ்வரம் ஸ்ரீராம் புதிய கிளையில் கொடுத்து ஏதாவது ஒரு சீட்டு குருப்பிலோ அல்லது டிபாசிட் தாரராகவோ சேரும்படி செய்தால் இந்தப் பரிசுக் கூப்பனை அனுப்பிய அன்பருக்கு கல்கி அல்லது கலைமகள் தீபாவளி மலர் ஸ்ரீராம் குருப் பரிசாகக் கிடைக்கும். இதே போல் இரண்டு புதிய நண்பர்களை மல்லேஸ்வரம் கிளையில் அறிமுகப்படுத்தி அவர்கள் சீட்டு குருப்பில் சேர்ந்து கொண்டால் கல்கி, கலைமகள் இரண்டு தீபாவளி மலர்களும் அந்த அன்பருக்கு தீபாவளியன்று ஸ்ரீராம் குருப் பரிசாக அனுப்பி வைக்கப் போகிறார்கள்.


ஒற்றுமைக்கு ஓர் அறைகூவல்!

"வெங்கட் மனம் தளர வேண்டாம்!"

—— வி.எஸ். மணி ——

சென்னை ஆர். ஆர். சபாவில் வெங்கட்டின் 'உயிரில் கலந்த உறவே' நாடகம் அரங்கேறியபோது நிகழ்ந்த சம்பவங்கள் பற்றிய கட்டுரைகளைப் படித்தேன். சென்னை, பிராமணர் சங்கத் தலைவர் பாலசுப்பிரமணியனின் எதிர்ப்புகளும் சரி, காசிராமனின் கடிதமும் சரி, எனக்கு மிகுந்த வருத்தத்தையே அளித்தன.

வெங்கட் ஓர் இளம் நாடகாசிரியர். பிராமணர்களுக்கு இடையே ஒழுக்கக் கேடும், முறைகேடும் அதிகரித்து வருவதைக் கண்டு அவர் பாதிக்கப்பட்டிருப்பது இயற்கைதானே. நாடக மேடையை ஒரு சக்தி வாய்ந்த சாதனமாகக் கொண்டு அவர் சமூக சீர்திருத்தங்களைக் கொண்டு வர முயற்சி செய்வதில் என்ன தவறு? பாலசுப்ரமணியன் அந்த நாடகத்தில் பிராமணர்கள் விகாரமாகச் சித்திரிக்கப்பட்டிருப்பதைக் குறித்து வருத்தம் தெரிவித்துள்ளார். சில பத்திரிகைகள், சினிமா, நாடகங்கள் போன்றவை பிராமணர்களை இழிவு படுத்துவதைக் கண்டு அவர் மனம் பதறுவதையும் புரிந்து கொள்ள முடிகிறது.



அண்டை மாநிலமான கேரளாவில் உள்ள பிராமணர்கள் சபையின் பொதுச் செயலாளர் என்ற முறையிலும், அனைத்திந்திய பிராமணர் கூட்டமைப்பின் பிரதமக் காரியதரிசி என்ற வகையிலும் நான் வெங்கட்டிடம் கேட்டுக் கொள்கிறேன்: அவர் எதிர்ப்புகளைக் கண்டு மனம் தளர்ந்துவிடக் கூடாது. அவர் தொடர்ந்து தன் பணியைச் செய்ய வேண்டும். அதைச் சிறப்புறச் செய்ய வேண்டுமானால் அவர் பிராமணர் சங்கத்திலேயே உறுப்பினராகச் சேர வேண்டும். பிராமணர் இயக்கத்தில் ஈடுபட்டே அந்தச் சமூகத்தில் உள்ள குறைகளைக் களைய முயல வேண்டும். அதே நேரத்தில் பிராமணர்களுக்கு உள்ள இட ஒதுக்கீடு போன்ற பெரிய பிரச்னைகளையும் சந்திக்கத் தயாராக வேண்டும், அவர். மேலும் பல இளைஞர்களை அவர் இந்த இயக்கத்தில் சேரவும் தூண்ட வேண்டும்.

நாடெங்கும் அமைக்கப்பட்டுள்ள பிராமணர் சங்கங்கள் குறிப்பாக இட ஒதுக்கீட்டை எதிர்த்துப் போராடும் நோக்குடன் தொடங்கப்பட்டவை. இட ஒதுக்கீடு இளைஞர்களையே, குறிப்பாக பிராமண இளைஞர்களை நேரடியாகப் பாதிக்கின்ற விஷயம். ஆனால், இன்று இந்த அமைப்புகளின் உறுப்பினர்கள் எல்லோரும் ஐம்பது வயதுக்கு மேற்பட்டவர்களாகவே இருக்கிறார்கள்! இளைஞர்கள் இந்தச் சங்கங்களை வளர்ப்பதன் மூலமாகத்தான் அவர்கள் தங்கள் எதிர்காலத்தை ஸ்திரப்படுத்திக் கொள்ள முடியும். அது மட்டுமல்ல, ஒற்றுமையுடன் முயற்சி செய்தால் மட்டுமே பிரச்னைகளைத் தீர்க்கமுடியும் என்பதையும் இளைய சமுதாயம் உணர வேண்டும்.

திருவனந்தபுரம், வி. எஸ். மணி ஐயர்.

கல்கி

தீபாவளி மலர் 1985




தீபாவளியின் புனிதம், வண்ணங்கள், மகிழ்ச்சி அனைத்தையும் பிரதிபலிக்கும் விதமாக......


ஆன்மீக; அறிவியல், அரசியல் கட்டுரைகள்; அற்புத வண்ணப் புகைப் படங்கள், ஓவியங்கள்; சிறுகதைகள், கவிதைகள், நகைச்சுவை அம்சங்கள்— அனைத்தையும் உள்ளடக்கிப் பிரமாதமான முறையில் உருவாகி வருகிறது.

உங்கள் பிரதிக்கு உடனே உள்ளூர் ஏஜெண்டிடம் பதிவு செய்து கொள்ளுங்கள். அல்லது 'கல்கி' காரியாலயத்திற்கு எழுதுங்கள்.


தனிப்பிரதி விலை ரூ. 25. பதிவுத் தபாலில் பெற ரூ. 4/— சேர்த்து அனுப்ப வேண்டும். வெளிநாட்டு சந்தாதாரர் கப்பல் தபாலில் பெற ரூ. 50/— அனுப்ப வேண்டும்.

மானேஜர், கல்கி, சென்னை—32.





அமெரிக்கா, பிரிட்டன், சீனா, பாகிஸ்தானிடமிருந்து இலங்கை அரசு போர்த் தளவாடங்களைக் குவித்து வருகிறது!





40 ஆயிரம் டன் அரிசி சப்ளையை நிறுத்தியதும் டன்னை உயர்த்த வேண்டுமென மத்தியிடம் மன்றாடுகிறது தமிழக அரசு-



கல்கி

1985 அக்டோபர் 20
மலர் 44 இதழ் 12
குரோதன ஐப்பசி 4



இரண்டாவது படியில் நின்று ஓர் எச்சரிக்கை!


ராஜீவ் காந்தி பிரதமராகப் பதவி ஏற்றதிலிருந்து பல பிரச்னைகளைப் பெருந்தன்மையோடும் பிரத்யட்ச நோக்கோடும் அணுகித் தீர்வுகளைக் கண்டும் வருகிறார். அவர் சந்தித்த, சந்தித்து வருகிற பிரச்னைகள் அனைத்திலும் மிகவும் சிக்கலானது, விடுவிக்க ரொம்பவும் கஷ்டமானது ஈழத் தமிழர் பிரச்னைதான். எனினும் அதிலும் வெற்றி கண்டே ஆக வேண்டும் என்ற உறுதி அவரிடம் இருப்பது தெரிகிறது. அதனால்தான் ரோமேஷ் பண்டாரியின் உதவியுடன் ஈழப் பிரச்னையில் சம்பந்தப்பட்டிருப்பவர்களைக் கைலாகு கொடுத்து இரண்டாவது படியில் பெருமுயற்சி செய்து ஏற்றியிருக்கிறார்! இன்னும் பல படிகள் பாக்கியிருக்கின்றன என்றாலும் இரண்டு படிகள் கடந்து வந்துவிட்டதால் இனி மற்றப் படிகளையும் ஏறிவிட சம்பந்தப்பட்ட அனைவருக்கும் ஊக்கம் ஏற்பட்டிருக்கும் என நம்பலாம்.

இரு துருவங்களாக நின்ற ஈழப் போராளிகளையும் இலங்கை அரசையும் அழைத்துப் பேச வைத்ததே ஒரு சாதனைதான்! அதன் பிறகு போர் நிறுத்த ஒப்பந்தம் ஒன்று உருவானது இரண்டாவது கட்ட வெற்றி. போர் நிறுத்தத்துக்கு இரு தரப்பினருமே ஒப்புதல் தந்திருந்த போதிலும் அதைக் கண்காணிக்க அதிகார சக்தி வாய்ந்த அமைப்பு இல்லை எனில் பயன் ஏதும் இராது என்று கருதப்பட்டு வந்தது. இப்போது அத்தகைய ஓர் அமைப்பு உருவாகவும் வழி பிறந்திருக்கிறது. போர் நிறுத்தக் கண்காணிப்புக் கமிட்டியின் அதிகாரங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன. இவ்விஷயத்தில் இலங்கை அரசை இணங்க வைத்ததில் பாரத அரசுக்குப் பெரும் பங்கு உண்டு.

இலங்கை அரசை நம்பமுடியாது என்றும் சமாதானம், போர் நிறுத்தம் என்று கூறிக் கொண்டே அந்த அமைதியைப் பயன்படுத்திக் கொண்டு தங்கள் நிலையை ஸ்திரப்படுத்திக் கொள்வார்கள் என்றும் பேசப்படுகிறது. ஈழப் போராளிகளை நசுக்கவும் சிங்களவரைத் தமிழ்ப் பகுதிகளில் கட்டாயமாகக் குடியேற்றவும் அந்த இடைக்காலத்தைப் பயன்படுத்திக் கொள்வார்கள், ராணுவ பலத்தைப் பெருக்கிக் கொள்வார்கள் என்றெல்லாம் கூறப்படுகிறது. இலங்கை அரசின் கடந்த கால நடவடிக்கைகள் இந்தக் குற்றச்சாட்டுக்கள் நியாயமானவை என்றே எண்ணச் செய்கின்றன. ஏன், இப்போதுகூட சீனா, பிரிட்டன், பாகிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்து ஆயுதங்களை வாங்கிக் குவித்துக் கொண்டிருக்கிறது இலங்கை அரசு. 'அமெரிக்காவிடமும் ஏராள ஆயுதங்களைக் கேட்டிருக்கிறது' என விருப்பு வெறுப்பற்ற, பொறுப்புள்ள ஓர் அமெரிக்கர், பர்ட்டன் யேல் பைன்ஸ், அறிக்கை விட்டிருக்கிறார்.

எனவே, 'ராஜீவின் முயற்சிகள் வெல்லட்டும்' என்று வாழ்த்தும் போதே, அவர் எச்சரிக்கையாக இருக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்துகிறோம். இலங்கை அரசைத் தட்டிக் கொடுத்து, ஈழத் தமிழர் பிரச்னையை இரு தரப்பினருக்கும் கௌரவமான முறையில் தீர்த்து வைக்க முயல வேண்டும்தான். ஆனால் அதே சமயம் மத்தியஸ்தம் செய்து வைக்க முன்வந்துள்ள இந்தியாவை ஏதோ கிள்ளுக் கீரையாகக் கருதி, ஏமாற்றிவிடலாம் என்று மனப்பால் குடிக்கக் கூடாது என்பதை இலங்கை அரசு புரிந்து கொள்ளுமாறும் செய்ய வேண்டும். போர் நிறுத்த உடன்பாட்டை இலங்கை அரசு முறித்தால் அது ஈழத் தமிழரை மட்டுமல்ல, இந்தியாவையும் அவமதித்ததாகும் என்பதை ஜெயவர்த்தன இன்னமும் உணராதிருந்தால் சொல்லி வைப்பது நல்லது.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்.



“என் செல்லப்பேத்திக்கு என் பழங்கதைகளைக் கேட்பதில் அலாதி உற்சாகம்! எனக்கு 12 வயதிலேயே கல்யாண வைபோகம் நடந்த கதையைச் சொன்னால் அவளுக்கு கொள்ளமாட்டாத சிரிப்பு!

எனக்கு கல்யாணச் சீராகக் கிடைத்த எவர்சில்வர் பாத்திரங்களைப் பற்றியும் ஆவலாகக் கேட்பாள். நாற்பது வருடங்களாக இன்றும் நான் சமைத்துவரும் பாத்திரங்களாயிற்றே!

இப்போதெல்லாம் அந்த மாதிரியான 'கிண்'ணென்ற பாத்திரங்கள் கிடைப்பதில்லை என்றே நினைத்திருந்தேன் – சேலம் எவர்சில்வர் பாத்திரங்களைப் பார்க்கும் வரை. எனக்கா தெரியாது, எது நல்ல பாத்திரம் என்று!

அந்த காலத்துப் பாத்திரங்களைப்போலவே உயர்தரமானவை. கரும்புள்ளிகளோ, கறையோ பிடிக்காது. வருடக்கணக்கில் உழைத்தாலும் பளபளப்பு போகாது.

நான் இனி பழங்கதை பேசினால் அதில் புது கதாபாத்திரங்களும் இருக்கும். அவைதான் சேலம் எவர்சில்வரில் செய்த பாத்திரங்கள்!”

சேலம் எவர்சில்வரில் தயாரிக்கப்பட்ட பாத்திரங்கள் எல்லா பிரபலமான பாத்திரக்கடைகளிலும் கிடைக்கும்.

சேலம் எவர்சில்வர்.
நம்பிக்கைக்குப் பாத்திரமான பாத்திரங்கள்.

சேலம் உருக்காலை

Sista's.SSP.384-85 TM F

ஜெயலலிதா அடிக்கல் நாட்டிய இந்திரா நினைவாலயம்

இந்திரா காந்திக்கு ஒரு பெரிய நினைவாலயம் கட்டப்பட்டு வருகிறது. எங்கே? ஆந்திரப்பிரதேசத்திலுள்ள ராஜமுந்திரியில்.

இதற்கான பணியில் ஈடுபட்டிருப்பவர் ராமலிங்க சித்தாந்தி என்கிற சுவாமிஜி. இதற்கென அமைக்கப்பட்டுள்ள குழுவில் பல எம். பி.க்கள், மத்திய மந்திரி ஒருவர், லோக்சபை சபாநாயகர், என்று பல பெரிய கைகள். சென்ற டிஸம்பரில் நினைவாலயப் பணிகள் ஆரம்பமாயின.

நினைவாலயத்துக்கு அடிக்கல் நாட்டியவர் நம்ம ஊர் ஜெயலலிதா! அடிக்கல் நாட்டும் பூஜையின் போது எடுத்த படம்தான் முன்னால் பார்த்தது. இவர், ராமலிங்க சித்தாந்தி சுவாமிஜிக்குமிகவும்வேண்டப்பட்டவராம்!

நாலுகால் மண்டபம். நடுவே பெரிய பூமி உருண்டை. உருண்டையை நோக்கிப் பாயும் சிங்கங்கள். உருண்டை மேல், ஆறு அடிக்கு இந்திராவின் வெண்கலச் சிலை. (கவனிக்க: இந்திராவின் நிஜ உயரமே 5 அடி 2 அங். தான்) சுவரில் மக்களுக்காக உயிர்த் தியாகம் செய்த மார்டின் லூதர் கிங், லிங்கன், ஜான்ஸி ராணி போன்றோர் உருவங்கள். மண்டபத்தைச் சுற்றி நந்தவனம். இப்படித் தான் அமையப் போகிறது நினைவாலயம். முழுவதும் கட்டி முடிக்க ஆறு லட்சம் ரூபாய் செலவாகும். பனிச்சென்று ஒளிர, ஒரு லட்சம் ரூபாய் மதிப்புக்குப்பிரத்தியேக பெயிண்ட் பயன்படுத்தப்படவிருக்கிறது. சிலைக்குப் பக்கத்தில் இரவு பகலாய்த் தீபம் ஒளிரும்.

இந்திரா மறைந்த தினமான அக்டோபர் 31ம் தேதி சிலை திறுவப்பட்டுவிடும். திறுவப் போகிறவர் ராஜேந்திர குமாரி வாஜ்பாய். தவிர துவக்க விழாவுக்கு அன்னை தெரஸா, தலாய் லாமா, ராஜீவ் — இவர்களில் யாரை யாவது ஒருவரைக் கூப்பிடப் போகிறாராம், சுவாமிஜி.

இந்திரா காந்தி சிலையை உருவாக்கி வருகிறவர் சென்னையைச் சேர்ந்த பிரபல சிற்பியான மணி நாகப்பா. இவருடைய தேனாம் பேட்டை சிற்பக் கூடத்துக்குப் போனபோது, வலது கையைத் தூக்கி அசைத்துக் கொண்டும், இடது கையில் மலர்க் கொத்துக்களை வைத்துக் கொண்டும் கம்பீரமாய் நின்று கொண்டிருந்தார் பிளாஸ்டர் ஆஃப்பாரிஸ் இந்திரா காந்தி. களி மண்ணில் செய்யப்பட்ட மாடலின் அடுத்த ஸ்டேஜ் இது. இதைக் கொண்டு, வெண்கலச் சிலை வடிக்கப் போகிறாராம் மணி நாகப்பா.

இந்திரா நினைவாலயப் பணியை முன்னின்று முடித்து வைக்கும் பொறுப்பேற்றிருப்பவர் ராமலிங்க சித்தாந்தி. இவரை சுவாமிஜி என்று ஒப்புக் கொள்வதே பலருக்குக் கஷ்டமாயிருக்கும். ''ஜாலியாய் வாழ்க்கையை' என்ஜாய் பண்ணுகிறார்; பாக்கெட் பாக்கெட்டாய் ஃபாரின் சிகரெட் பிடிக்கிறார். தண்ணி கூட அடிப்பார். இரண்டு கார்களையும் நாலு மனைவிகளையும் வைத்துக் கொண்டிருக்கிறார்'' என்றெல்லாம் இவரைப் பற்றி எழுதியிருந்தது ''ஒரு'' பத்திரிகை.

இதனால் ஆச்சர்யமடைந்து சுவாமிஜியைச் சந்தித்துப் பேச விரும்பினோம். மீண்டும்

—குருஜி கட்டுகிறார்!—





● மணி நாகப்பா.

ஆச்சரியம். 'சுவாமிஜி' வெள்ளை பாண்ட், வெள்ளைச் சட்டையில் இருந்தார். அடர்ந்த சடைமுடி. கூடவே ஒரு அறுபது வயது மனிதர். சிஷ்யராம்!

ராமலிங்க சித்தாந்தி, கேள்விகளுக்குத் தாமே நேரடியாய்ப் பதில் சொல்லாமல், தம் சிஷ்யரைப் பார்க்க, சிஷ்யர்தான் பதில் சொன்னார்:

நிருபர்: குருஜியைப் பற்றி.....

சிஷ்யர்: நாற்பத்தாறு வயசாகிற குருஜி தம் பதினோராவது வயதிலேயே தெய்வ சக்தி பெற்றவர். அனைத்து சித்திகளும், வேதங்களும் அறிந்தவர். இருபத்து நான்கு மணி நேரமும் தம் உள் மனத்தைத் தியானத்தில் வைத்திருப்பவர். ஈ.எஸ்.பி.(ESP) சக்தியும் உண்டு. (ரத்தினச் சுருக்கமாக விளக்குவது என்றால் ஈ.எஸ்.பி. என்பது புலன்களுக்கு அப்பாற்பட்ட அளவில் பல்வேறு விஷயங்களை அறிந்து கொள்கிற ஆற்றல்.)

நிருபர்: குருஜிக்கு எப்படி இந்திரா காந்திக்கு நினைவாலயம் கட்ட வேண்டுமென்று தோன்றியது?

குருஜி குறுக்கிட்டு நமக்கு நேரடியாக அளித்த 'தலுங்கிஷ்' (தமிழ், தெலுங்கு, இங்கிலீஷ் கலந்த) பதில்: இந்திரா காந்தி ஒரு கர்மயோகி. இந்த நாட்டு மக்களுக்காக வாழ்ந்து, இந்த நாட்டுக்காக உயிர்த் தியாகம் செய்தவர். எனக்கு அவருடன் சுமார் பன்னிரண்டு வருஷப் பழக்கம். அதனால்தான் நினைவாலயம் கட்டத் திட்டமிட்டேன். முழுக்க முழுக்க நன்கொடையால்தான் இது கட்டப்படுகிறது.

இந்திரா காந்தி மட்டுமல்ல, ஜெயில் ஸிங், அஞ்சையா, நரசிம்மராவ் முதலிய பலர் இவரது ராஜமுந்திரி ஆசிரமத்துக்கு வந்து போயிருக்கிறார்களாம். ஜெயில் ஸிங் உள்துறை அமைச்சராக இருக்கும்போதே, "நீங்கள் ஜனாதிபதியாக வரப்போகிறீர்கள்" என்று தாம் கூறியதாக குருஜி சொல்கிறார்.

நிருபர்: காவியுடை அணியாமல் பாண்ட், சட்டையில் இருப்பது ஏன்?

சிஷ்யர்: குருஜி காவியுடை அவசியமில்லை என்று கருதுகிறார். காவியுடையணிந்தால் மக்களிடமிருந்து விலகிவிட்டது போன்ற ஒரு உணர்வு ஏற்பட்டுவிடும். மக்களில் ஒருவராக வாழ்ந்து தெய்வீகப் பணி புரிவதுதான் குருஜியின் நோக்கம். ராஜமுந்திரியில் உள்ள ஆசிரமத்தில் ஏழைகளுக்கு உணவளிக்கிறோம்; உடைகள் தருகிறோம்; கஷ்டப்படுபவர்களுக்கு உதவி செய்கிறோம்.



● நினைவாலயத் தோற்றம்.

நிருபர்: சில சுவாமிகள் போல எதையாவது வரவழைத்துப் பக்தர்களுக்கு அளிப்பதுண்டா?

சிஷ்யர்: அது மாதிரி சித்துக் காரியங்களெல்லாம் எங்கள் குருஜிக்கு அற்ப விஷயங்கள். குருஜி அவற்றையெல்லாம் கடந்தவர்.

நிருபர்: குருஜி குடும்ப வாழ்க்கையில் ஈடுபடுவதாய்க் கேள்விப்பட்டோமே!

சிஷ்யர்: ஆமாம்; அதில் என்ன தவறு? மானிடனாய் வாழ்க்கை நடத்திக் கொண்டு தெய்வீகக் காரியங்கள் செய்பவர் எங்கள் குருஜி.

நிருபர்: குருஜிக்கு ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிகள்..... இருப்பதாய்.....

சிஷ்யர்: ஆமாம்; உண்மைதான்.

நிருபர்: மொத்தம் நான்கு என்று.....

சிஷ்யர்: நிஜம்தான். சுவாமிஜி, அவர்கள் பால் இச்சை கொள்ளவில்லை. அவர்களெல்லாம் வெவ்வேறு தருணங்களில் குருஜியை வந்தடைந்தனர். குருஜி அவர்களை ஏற்றுக் கொண்டார். அவ்வளவுதான்.

நிருபர்: குழந்தைகள் உண்டா? என்று கேட்டால் நீங்கள் தப்பாய் எடுத்துக்கொள்ள மாட்டீர்களே!

சிஷ்யர்: இல்லை. குருஜிக்கு மொத்தம் ஆறு குழந்தைகள்.

நிருபர்: குருஜி வெளிநாட்டு சிகரெட்தான் பிடிப்பார், மது அருந்துவார் என்றெல்லாம் கேள்விப்பட்டோமே!

சிஷ்யர்: அதெல்லாம் பொய். குருஜி பொற்கொல்லர் ஜாதியைச் சேர்ந்தவர். இவரது தொண்டு, புகழ் இவை கண்டு பொறாமைப்படுபவர்கள் கிளப்பி விடும் புரளிகள் இவை.

நிருபர்: குருஜியை ஃபோட்டோ எடுத்துக் கொள்ளலாமா?

குருஜி சிரித்துவிட்டு 'ஓ.கே.' சொல்கிறார். ஃபோட்டோ எடுக்கும்போது சிஷ்யர், "குருஜிக்கு இஷ்டமில்லாவிட்டால் ஃபோட்டோ எடுக்கக் கூடாது. மீறி எடுத்தால் ஃபிலிமில் ஒன்றுமே வராது. எல்லாம் கருப்பாய் இருக்கும்!" என்றார்.

நாங்கள் எடுத்த ஃபோட்டோ நன்றாகவே வந்திருக்கிறது!

எஸ். சந்திரமௌலி.

குருஜி போட்டோ: **யோகா.**



அதனால்தான் ரஜனி கோத்ரெஜ் வாஷிங் தயாரிப்புகளையே உபயோகிக்கிறார்.



"இக்காலத்தில் வாஷிங் பொருள்களின் விலை எக்கச்சக்கமாக ஏறிக் கிடக்கின்றன. எங்களைப் போன்ற நடுத்தர குடும்பத்து தாய்மார்களுக்கு மிகவும் சிரமம்தான்.

இருந்தாலும், எங்களுடைய குடும்பத்திற்கு எதுவாயினும் மிகச்சிறந்த பொருள்தான் வாங்க வேண்டும் என்பது என் எண்ணம். நான் பார்த்து பார்த்து வாங்குகிறேன். ஆகவே, நான் செலவு பண்ணும் ஒவ்வொரு பைசாவும் நல்ல வருவாய் செய்து விடுகிறேன்.

வாஷிங் பொருள்கள் வாங்கும்போது, நான் கோத்ரெஜ் தயாரிப்புகளாகிய கீ டிடெர்ஜண்ட் பார், ட்ரைலோ டிடெர்ஜண்ட் கட்டி, பிஸ் க்ளீனிங் பவுடர் போன்றவைகளைத்தான் வாங்குவேன். ஈஸி லிக்விட் டிடெர்ஜண்ட் மூலம் டிரைக்ளீனிங் செலவு மிகவும் மிச்சமாகிறது. அவற்றின் விலை நியாயமாகவும், உயர்ந்த தரம் வாய்ந்ததாகவும் இருக்கின்றன.

எனக்குப் பணத்தை விரயமாக்கப் பிடிப்பதில்லை. யார்தான் அப்படி செய்வார்கள்!"

உண்மையான மதிப்பைத்தரும் தயாரிப்புகளை **கோத்ரெஜ்** - வழங்குகிறது ரஜனியே ஒப்புக்கொள்கிறார்.

Mudra:B:G: 2631

மாத இதழின் முன்னாள் ஆசிரியர்

அச்சகத்தில் பணிபுரியும் அச்சுக் கோப்பாளர் ஒருவர் சொல்லாமல் கொள்ளாமல் ஓடிவிட்ட சமயத்தில் அவருடைய மனைவியும் கைக்குழந்தையும் சென்னைக்கு வருவதாகத் தந்தி வருகிறது. அச்சக உரிமையாளர் அந்தத் தந்தியைப் படித்துவிட்டுத் தொழிலாளியின் மனைவியையும், குழந்தையையும் தன் வீட்டிற்கே வரவழைத்து, தங்கச் செய்து, ஓடிப் போனவரையும் தேடிப் பிடித்து அவர் குடும்பத்துடன் சேர்த்து வைத்தார்.

உயர் குணம் படைத்த இந்த மனிதர் 'முஸ்லிம் முரசு' மாத இதழின் நிறுவனரும் முன்னாள் ஆசிரியருமான எஸ். அப்துர் ரஹீம் ஆவார்.

—ஜி. அஹ்மது, சென்னை—1.

முன்பின் தெரியாத மைக்கேல்

சென்னையிலிருந்து ஜலந்தர் போய்க் கொண்டிருந்தோம். பஞ்சாபில் வெள்ளம் காரணமாக பஸ் போக்குவரத்து ஸ்தம்பித்து விட்டதால் ரயிலில் ஒரே கூட்டம். ஜலந்தர் ஸ்டேஷனில் ஜன சமுத்திரம் அலை மோதியது. எப்படியோ இறங்கிவிட்டோம். ஆனால் எங்கள் சாமான்கள் பலவற்றை இறக்குவதற்கு முன்பே ரயில் புறப்பட்டுவிட்டது. சக பிரயாணி மைக்கேல் தன் அமிர்தசரஸ் விலாசத்தைக் கொடுத்து, தான் சாமான்களைக் கொண்டு செல்வதாகவும், அந்த விலாசத்தில் வந்து அவற்றைப் பெற்றுக் கொள்ளுமாறும் கூறினார். மறுநாள் அமிர்தசரஸ் சென்று மைக்கேலிடம் பத்திரமாக இருந்த சாமான்களைப் பெற்றுக் கொண்டோம்.

— அகிலா ராமன், புது டெல்லி—19.

மறக்க முடியாத மனிதர்





தேசபக்தர், தியாகி

எங்கள் கிராமத்தைச் சேர்ந்த நீலமேகம் என்பவரை என்னால் மறக்கவே முடியாது. சுதந்திரப் போராட்ட வீரரான இவர் எமர்ஜென்ஸியின்போது தேசியத் தலைவர்களைச் சிறை வைத்து, வதைத்த அரசிடமிருந்து பென்ஷனோ, பட்டயமோ பெறுவதில்லை என்ற வைராக்கியத்துடன் கடைசி வரை வாழ்ந்தார். சமீபத்தில் இனக் கலவரம் ஒன்றைத் தடுக்க முற்பட்ட இவர் அநியாயமாகப் படுகொலை செய்யப்பட்டபோது சொல்ல முடியாத வேதனை ஏற்பட்டது.

— கே. ராசசேகரன், மதுரை—7.

தன்னலமற்ற தலைமையாசிரியர்

எங்கள் பள்ளிக்கும் ஒரு கல்லூரிக்கும் இடையே மோதல். கல்லூரி மாணவர்கள் பள்ளியையும், பள்ளி மாணவர்களையும் தாக்குவதற்குத் திரண்டு வந்தனர். பள்ளி முதல்வர் தைரியமாக அவர்களை வழி மறித்து, "முதலில் என்னைக் கொன்றுவிட்டு என் பள்ளியையும், மாணவர்களையும் தாக்குங்கள்" என்று தடை செய்தார். காட்டுக் கும்பல் அவர் மீது கல்லெறிந்தது. அவர் காயமடைந்ததைப் பார்த்ததும் பயந்து ஓடி விட்டது. இந்தத் தன்னலமற்ற தலைமையாசிரியரே, நான் மறக்க முடியாத மனிதர்.

— டி. மணி, சென்னை—84.

என்னை உருவாக்கிய பேராசிரியர்

மேல்படிப்புக்கு அமெரிக்கா செல்ல என் பெற்றோர்கள் தடை விதித்தனர். பையன் கெட்டுப் போய்விடுவான் என்ற கவலைதான் காரணம்! அவர்களுடைய பயத்தைப் போக்கி, எனக்கு ஊக்கம் அளித்ததோடு, ஸ்காலர்ஷிப்புக்கும் ஏற்பாடு செய்து, டிக்கெட்டும் வாங்கிக் கொடுத்து என்னை இன்றைய நிலைக்கு உயர்த்தியவர் அண்ணாமலை நகர் பேராசிரியர் ரங்கராஜன் ஆவார். வாழ்க்கைத் துணைவியைத் தேர்ந்தெடுத்ததோடு, என்னைத் தாயகம் திரும்பி வேலை ஏற்றுக் கொள்ள ஊக்குவித்த இவரை எப்படி மறக்கமுடியும்?

— என். சத்தியமூர்த்தி, கான்பூர்.


சீர்திருத்தவாதி சேகர்

சேகர் ஒரு பெரிய தொழிலதிபரின் மகன். ஒருநாள் வானொலி விநாடி வினா நிகழ்ச்சியில் கேட்கப்பட்ட கேள்விக்குத் தன் வீட்டுச் சமையற்காரியின் மகள் சரியான விடை கூறியதைக் கேட்டு ஆச்சரியப்பட்டான். அவள் அறிவையும், ஆர்வத்தையும்பாராட்டி அவள் பி. எஸ் ஸி படிக்க உதவினான். அவளுக்கு வங்கியில் வேலை கிடைத்தது. கல்யாணமும் ஆயிற்று. ஆனால் கணவன் கொடுமைப் படுத்தியதால் அவள் தற்கொலைக்கு முனைந்து விட்டாள். தக்க நேரத்தில் அதைக் கண்டு பிடித்து, அவளை ஆஸ்பத்திரியில் சேர்த்து, காப்பாற்றி, பலத்த எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் அவளுக்கு விவாகரத்து வாங்கித் தந்து, அவளையே மணந்து கொண்டான் பண்பாளன் சேகர்.

— நீரஜா மூர்த்தி, பெங்களூர்—19.







அன்பே உருவான சேட்ஜி

1965 ஆம் ஆண்டு கல்லூரி மாணவனாக இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டேன். முன்னறிவிப்பின்றிக் கல்லூரிகளும், இலவச உணவு விடுதியும் மூடப்பட்டன. கையில் காசில்லாமல், நொந்து போய்த் தஞ்சை ரயில் நிலையத்தில் உட்கார்ந்திருந்தேன். என் அருகே வந்து உட்கார்ந்தார் ஒரு சேட். அரைகுறை ஆங்கிலத்தில் விசாரித்து என் நிலையை அறிந்து கொண்டார். நான் இந்தி எதிர்ப்பாளன் என்று தெரிந்தும் என்னை என் ஊர் வரை அழைத்துச் சென்று விட்டு விட்டுத் தன் வேலையைக் கவனிக்கப் போனார். என்றுமே அவரை மறக்க முடியாது.

— மு. கண்ணுசாமி, அப்பநாயகன்பட்டி.

என் கஷ்டத்தைத் 'தீர்த்தராமன்'

மனைவி பிரசவத்திற்காக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தாள். எனக்கோ வேலை கிடையாது; கையில் காசும் கிடையாது. என் நிலைமையைப் புரிந்து கொண்ட தற்போதைய பாலக்கோடு சட்ட மன்ற உறுப்பினரான பி. தீர்த்தராமன் எனக்குக் கை கொடுத்தார். தன் டிராக்டரை எடுத்துச் சென்று பத்து மைல் தூரத்திலிருந்த ஒருவரது நிலத்தை உழுது, கூலி பெற்று அதை அப்படியே என்னிடம் கொண்டு வந்து கொடுத்தார். அப்போது என்னுள்ளே பொங்கி

யெழுந்த நன்றி உணர்வால் கண்கள் பனித்து விட்டன.

— கே. சுந்தரமூர்த்தி, வள்ளூர் (தருமபுரி)

எஜமான விசுவாசி

ஊருக்குப் புறப்படும் அவசரத்தில் வீட்டின் வெளிப் பூட்டைச் சரியாகப் பூட்டாமல் போய்விட்டோம். மூன்று நாட்கள் கழித்து வீடு திரும்பும்வரை வாசல்படியிலேயே காவலாக உட்கார்ந்திருந்தாள் எங்கள் வேலைக்காரி லக்ஷ்மி. சரியான உணவு கூட இல்லாமல் வீட்டைக் காத்து, எங்களிடம் பொறுப்புடன் ஒப்புவித்த அவளுடைய விசுவாசத்தை நினைத்து, நினைத்து மகிழ்கிறோம்.

— தனலக்ஷ்மி கருப்பையா, திண்டுக்கல்.

போர்முனை நண்பர்

செல்லப்பன் நாயர் என்பவர் என்னுடன் இராணுவத்தில் பணிபுரிந்தார். 1971 இல் பங்களாதேஷ் போரில் நான் முன்னணி ஆப்ஸர்வேஷன் போஸ்டில் வயர்லெஸ் ஆபரேடராகவும் அவர் கமாண்ட் போஸ்டில் ஆப்பரேட்டராகவும் இருந்தோம். அவர் ஹிந்தியிலும், ஆங்கிலத்திலும் செய்திகள் அனுப்பும்போது இடைஇடையே தமிழில் மெல்லிய குரலில் என்னை விசாரிப்பார். ''சாப்பிட்டாயா? கவனமாக இரு'' என்று. ஒரு நாள் முழுவதும் அவர் குரலைக் கேட்காமல் தவித்துப் போனேன். பாகிஸ்தான் குண்டுக்கு அவர் பலியானது தெரிந்ததும் என் இதயம் உருகிவிட்டது.

— எஸ். ராமசாமி, கடலூர்.

ப்ளோப்ளாஸ்ட்வழங்கும்வி.ஐ.பி. சூட்கேஸைக் குலுக்கல் முறையில் பரிசாகப் பெறும் அதிர்ஷ்டசாலி:

என். சத்தியமூர்த்தி,
ரசாயனப் பிரிவு,
ஐ. ஐ. டி., கான்பூர்—208016.





அருள்வாக்கு

'பெரிய இடத்துப் பிள்ளை என்பதாலேயே நாம் நமக்கென்று ஒரு யோக்யதையும் ஸம்பாதித்துக் கொள்ள வேண்டியதில்லை. நம்முடைய பெரிய ஸம்பந்தத்தைக் காட்டியே ஊரை ஆட்டி வைத்துக் கொண்டிருக்கலாம்' என்று இருப்பவர்கள் உண்டு. அநேகம் பெரிய மனுஷ்யரகத்துப் பசங்கள் தறுதலைகளாகவோ, அசட்டு பிசட்டென்றோ இருப்பதைப் பார்க்கலாம்.

ஆனால் இந்தப் பெரிய இடங்களுக்கெல்லாம் உச்சியிலுள்ள மஹா பெரிய இடத்துப் பிள்ளை, 'உச்சிப் பிள்ளையார்' என்கிறோமே, அவர் எப்படியிருக்கிறார்? தேஹ பலமா, புத்தி கூர்மையா, கார்ய சக்தியா, அன்புள்ளமா எல்லாவற்றிலும் தமக்கு மேல் யாருமில்லை என்று இருக்கிறார். பெரிய இடத்துப் பிள்ளை என்பதால் மாத்திரம் அவருக்குப் பெருமையில்லை. அவருக்காகவே அவருக்குப் பெருமை என்பது, ''பிள்ளை''க்கு ''யார்'' போட்டு அவரைப் பிள்ளையார் என்று மிகவும் மரியாதையாகச் சொல்வதிலிருந்தே தெரியும்.

பொதுவாகத் தாய், தகப்பன், பாட்டன், பாட்டி, தமையன், தமக்கை ஆகிய பெரியவர்களைத்தான் மரியாதையாகத் தாயார், தகப்பனார், பாட்டனார், பாட்டியார், தமையனார், தமக்கையார் என்றெல்லாம் சொல்வது வழக்கம். பிள்ளைக்கு அப்படி மரியாதை விகுதி சேர்த்துச் சொல்கிற பழக்கம் எங்கேயும் கிடையாது. இதற்கு மாறுதலாக இவர் ஒருவர் விஷயத்தில் மட்டும் ''பிள்ளை'' என்னாமல் ''பிள்ளையார்'' என்றே சொல்கிறோம்.

—ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

இனிமேல் நாங்கள் செய்யக்கூடியது ஒன்றுமில்லை

போன வாரம் டாக்டர் சேஷாத்ரி "யூ ஆர் வெரி ..பைன்" என்று ரவியிடம் சொல்லிவிட்டு ராதாவிடம் உதட்டைப் பிதுக்கி "இனிமேல் நாங்கள் செய்யக் கூடியது ஒன்றுமில்லை. ஏதாவது அற்புதம் — மிராகிள் — நடந்தால் தான் உண்டு... கடவுள் மீது நம்பிக்கை உண்டா?" என்று கேட்டாரே...

டாக்டருக்குத் தெரியும்.

நெருங்கிய நண்பன் ராமுவிற்குத் தெரியும்.

வளர்ந்துவிட்டிருந்த பையனுக்குத் தெரியும். மைத்துனிக்குத் தெரியும்.

ராதாவிற்குத் தெரியும்.

ரவிக்குத் தெரியுமா என்றுதான் தெரியாது.

மூன்று மாதமென்றால் சரியாகத்தொண்ணூறு நாளில்லை. பத்து நாள் குறைவாக இருக்கலாம். பத்து நாள் அதிகமாக இருக்கலாம். டாக்டருக்குத் தெரியாது. அவர் கடவுள் இல்லை.

வேறு வழியேயில்லையா?

என்று வயிற்று வலி என்று சொல்லி வயிற்று வலிதானே என்று அலட்சியமாக இருந்து, அது அடிக்கடி வந்து, வெறும் வலியாக இராமல் பிராணனே போகும் வலியாக வலித்தபோது டாக்டர் மாத்திரையை மட்டுமே கொடுத்து வந்தவர், அதை நிறுத்தி சென்னைக்கு அதுவும் டாக்டர் சேஷாத்ரியிடம் போங்கள் என்று சொல்லி, அவரிடம் போகும்போது வாசலில் கொட்டை கொட்டையாக, "கான்ஸர் க்ளினிக்" என்ற போர்டைப் பார்த்த தினத்திலிருந்து....

வேறு வழியே இல்லையா?

போனவாரம் டாக்டர் சேஷாத்ரி, "யூ ஆர் வெரி ஃபைன்" என்று ரவியிடம் சொல்லிவிட்டு ராதாவிடம் உதட்டைப் பிதுக்கி, "இனிமேல் நாங்கள் செய்யக் கூடியது ஒன்றுமில்லை. ஏதாவது அற்புதம், மிராகிள், நடந்தால்தான் உண்டு.... கடவுள் மீது நம்பிக்கை உண்டா?" என்று கேட்டாரே.

அந்த அற்புதம் நிகழுமா? அந்த அற்புதத்தை நிகழ்த்த யாரிடம் போக?

அற்புதம் நிகழ்த்திக் கொண்டிருக்கும் சித்தர்களே, கடவுள் ஸ்தானத்தை எட்டி விட்ட மகான்களே "ஃப்ராட்" என்று இத்தனை நாள் ஒதுக்கிவிட்டு இன்று அவர்களிடம் அடைக்கலம் புகலாமா? பலன் உண்டா? பகுத்தறிவுக்கு ஒத்து வருமா...?

நம்ப முடியவில்லையே....

துருதுரு என்று டென்னிஸ் ஆடிய உடம்பா இது?

அவருக்குத் தெரியுமா?

வலியெடுக்கும்போது 'ஸெடேஷன்' மயக்கம். மயக்கம் போனதும் வலி. மறுபடி 'ஸெடேஷன்.'

என்ன புரிகிறது அவருக்கு? ஏதுவாவது புரிகிறதா?

* * * * *

"ரொம்ப வயிற்றை வலிக்கிறதே ராதா" என்றான் ஒருநாள். மெடிகல் காலேஜில் மூன்றாம் வருடம் படித்துக் கொண்டிருந்த அடுத்த வீட்டுப் பிள்ளையை கேட்டாள். இரண்டு "ஜெலுஸில்" கொடுக்கலாமா என்றாள். அப்பொழுதே அவன் சொன்னான்.

"இந்தமாதிரிநீங்களா ஏதாவதுமருந்தை நினைச்ச மாதிரி குடுக்கிறது சரியேயில்லை. எனக்குத் தெரிஞ்சு ஆறு மாசமா ரவி மாமாவிற்கு இந்த கம்ப்ளெண்ட்.... பார்த்தாலே தெரியறது.... வெயிட் குறைஞ்சிருக்கு. அனீமிக்கா இருக்கறது நன்னாத் தெரியறது. மூஞ்சி சரியாயில்லை.... ஸ்பெஷ

லிஸ்டா போய் கன்ஸல்ட் பண்ணுங்கோ: பேசாத இருக்காதீங்கோ. ப்ளீஸ் டேக் இட் ஸீரியஸ்லி....''

டாக்டரிடம் போனார்கள், சில வாரங்கள்.

அவர் கடைசியில் டாக்டர் சேஷாத்ரியிடம் போங்கள் என்றார்.

சென்னைக்கு வந்தார்கள். டாக்டர் சேஷாத்ரி பேரியம் மீல் எக்ஸ் ரே எடுத்தார். இன்னும் என்னென்னவோ செய்தார். அடுத்த நாள் வரச் சொன்னார். ரவிக்கு அசதி. ரா்தா மட்டும் போனாள்.


ரத்ன சுருக்கமாகச் சொன்னார் சேஷாத்ரி.

''ஒரு வருடம் பிந்தி வந்திருக்கிறீர்களே அம்மா, பார்க்கிறேன். நோ க்யாரன்டீஸ்.''

''அப்படீன்னா?''

''அவரை சந்தோஷமாக வைத்துக் கொள்ளுங்கள். உற்சாகமாக இருங்கள்.

பி.சு.கைலாசம்



பார்த்து கேட்டு ரஸிக்கப் பல விஷயங்கள் இருக்கு. ஒண்ணு விடாமல் ஆஸ்திக சமாஜம் போய் பாகவதம் கேட்கச் சொல்லுங்கள்."

"............"

"ஒரு ஆபரேஷன் செய்ய வேண்டும்."

"வேற ஒண்ணும்....."

"நோ ஆப்ஷன்ஸ்."

* * * * *

ரவியிடம் சொன்னபோது பெரிதாக ஒன்றும் பயம் காட்டவில்லை. இந்த வலி நின்றால் போதும் என்ற ஒரே குறிக்கோள் தான் அவனுக்கு. எதையும் செய்யத் தயாராக இருந்தான்.

சிறு குடல் இன்னும் சிறிதாக ஆக்கப்பட்டது. காரசாரமாக இட்லி—சட்னியும், வெங்காய அடை மிளகாய்த் தொக்கு உள்பட பல பொருள்கள் — பிடித்தமானவை — ஒதுக்கப்பட்டன.

ஆபீஸிலிருந்து நண்பர்கள் சோக முகத்தோடு வந்து பார்த்துவிட்டுப் போனார்கள்.

சுற்றுப் பிரயாணம் போவது கஷ்டம் என்று ஆபீஸில் ஒரு ஸ்தானம். நீழே இறக்கி விடப்பட்டு. பாவம்! டைனமிக் மேன். அன்ஃப்பார்ச்சுனேட் — நாற்காலியிலேயே உட்கார்ந்திருந் தால் போதுமான ஒரு வேலையில் அமர்த்தப்பட்டான்.

ஆப்பரேஷன் செய்தாகிவிட்டது. ஜாக்கிரதையாக இருக்கிறார். ஆபீஸுக்குப் போகிறார்.

ஆபரேஷனுக்குப் பின் ஆறு மாதங்கள் ஓடிவிட்டன. சேஷாத்ரியிடம் மறு 'செக்கப்' போனபோது, "ஐ ஆம் நாட் ஹாப்பி" என்றார் டாக்டர் சேஷாத்ரி.

"ஸார்?"

"அம்மா நீ தைரியமா இருக்கணும். கான்ஸர் கண்ட்ரோல் ஆகவில்லை. மறுபடியும்.."

"ஆபரேஷனா?"

"உடனே இல்லை. ஆனால்...."

"..............."

ரவி என்ன செய்து வைத்திருக்கிறான்? ஒன்றுமே தெரியாது.

அவன் பண விவகாரம் ஒன்றுமே புரியாது. சொன்னதேயில்லை. அவ்வப்போது எதிலோ கையெழுத்துவாங்கிக்கொள்வான். அவன் பேரில் ஒரு சேவிங்க்ஸ் பாங்க் அக்கவுண்ட் உண்டு. சொல்ப தொகை. ஒரு சீட்டுக் கட்ட ஆரம்பித்ததாக நினைவு. இன்ஷ்யூரன்ஸ் எத்தனை? தெரியாது. பாலிஸி எங்கே இருக்கிறது? தெரியாது. எப்படி பணத்தைக் கேட்பது? பார்த்தசாரதி மாமாவிடம்தான் போக வேண்டும். பாலிஸி எங்கேயிருக்கிறது என்று தெரியாமல் மாமாதான் என்ன செய்வார்?

பாங்க் வால்ட்டில் இருக்குமோ? ..... தான் ரவி இரண்டு பேரும் திறக்கலாம்.... (அதில் அது இல்லை என்று அப்போது தெரியாது) ஆபீஸிலிருந்து லட்ச ரூபாயாவது வருமா?

நான் என்ன செய்ய?

கண்ணில் நீர் வந்தது.

* * * * *

இரண்டாம் முறை வயிற்றை கீறி, மூடி ரவி வீட்டிற்கு வந்துவிட்டான். பையன் அமெரிக்கா பயணம் கான்ஸல். பெண் மலர மலர விழித்துக் கொண்டு அவள் போக்கில் உற்சாகம் குறையாமல் காலேஜ் போய்க் கொண்டு இருந்தாள்.

வீட்டில் அமைதி. பையன் எங்கேயோ போயிருந்தான். விளக்கை அமர்த்திவிட்டு லேசாக ரவியின் அறைக் கதவை திறந்தாள்.

ரவி அசந்து தூங்கிக் கொண்டிருப்பான். ஸெடேஷன். விழித்துக் கொண்டிருந்தால் ஒரு ஹார்லிக்ஸ் கொடுக்கலாம். இன்றைக்காவது தென்பிருந்தால் இன்ஷ்யூரன்ஸ் பாலிஸியைப் பற்றி கேட்கலாமா? சே! எப்படி கேட்பது?

மெதுவாகக் கதவைத் திறந்தாள்.

படுக்கையின் பக்கத்தில் மங்கலாக விளக்கு எரிந்து கொண்டிருந்தது.

"வா" என்று தலையை ஆட்டினான் ரவி. நெற்றியில் வேர்த்திருந்தது.

பக்கத்தில் உட்கார்ந்து கொண்டாள்.

மெதுவாகக் கையையெடுத்து அவள் கையில் வைத்துப் பிசைந்தான். அழுத்தமே இல்லை. எலும்பு... தொட்டால் உடம்பு படபடக்குமே அது இல்லை.

"கிட்ட வா" — என்று முனகினான்...

உதட்டண்டை.... இல்லை... இல்லை... தப்பு— காதண்டை உதட்டைக் கொண்டு வந்தான்.

"ட்ராயர்ல ஒரு ஃபைல் இருக்கு... எடு..."

இந்தப் பேச்சு கூட அசத்திவிட்டது. உயரமாக வைத்திருந்த தலைகாணியில் சாய்ந்து கொண்டான்.

"நடுக்கடல்ல விமானம் போறப்ப ரிப்பேர் ஆனா என்ன செய்வே?"

"ஒண்ணும் செய்ய மாட்டேன்."

"ஏன்?"

"நான்தான் அந்த விமானத்துல போகலேயே!"

— கடுவை கோபால்சாமி.



PHILIPS

பிலிப்ஸ்

கேட்டீர்களா முற்றும் புதியது?

பிலிப்ஸ் டூ-இன்-ஒன்களின்
வெகு நேர்த்தியான ஒலி இன்பம்.
ஸ்டீரியோ மற்றும் மோனோ.
எழிலோங்கும் வடிவம்,
இவற்றின் விசாலமான அணி வகுப்பு.
கண்கவர் டிசைன், ஒலித்திறனிலும்
இயங்குவதிலும் சர்வதேசத்
தரத்தை வழங்குபவை.
இவற்றுக்கும் பின்பலமாக நாடெங்கும்
பரவலாக உள்ள ஸர்விஸ் வசதி.



D 8334 ரூ.3400/*-

D 8248 ரூ.3150/-*



AR 538 ரூ.2200/-*




AR 448 ரூ.1800/-*




AR 343 ரூ.1450/-*




AR 243 ரூ.1300/-*



AR 153 ரூ.1195/-*



AR 151 ரூ.1095/-*



AR 143 ரூ.1025/-*

நாங்கள் வழங்குபவை தேர்வுக்குச் சிறந்தவை.

*எக்ஸைஸ் வரி உள்பட. தல வரிகள் தனி. லைசென்ஸ் தேவை இல்லை.

பிலிப்ஸ் – ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக இந்திய வீடுதோறும் விளங்கும் நம்பகமான பெயர்

CLARION/B/P/127/203TM



கர்நாடக முதல்வர் பத்திரிகையாளர்களின் மனைவிமார்களுக்கு ஒரு விருந்து வைத்தார். அப்போது அவர்களைக் கேள்விகளும் கேட்கச் சொன்னார்.

ஒருவர் கேட்டது:

"தண்ணீர்க் குழாயில் இரவு நேரத்தில் விட்டால் மக்கள் கண்விழித்திருந்து பிடிக்க வேண்டியிருக்கும். அதனால் சிக்கனமாக செலவு செய்வார்கள் என்று எண்ணி இரவில் தண்ணீர் விடுகிறீர்களே? ஆனால், எல்லோரும் இரவில் குழாயைத் திறந்து வைத்துவிட்டுத் தூங்கி விடுகிறார்கள். அதனால் தண்ணீர் வீணாவது தெரியவில்லையா?"

இதற்கு எப்படிப் பதில் சொல்வது என்று தெரியாமல் ஹெக்டே விழித்தார்!

— ஆதாரம்: வீக்லி; தகவல்: சம்பத்குமாரி.

கனமான ஃபைல்.

ராதா திறந்தாள்.

முதல் பக்கம் ஒரு குறிப்பு இருந்தது...

ராதா படித்தாள்.

"உங்களுக்கெல்லாம் முன்னாலேயே எனக்குத் தெரியும்.. என் சிநேகிதன் சுந்தர்ராஜனுக்கு வந்ததே அதேதான் இது. அதிக பட்சம், இன்னும் ஆறு மாதம் எனக்கு. 60,000 ரூபாய்க்குத்தான் இன்ஷ்யூரன்ஸ். அதற்கு மேல் ப்ரீமியம் என்னால் கட்ட முடியவில்லை. பணம் வசூலிக்க என் ஆபீஸில் ஏஜெண்ட் இருக்கிறான், நாயக். அவனிடம் போ. பாலிஸியும் அவனிடம்தான் இருக்கிறது ஆபீஸிலிருந்து எண்பதாயிரம் வரலாம். ராகவன் அந்தச் சமயம் அவனே வருவான். இந்த வீடு. ஒரு டெட் வெயிட். விற்று விடவும். கோவிந்தசாமி நாயுடுவை உனக்குத் தெரியும். அவரிடம் போகவும். காபிடல் கெயின்ஸ் டாக்ஸ் போக ஒன்றரை லட்சம் தேறும். பார்த்தசாரதி மாமா அவுட்ஹவுஸில் இடம் தருவார். நான் சொல்லியிருக்கிறேன். சுமதிக்குப் பெரியவரனாகப் பார்த்துப் பண்ண வேண்டும் என்றெல்லாம் நினைத்திருந்தேன். நேரம் இல்லை. ஏதோ பார்த்து செய்... கல்யாணச் செலவு, வாடகை போக வட்டியில் உனக்குக் கிட்டத்தட்ட ஆயிரம் ரூபாய் மிஞ்சும்... ஐ ஆம் ஸோ ஸாரி. நான் எதிர்பார்க்கவில்லை... என்ன சொல்வது என்று தெரியவில்லை... உன் ஒருத்தி தேவைக்குப் போதுமா?... உன் குணத்திற்கு அக்காவிடமோ, அண்ணாவிடமோ அண்டி இருந்து வாழ ஒத்து வராது. பிள்ளை ராஜனைத்தான் நம்ப வேண்டும்... நான் போகப் போவதால் உன்னை நீ மாற்றிக் கொள்ள வேண்டும். என்னிடம் கிடைத்த சலுகையை எங்கும் எதிர்பார்க்காதே. ஐ ஆம் ஸோ ஸாரி... கொஞ்சம் அட்ஜஸ்ட் செய்து கொள்... எனக்காக நான் போன பின் திவசம் என்றெல்லாம் குழந்தைகள் கவலைப்பட வேண்டாம்... அதெல்லாம் அவர்களால் முடியாது. தேவையில்லை. பார்த்துக் கொள். கொஞ்சம் எழுதத் தெம்பு இருந்தது.... இதை எழுதினேன்... அழாதே!"

ராதா அழுதாள்... எப்பொழுது எழுதினான் இதை? தனக்கு முன்னாலேயே அவனுக்குத் தெரியுமா?

ஐயோ!...

* * * * *

ஒரு நாள் மத்தியானம் நாலு மணிக்கு ரவி கடைசி மூச்சை விட்டான்...

வருவோரும் போவோரும் பதிமூன்று நாள் காரியத்தில் மூவாயிரம் ரூபாய்—பார்த்தசாரதி மாமா கடன் கொடுத்தார் — கரைந்தது...

* * * * *

அவுட்ஹவுஸில் சாமான்களை அடக்கினாள்..

சுவாமி படத்தை எடுத்து மாட்டினாள்...

சட்டென்று நினைவில் வந்தது.

எல்லா வைத்தியமும் செய்தாள். எல்லா மாத்திரைகளையும் கொடுத்தாள்... எல்லா முயற்சிகளையும் எடுத்துக் கொண்டாள். ஒன்றைத் தவிர...

* * *

பரீக்ஷித்து மகாராஜன் சுகப்பிரம்மரிஷி முன் தன்னிரு கரங்களையும் கூப்பி — "முனிவரே! தங்களைக் காணும் பாக்கியம் பெற்ற நான் பாக்கியசாலி. மரணத்தை எதிர்நோக்கி இருக்கும் மனிதன் எதைச் செய்ய வேண்டும்? எது அவசியம்? எது தேவை? எது தேவையில்லை? என்பதைக் கூறுங்கள்" என வேண்டினான். சுகர் இதைக் கேட்டு மகிழ்ச்சியுற்றவராய் "அரசனே... அந்திம காலத்தில் நாராயணனைத் தியானிப்பதுதான் மிகச்சிறந்தது. நீ பாக்கியசாலி என்றே நினைக்கிறேன். அடுத்த கணம் என்ன நிகழும் என்பதை எவரும் அறியாத நிலையில் ஏழு நாட்களுக்குப் பிறகு நேரவிருக்கும் மரணத்தைப் பற்றி நீ அறிந்துள்ளாய்... எங்கும் நிறைந்திருக்கும் பரந்தாமனைத் தியானம் செய்..." என்றார்.

* * * * *

தீராத விளையாட்டு ஸாயி

ரா. கணபதி

12. பஞ்ச பூதங்களும் பஞ்சாகும்!

விளையாடலேவடிவாய்க்கொண்டு உலகில் வேத வழி காக்க வந்த கோபாலனை; ஆய்மகளிருடன் விளையாடி, விளையாட்டாகவே கோவர்தன கிரியைத் தூக்கி அவர்களால் கொஞ்சப்பட்ட கோபாலனை .....வணங்குவாய்!

— ஆதி சங்கரரின்
''கோவிந்தாஷ்டகம்''

ஐம்பூதங்களையும் அடக்கியாளும் வல்லமையை ஐயன் ஸாயியிடம் எவ்வளவோ முறை கண்டிருக்கிறோம். ஐம்பூதங்களுக்கும் மானுடரின் ஐம்புலன்களுக்கும் தொடர்பு உண்டு. ஐம்பொறிகளை அறநெறிப்படுத்துவதிலும், அன்பு வழி செலுத்துவதிலும் அவருக்குள்ள ஆற்றலுக்கும் சான்றுகள் நிறைய உண்டு. ஆயின் இதில் நுட்பமான ஒரு மாறுபாட்டை, ஸ்வாமி பன்முறை பகர்ந்துள்ள ஓர் அடிப்படை உண்மையை நாம் மறக்கவேகூடாது.''மனித்மனம்தான் அவன் சிறப்பு, இழிவு இரண்டுக்குமேகாரணமாயுள்ளது. அதைச் சிறக்கச் செய்யவே மஹா புருஷர்கள் தோன்றுவது. ஆயினும் ஒரு மனத்தை ஒரு மஹா புருஷர் அப்படியே வசியம் செய்து மாற்றுவதென்பது 'மெஸ்மெரிஸம்' போலத்தான். இது தனி மனிதனுக்குத் தானக உயரும் நல் வாய்ப்பை மறுக்கும் ஆக்ரமிப்பு போன் றதே. ஒரு ஜீவன் தானக நல்வழிப்பட எத்தனை ஊக்க உத்ஸாஹங்களுண்டோ அவ்வளவும் தந்து, அவன் நல்வழியில் செல்ல உடன் துணையாய் நடந்து, அவனைத் தடுக்கிவிடும் போதெல்லாம் தூக்கிவிட்டு, லக்ஷ்யத்தில் சேர்க்க மட்டுமே மஹா புருஷர்கள் முயல்வார்கள். ''சூ மந்த்ர காளி' போட்டு மனஸை மாற்றிவிட மாட்டார்கள். தாய் பார்த்துப் பார்த்துப் பாலூட்டினாலும் குழந்தையேதான் அதை விழுங்க விடுவாளேயன்றி, தன்னுடைய நாவை அதன் வாயில் இடுவதில்லையே? அப்படி! ஈச்வர ஸ்ருஷ்டியில் மனித வர்க்கம் என்று உச்சியில் இருப்பதற்கு இப்படி ஸ்வயேச்சையாய்த் திருந்த ஊக்கமளிக்கும் 'பெர்ஸுவேஷன்' தான் கௌரவம் தருவதாகும்; நிர்பந்த வசியமல்ல!

''ஆயினும் தனது தனி மனமே அற்றுப் போக வேண்டுமென்ற மெய்யான ஆழ்ந்த தாபமுடையவன் விஷயத்தில்ஈச்வர சக்தியே அவனை ஆட்கொண்டு நடத்தி வைக்கும். அல்லது, அதனால் எதுவும் இயலாததில்லை என்று உலகுக்கு உதாரணம் காட்டவும், உலகின் காப்பில் அதற்குள்ள கருணைக்கு அடையாளமாகவும் ஆங்காங்கு அற்புதமாக ஜீவ மனம் பரிபூர்ணமாக மாறி உத்தம வழியில் செல்வதும் நடக்கிறது.''

இனி ஐம்பூத, ஐம்புலன்களின் உலகில் ஸாயியின் திருவிளையாடல் சில பார்ப்போம்.


* குழந்தைக் கண்ணனுக்காக யமுனை வழி விட்டது போன்ற ஒன்று. முப்பதாண்டுகளுக்கு முந்தைய லீலை.

''நவராத்திரிக்கு முன்னதாகவே வந்து சேர்ந்து விடு. வந்து பொம்மைக்கெல்லாம் பெய்ண்ட்கொடு'' என்று நாகமணி அம்மாளிடம் கூறியிருந்தார்.

ஞாலமுற் றிறுநிறைந்தே — மிக
நயந்தரு பொம்மைக ளெனக் கெனவே
கோலமுஞ் சுவையுமுற.....
கோடிபல் கோடிகள் குவித்து வைத்த
அன்னை ஸாயி.

ஆனல் நவராத்ரிக்கு முன்னதாகவே வருண பகவானும் அமர்க்களமாக விஜயம் செய்துவிட்டார். நாகமணியம்மை இருந்த





திருடன் (1): "நம்ம தலைவர் ஏன் இப்போ வெளி நாடு போறார்?"

திருடன் (2): "தொழில் துறை முன்னேற்றம் வெளி நாட்டுல எப்படி இருக்குன்னு தெரிஞ்சுகிட்டு வரத்தான்!"

— கடுவை கோபால்சாமி.

பெங்களூரிலிருந்து புட்டபர்த்தி வரும் வழியில் ஒரே வெள்ளப் பெருக்கு. போக்குவரத்து அடியோடு நின்று போயிற்று.

அம்மாளின் கணவர் பூர்ணய்யா ரயில்வேயில் உயர் அதிகாரி. அம்மாளிடமும் அதிகார தோரணையே காட்டுவார். அப்படிப்பட்டவரிடம் எப்படியோ கெஞ்சிக் கூத்தாடி பஸ்ஸில் புட்டபர்த்தி செல்ல அம்மாள் அநுமதி பெற்றிருக்க —

பஸ்களே புட்டபர்த்தி செல்லாமல் அடம் பிடித்தன, அடை மழையால்!

காத்துக் காத்து, அதற்கு மேல் காக்க முடியாத நிலைக்கு அம்மை வந்த அன்றும், "இன்று பஸ் கிடையாது" என்றே போலீஸ் ஐ.ஜி.யிடமிருந்து அவளுக்கு ஃபோன் வந்தது.

நாகமணிக்கு ஏதோ ஒரு வேகம் வந்தது. ஸ்வாமி அளித்திருந்த ரக்ஷையை இறுகப் பிடித்துக் கொண்டாள். "ஸ்வாமி! என்னை நீ வழியிலே ரக்ஷித்துத்தானாக வேண்டும்" என்று சூளுரைத்தாள். அந்த ரக்ஷிப்புக்கு முதல் தவணையாக, "இப்போது நான் அகத்துக்காரரிடம் சொல்லப் போகிற பொய் வெளியாகாமல் நீதான் ரக்ஷிக்க வேண்டும்" என்று தொடக்கப் பரீக்ஷை வைத்தாள்!

"பஸ் போகிறது என்று ஃபோன் வந்திருக்கிறது" என்று பூர்ணய்யாவிடம் ஒரு போடு போட்டுவிட்டு, பஸ் ஸ்டாண்டுக்குப் புறப்பட்டாள்.

"ஆற்றுக்கு இக்கரை வரையில்தான் பஸ் போகும். புட்டபர்த்தி போகாது" என்றார் கண்டக்டர்.

அப்படியும் பிடிவாதமாக ரக்ஷையைப் பிடித்துக் கொண்டு அதில் ஏறி அமர்ந்தாள் அம்மை.

காஸ்—வேப் பாலம் வரையில் பஸ் போயிற்று; பாலத்தின் மேலும் போயிற்று; பாலத்தைக் கடந்தும் விட்டது!

பஸ்ஸில் இருந்தவர்கள் திரும்பிப் பார்த்தார்கள். என்ன ஆச்சர்யம்! காஸ்வே வெள்ளத்தில் முழுகியிருந்தது! இவர்களுக்கு அடுத்ததாக வந்த பஸ் பாலத்தின் மறு கரையிலேயே நின்றது!

இவர்களுக்கு முன்னும் கடந்த சில தினங்களாக எந்த வண்டியும் கடக்க முடியாமல் பெருகிய ப்ரவாஹம், இவர்கள் எதிர்க் கரை சேர்ந்தவுடன் மீண்டும் பெருகத் தொடங்கி விட்டது.

கரையேற்றும் அக்கறையாளரோ இந்த அதிசயத்துக்கான 'க்ரெடிட்'டை அடியாளுக்கே கொடுத்தார்! அவள் அவரது ஸந்நிதி அடைந்தவுடனே, "வந்துட்டியா? உன்னுடைய பக்தி விச்வாஸத்தினாலேதான் வெள்ளம் இருந்தும் பஸ் வந்தது. இன்னும் பத்து நாளுக்கு பஸ் போகாது. நிம்மதியா ஸேவை பண்ணிக் கொண்டிரு" என்றார்.

* ஓர் அடியார் உலர்த்தியிருந்த நெல்லை மட்டும் மழை நனைக்காமல் அதைச் சுற்றிப் பரமேச்வரன் அருள் வேலி கட்டியிருந்த கதையைத் "திருநெல்வேலி மாஹாத்ம்யம்" கூறுகிறது. அது கதையல்ல என்று பன்முறை நிரூபித்திருக்கிறார் பர்த்தியப்பர். ஒரு ஸாம்பிள்:

ஸ்வாமியின் அடுத்த பிறப்பான ப்ரேம ஸாயிக்கு இப்போதே மைஸூர் பக்தர்கள் கட்டியுள்ள ஆலயம் உருவாகி வந்த ஸமயம். அதை உருக்குலைக்க வந்தாற்போல, ஸரியாக டெர்ரேஸ் ஒட்டுகிற அன்று கருமேகங்கள் கனத்து வந்தன! அடியார்கள் நிலைகுலைந்தனர். அவர்களுக்குத் தலைமை தாங்கிய டாக்டர் முத்தே கௌடா மட்டும் பக்தி விச்வாஸத்தில் உறுதியாய் நின்றார். "ஸாயிராம் சொல்லிக் கொண்டே வேலையைத் தொடருங்கள்" என்று கூறி அவரும் மச்சுக்கு ஏறினார்.

ஸாயிராம் கை கொடுத்துவிட்டார்! கட்டுமானத்தைச் சுற்றி நூறு கெஜம் தாண்டி நாற்புறமும் மழை கொட்டோகொட்டென்று கொட்டியது! கட்டுமானத்தின் மீது ஒரு தூறல் விழவில்லை! கண்ணுக்குத் தெரியாத எந்த கோவர்தனத்தை அதன்மேல் பக்தர் தனமான பகவான் குடை பிடித்தானோ?

* விரல் நுனியில் கோவர்த்தனம் தூக்காமலே அடியாருக்கு அவர் அருளிய இன்னொரு அற்புத லீலை உண்டு. பல்லாண்டுகளுக்கு முன் நடந்தது. ஸ்வாமி அவர்களைக் காத்தது கனமழையிலிருந்தல்ல; கடுவெயிலிலிருந்தேயாகும்.

நல்ல வெயிலடிக்கும் நண்பகல் ஒன்றில் ஸ்வாமி பெங்களூர் அர்ஸ் குடும்ப அங்கத்தினரிடம் போஜனத்துக்குத் திறந்தவெளியில் உட்காரச் சொன்னார் — ஏதோ நிலாச் சாப்பாடு நடப்பது போல!

"கொளுத்துகிறதே ஸ்வாமி" என்றனர் அவர்கள்.

"நான் சொன்னா கேக்க மாட்டீங்க?" என்று ஸ்வாமி கொளுத்தினார்!

கப்சிப்பென்று எல்லோரும் இலையைப் போட்டுக் கொண்டனர்.

"வாருங்கள், வாருங்கள்" என்றார் ஸ்வாமி. இவர்களை அல்ல! வானத்தை நோக்கிக் கையாட்டித்தான் அழைத்தார்.

வந்தன கனமுகில்கள். இவர்கள் இருந்த இடத்தின் மீது மாத்திரம் பாங்காகக் குடை பிடித்தன! உண்டு முடிக்கும்வரை அதிசயக் குடை அப்படியே இருந்தது. அப்புறம் 'குட் பை' சொல்லி மறைந்தது!



மின்னி மிளிரும் மேனி... என்னாளும் உங்கள் பொன்னான கனவு...நிறைவேற வரமளிப்பது ரெக்ஸோனா.

சாளம், கருவா, கிராம்பு, ஷபுஷா (தேவதாரம்) ஆகிய நாலு வகை இயற்கைத் தைலங்களின் நற்கலவை யான ரெக்ஸோனா...சருமப் பராமரிப்பிற்கு இயல்பான வழியாகும்.

ரெக்ஸோனா உங்கள் மேனியை மென்மையோடு மெருகு மிளிர வைத்திருக்கிறது.

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.

LINTAS RX-84 2012 TM

தேவேந்திரா சாரீஸ்

H.O. 27. ஏலா கந்தப்பன் தெரு, சென்னை-600 003,
போன்: 33113

கிளை ஷோ - ரூம்:

கடை எண் 7, ராம்ஸ் பஜார்

(பனகல் பார்க் எதிரில்)அருகில்)

தியாகராய நகர், சென்னை - 600 017

தேவேந்திரா புடவைகள் கிடைக்கும் இடங்கள்:

* காமாட்சி சில்க் ஹவுஸ், 5/38, W. E. A. அஜ்மல்கான் ரோடு, கரோல்பாக், புதுடில்லி—5. போன்: 581050, 561786. * ''கிருஹ லக்ஷ்மி'' மாதர்கள் கூட்டுறவு அமைப்பு, C-79, விகாஸ்புரி (போடெல்லா), புது டெல்லி—110018. * திருமதி உமாசுப்ரமணியம், II-A-97-B, லஜ்பத் நகர் II, புது டெல்லி—110024. போன்: 616552.* திருமதிவிமலாராகவன், 6/66, W.E.A. கரோல்பாக், புதுடெல்லி—110005. * பங்கஜம்சுந்தரராஜன், C6/A, D.D.A. Flats, முனிர்கா, புதுடெல்லி—67. * Mrs. சாரதா, 16/449, வீரம் பில்டிங், மாதுங்கா, பம்பாய்—19. * சுசீலாமணி, 22, காந்தி மஹால், தேஜோ கோயா பார்க், வின்சென்ட் ரோடு, மாதுங்கா, பம்பாய்—19. * லக்ஷ்மி நாராயணன், 5, வாணி கோ — ஆபரேடிவ் ஹவுசிங் சொஸைட்டி, வல்லபாக் ரோடு, காட்கோபர், (கிழக்கு) பம்பாய்—77. * நல்லீஸ் சில்க் சாரீஸ், சென்டர், 401, டெலாங் ரோடு, மாதுங்கா, பம்பாய்—19. * சௌத் இந்தியன் கன்ஸர்ன், 401, டெலாங் ரோடு, மாதுங்கா, பம்பாய்—19. * லதாகிருஷ்ணன், பிளாட் நெ. 20, காமதேனு கோ ஆப். பெஸ்டம் சாகர், செம்பூர், பம்பாய்—89. (கிளாஸ் பாக்டரி அருகில்). * ஜெயஸ்ரீ, 2—A, தேசப் பிரியா பார்க் ரோடு, கல்கத்தா—26. * S. பொன்னப்பன், 8—3—282, 2வது பஜார், செகந்திராபாத். போன்: 559562.* திருமதி T. S. சகுந்தலா சீனிவாசன், 18/1—A, லால்பாக் போர்ட் ரோடு, (மினர்வா & பஸப்பா சர்க்கிள் மத்தியில்) பெங்களூர் -4 போன்: 224357. திருமதி துர்காம்பாள், 5-A, ராமசந்திரபுரம், தென்னூர் திருச்சி* திரு. S. சேதுராமன் 9. பாணு துரை சன்னதி தெரு, கும்பகோணம்—612001. போன்: 972. * ராணி சில்க், 13, மஹால் 4 வது தெரு, மதுரை—1. போன்: 26295.* திருமதி S. லெட்சுமி, 24, சீனிவாசா தெரு, சேலம்—1. (ரயில்வே ஸ்டேஷன் அருகில்).* ஸ்ரீ காமேஸ்வரி ஏஜென்சீஸ், 6/175, திருச்சி ரோடு, (ஆல் இந்தியா ரேடியோ அருகில்), ராமநாதபுரம், கோயம்புத்தூர்—641018. ஸ்ரீ முருகன் கிளாத் ஸ்டோர், 3, ஆரோக்கியசாமி ரோடு கிழக்கு R.S. புரம், கோவை—2. * மகாலட்சுமி சில்க் சென்டர், தீன் பில்டிங், (உள்புறம்) 175/11, மேல வீதி, சிதம்பரம். * ஹேமாவதி ஏஜென்சீஸ், 2711, நாணயக்கார செட்டி தெரு, தஞ்சாவூர். * பாகீரதிமூர்த்தி, 100, ஸ்ரீ.வராஹபுரம் தெரு, கல்லிடைக்குறிச்சி, திருநெல்வேலி. * S. சுந்தரம், 9, சாத்தான் கோவில் தெரு, வடிவீச்வரம், நாகர்கோவில்—2. * திருமதி K. சீதாலட்சுமி, 41, 4 வது டிரஸ்ட் கிராஸ் தெரு, மந்தவெளிப்பாக்கம், சென்னை—28. போன்: 73244. * திருமதி சாவித்திரி பாலசுப்ரமணியம், 2, 7 வது தெரு, நங்கநல்லூர், சென்னை—61, (பிள்ளையார் கோவில் அருகில்) போன்: 433737.* திருமதி சரோஜா கிருஷ்ணமூர்த்தி, A9/386, புதிய குடியிருப்பு (முதல் மாடி) குடிசை மாற்று வாரியம், திருமங்கலம், அண்ணா நகர் மேற்கு, சென்னை—600 107, (ஸ்ரீ சத்திய சாயிபாபா கோவில் அருகில்). * M/s. பாலாஜி கிளாத் சென்டர் 29, வெங்கடேச சௌத்ரி தெரு, மேற்கு தாம்பரம், சென்னை—45. * திருமதி சுலோசனா கோவிந்த், 2, M. I. T. லெவல் கிராஸிங், குரோம்பேட்டை, சென்னை—44.

குறிப்பு: மற்ற இடங்களில் வாங்குவது எங்களுடைய தயாரிப்பு அல்ல.

(விரல் நுனியின் விறலேயும் இதன் தொடர்ச்சியாகப் பார்த்து விடுவோமே! அர்ஸ்குடும்பத்தினர்திரும்பும்போதுஸ்வாமியும் அவர்களோடு சென்ருர். ஸ்வாமியும் இன்னும் சிலரும் காரில் செல்ல, ஏனேயோர் ஜீப்பில் சென்றனர். வழியே ஜீப் குடை சாய்ந்தது. அதனடியே தப்ப வழியின்றி ஒரு சிறுவன் அகப்பட்டுக் கொண்டுவிட்டான். குடும்பத்தினர் அனைவரும் முயன்றும் ஜீப்பைத் தூக்க முடியவில்லே. அந்நாட்களில் இளங்கொடி போலவே இருந்த நம் குட்டி ஸ்வாமி ஜீப்பிடம் சென்ருர். சிறு விரலே மட்டுமே ஜீப்பின் அடியில் கொடுத்தார். நிமிர்ந்தெழுந்தது ஜீப். குதித்து வந்தான் சிறுவன். ஒரு சிராய்ப்பும் இல்லாமல்!)

அர்ஸ் குடும்பத்தார் கண்ட இன்னேர் அற்புதம். ஸ்வாமியை அவர்கள் கூனூருக்கு அழைத்துச் சென்றிருந்தபோது நடந்தது. நள்ளிரவொன்றில் பேய்க் காற்றும் பெருமழையும் அடித்ததில் அவர்கள் விழித்தெழுந்தனர். ஸ்வாமியைக் காணவில்லே! எங்கே சென்ருர் என்று தேடினூர்கள். வெளித் தோட்டத்திலே, பேய் மழை பெருங்காற்றுக் கிடையே பூங்கொடி ஸ்வாமி சிலேயாய் நின்றிருந்தார். குடையும் கையுமாய் அவரிடம் ஓடினூர்கள். அவருக்கு எதற்குக் குடை? பொட்டு நீர் கூட மேலே படாமல் பட்டாய் நின்றிருந்தார்!

* கர்னல் கே. ஏ. ராஜா அருணுசல ப்ரதேசத்தின் லெஃப்டினண்ட் கவர்னராயிருந்த ஸமயம். அங்கே வீடு வாசலெல்லாம் ஒரே மூங்கில் வேலேப்பாடாகவே இருக்கும். சுற்றுப்புறமும் மூங்கில் புதர்தாம் மண்டியிருக்கும். அங்கே அவரது மாளிகை 'லானே' அடுத்த புதரைப் பார்த்தால் புதிராயிருக்கும்! அத்தனே மூங்கில்களும் ஸரியாகப் பதினேந்தடி உயரத்தில் 'மொட்டை'யடிக்கப்பட்டுக் காட்சியளிக்கும்!

புதிரை அவிழ்க்கிருர் ராஜா. ஒரு தினம் அவற்றில் தீப்பிடித்து மளமளவென்று பரவிக் கொண்டே வந்ததாம். அப்போது ராஜா அங்கில்லே. அடுத்துள்ள குடிசைகளே தீ சூழ்ந்து பஸ்மீகரம் செய்யவிருந்தபோது ஆபத்தை கவனித்தார் ஸ்ரீமதி ராஜா. "ஸாயிராம்! ஸாயிராம்!" என்று கூவிக் கொண்டே வராந்தாவுக்கு ஓடி வந்தார். அவ்வளவுதான்! மாய மந்த்ரம்தான் அந்த நாமம்! "ஒரு டஜன் ஃபயர் என்ஜின்கள் வந்திருந்தாலும் முடிந்திராத காரியத்தை ஐந்தே ஸெகண்டில் முடிந்தது! இப்போது நீங்கள் பார்க்கிற உயரத்துக்கும் மேலேயிருந்து பற்றியிருந்த மூங்கில்களின் மேல் ஏதோ தாரையைப் பீய்ச்சினுற் போல, நெருப்பு அந்த மட்டத்தில் அப்படியே அணேந்துவிட்டது!" என்கிருர் ராஜா.

இனிபுலன்களில் அடிக்கும்மழை, வெயில், புயல்களில் விளேயாட்டுக் கரம் செய்த வித்தை சில பார்ப்போம்.

(தொடரும்)


எமக்குத் தொழில் பேரணி
பேரணிகளுக்கு லாரி, பஸ், வேன், தார், ஆள், கொடி, மைக், எல்லாம் சப்ளை செய்றேன். எதிர்க் கட்சி கொடிக்கம்பம், கட்சி ஆபீஸை நொறுக்கணும்னு எக்ஸ்ட்ரா பில்!..
பேரணி வியாபாரம்
கட்சிக்குள் இளைஞர் அணி, தொழிலாளர் அணி, மாதர் அணின்னு இருப்பது போல் 'பேரணி அணி'ன்னு ஒரு பிரிவு என் தலைமையில் இருக்கணும்!
வெயிலில் காய்ந்து மழையில் நனைந்து, பசித்து புசித்தோ.. வாய்கிழியக் கத்தி, எதிர்க்கட்சி அலுவலகங்களைத் தாக்கி, வீர சாகசம் புரிந்து விழுப்புண் ஏந்தி, சமயத்தில் வீர மரணமும் ஏற்கும் இந்தப் பேரணித் தொழிலாளர்களின் ஊதியத்தை உயர்த்தித் தான் ஆக வேண்டும். இல்லாவிட்டால்..
வேலையை நிரந்தரமாக்கு!
மாமியார்கள் பேரணி, மருமகள்கள் பேரணி நடத்த அனுமதி கேக்கறாங்க!.. அதுவும் ரெண்டு பேரும் ஒரே தேதியில கேக்கறாங்க!
வீடியோ சோதனை வீண் வேலை!
புகை பிடிக்கத் தடை செய்யாதே!



சத் சங்கம்
மார்கழி மாத பஜனை நடைபெறும்.
மார்கழி மாத இசைப் பேரணி நடைபெறும்னு எழுதுங்க, சார்!
அம்பதுஆயிரம் தள்ளுங்க. மூணு வர்ஷம் டிப்ளமா, தர்றேன்!
சுயநிதி பேரணிப் பயிற்சி பாலிடெக்னிக்
கட்சி பேரணி நடத்தி போணி பண்றதை இப்படி சுவத்திலேயா எழுதணும்!
பேரணித் தொழிலாளர் யூனியன்
கொ.ப.செ. பே.பே. போ.போ. கழகத்தின் மாபெரும் போணி நடைபெறும்.
எப்ப பார்த்தாலும், எதுக்கெடுத்தாலும் பேரணியா!.. இதை ஒழிக்க வழி இல்லியா?...
இருக்கு.. பேரணி ஒழிப்புப் பேரணி!
வீட்டுக்கு ஒருவர் வேலைவாய்ப்பு லட்சியம்!
வீட்டோர் அனைவருக்கும் பேரணி வேலை நிச்சயம்!

மௌனப் புயல்

28

ஜலந்தரில் ஒரு சினேகிதனைப் பார்க்கச் சென்ற மன்மோஹன் அமிருத்ஸருக்குத் திரும்ப பஸ் பிடிக்க பஸ் நிலையத்துக்கு விரைந்தான்.

நேரமாகிவிட்டது. இனிமேல் பஸ் கிடைக்கும் என்கிற நிச்சயமில்லை. மாலை ஆறு மணிக்குப் பிறகு பஞ்சாபில் எங்கும் இப்பொழுது பஸ்கள் செல்வதில்லை. ஜலந்தரிலிருந்து கிளம்பும் கடைசி பஸ்ஸைக் கோட்டை விட்டுவிட்டால் இரண்டு மணி நேரம் ரயில்வே ஸ்டேஷனில் காத்திருந்து டில்லியிலிருந்து அம்ருத்ஸருக்குச் செல்லும் ரயிலைப் பிடித்து வர வேண்டும் என்று ஜலந்தருக்கு இன்று காலை அவன் கிளம்பும்போதே குருசரன் ஸிங் சொல்லியிருந்தார்.

அவனை வழியனுப்பச் சினேகிதன் பல்வந்த் ஸிங் வந்திருந்தான். பஸ் நிலையத்தை அடைந்து அங்கு இருந்த பெட்டிக் கடைக்காரனை விசாரித்ததில் பஸ் போய்ப்பத்து நிமிஷங்கள் ஆகிவிட்டன என்று தகவல் கிடைத்தது. கடைக்கார சீக் மன்மோஹனைச் சந்தேகத்துடன் பார்த்தான்.

''இவன் நம்ம ஆள்தான்'' என்றான் பல்வந்த் அவனிடம்.

அதன் தாத்பர்யத்தை உணர்ந்து மன்மோஹனுக்கு அவமானமாக இருந்தது.

''மோனா வா?'' (கேசத்தை மழித்த சீக்கியன்) என்றான் கடைக்காரன் குற்றம் சாட்டும் குரலில்.

''டில்லி கலவரத்தின்போது எடுக்க வேண்டிய கட்டாயத்தில் எடுத்திருக்கிறான் பாவம்.''

இதையெல்லாம் இவன் விளக்க வேண்டுமா என்று மன்மோஹனுக்கு ஆத்திரம் வந்தது.

''ஆ!'' என்று கடைக்காரன் புதிய சுவாரஸ்யத்துடன் அவனைப் பார்த்தான். கண்களில் ஆத்திரம் எட்டிப் பார்த்தது. ''அப்ப உயிர் தப்பிச்ச ரொம்ப சில சீக்கியன்லே இவுன் ஒருத்தனா இருப்பான்! எப்படித் தப்பிச்சே அந்த மாதிரி ஹிந்துக்கள் நம்ம ஜனத்தை மிருகத்தனமா கொளுத்தின போது? ஹிந்து ராஜ்யத்திலே மைனாரிட்டியைக் கொளுத்தினா கேட்பார் யாரும் கிடையாது. பஞ்சாபிலே அவங்களைக் கொளுத்த நமக்கு எத்தனை நேரமாகும்?''

கடைக்காரனின் குரலில் இருந்த தீவிரம் அடி வயிற்றைக் கலக்கிற்று.

''ஒரு ஹிந்து குடும்பம் காப்பாத்தினதினாலேதான் நான் இன்னிக்குப் பிழைச்சிருக்கேன், பாபா! இந்துக்கள் துவேஷம் இல்லே இது. போக்கிரிக் கும்பல்கள் எங்கேயும் இந்த மாதிரி சந்தர்ப்பங்களை உபயோகப் படுத்திக்கும். அவங்க வேலை இது!''

''அதைப் பார்த்துக் கொண்டு பேசாமல் இருந்தது யார்? ஒரு நாள் இல்லை இரண்டு நாட்கள் இல்லை, மூன்று நாட்கள் அந்த வெறியாட்டம் எப்படி நடந்தது?''

இவனுடன் இன்னும் பேசினால் இன்னும் அதிக சூடு பறக்கும் என்கிற சோர்வுடன் அவன் பல்வந்திடம், ''வா ஸ்டேஷனுக்குப் போகலாம்'' என்றான். எந்த சீக்கியனுடன் பேசினாலும் இதே கோபம் தெறிக்கிறது. எந்த சமாதானத்தையும் புரிந்து கொள்ளும் நிலையில் அவர்கள் இல்லை. நாம் ஹிந்துக்களுக்கு வேண்டாதவர்கள் என்றால், சொந்த தேசம் என்று நினைத்த இடத்திலேயே அகதிகளாய் முகாம்களில் இருக்கும் நிலை ஏற்பட்டால் நாம் ஏன் அதன் பிரஜைகள் என்று சொல்லிக் கொள்ள வேண்டும் என்று கேட்டார்கள்.

எங்கு திரும்பினாலும் யாருடன் பேசினாலும் இப்படிப்பட்ட பேச்சு விஷக்காற்றாய் அவன் மூச்சை முட்டிற்று. தூக்கத்தைக் கெடுத்தது. டில்லி சூழலுக்கும் பஞ்சாபில் இருப்பதற்கும் நிறைய வித்தியாசம் தெரிந்தது. டில்லியில் இருக்கிறவரைக்கும் ஜோகிந்தர் சொன்னதுபோல் ஒரு நாளைக்கு எல்லாம் மறந்து போகும், சரியாகிவிடும் என்கிற கற்பனையில் இருக்கத் தோன்றியது.


ஆனால் அமிருத்ஸர் வந்து ஜனங்களின் மன நிலையை ஓரளவு உணர்ந்தபோது பஞ்சாபில் சமாதானம் என்பதை இப்போதைக்குப் பார்க்க முடியாது என்று புரிந்தது. இவர்களுடைய தலையெழுத்தை இனிமேல் இவர்களேதான் நிர்ணயித்துக் கொள்ள வேண்டும் என்று அவன் கவலையுடன் நினைத்துக் கொண்டான்.

சென்ற நூற்றாண்டைச் சேர்ந்த பிந்திரன்வாலேயின் தந்தைக்கு மகத்துவம் கொடுக்க ஒரு சிறிய கும்பல் வட்டமிட்டது. இளைஞர் கும்பல். அவனுக்கு நினைக்க நினைக்கப் புரியாத ஆச்சரியமாக இருந்தது. அவர்கள் உண்மையிலேயே தாங்கள் சொல்வதையெல்லாம் நம்புகிறார்களா?

நம்பினால் —

விநாச காலம் அதிக தூரத்தில் இல்லை....

வாஸந்தி



பல்வந்துடன் பேசிக் கொண்டிருந்த பகல் நேரம் முழுவதும் அவனுடைய ஆதங்கம் புரிந்து துக்கமேற்பட்டது. நான்கு வருஷங்களாக இருக்கிற நிலையினால் அவர்களுடைய வியாபாரம் படுத்துவிட்டது. அவனுடைய படிப்புக் கெட்டுவிட்டது.

"இந்த நிலை இப்படியே நீடித்துக்கொண்டு போனால் பஞ்சாபில் எல்லா இளைஞர்களும் பயங்கரவாதிகளாகப் போய்விடுவார்கள்!" என்று பல்வந்த் சொன்னது வயிற்றைக் கலக்கிற்று.


அவர்கள் மௌனமாக ஸ்டேஷனை நோக்கி நடந்தார்கள்.

ஸ்டேஷனுக்குச் சென்றதும்ரயில் இரண்டு மணி நேரம் லேட் என்றார்கள்.

"குருசரன் கவலைப்படுவார். நான் டாக்ஸியில் கிளம்பிப்போகிறேன்" என்றுவெளியில் இருந்த டாக்ஸியில் மன்மோஹன் ஏறிக் கொண்டான்.

அவனும் ஒரு சீக்கியன்தான் என்று அறிந்ததும் டிரைவர் வழி முழுவதும் டில்லி அரசைத் திட்டிக் கொண்டு வந்தான்.

அன்றைக்கெல்லாம் குருசரன் அனத்திக் கொண்டிருந்தார்.





''இந்த அரசியல்வாதிகள் செய்யும் ஒவ்வொரு தவறும் பஞ்சாபில் அதிக பிளவுகளை ஏற்படுத்தப் போகிறது! பஞ்சாபில் இருக்கும் தலைவர்களையும்தான் பாரேன்! பிளவை அதிகரிக்கிற விதமாகவே பேசுகிறார்கள். கேட்டால் காற்று அப்படியிருக்கிறதாம்! அதன் வழி போவது போல் போய்த்தான் திரும்ப வேண்டுமாம்! அரசியல் விளையாட்டு எல்லாம். அதில் ஜனங்கள் பாடுதான் திண்டாட்டம்.''

''பஞ்சாபின் தலையெழுத்து எப்படி ஆகிவிட்டது பார்த்தாயா? இதற்காக நீயும் நானும் என்ன செய்யப் போகிறோம்? என்ன செய்ய முடியும்?''

குருசரன் ஸிங் அடிக்கடி இந்தக் கேள்வியைக் கேட்டார்.

அவனுக்குப் புரியவில்லை. மிக மோசமாகிப் போய்விட்ட நிலையில் வெறும் லட்சியங்களைச் சுமந்து கொண்டு கனவு காண்பவனால் என்ன செய்ய முடியும் என்று புரியவில்லை. அவன் பஞ்சாபுக்கு வந்து இரண்டு மாதங்கள் ஆகிவிட்டன. இப்பொழுது எப்படியும் காலேஜுக்குக் கோடை விடுமுறை. அம்மாவும் அப்பாவும் கோடைக்குப் பிறகுதான் இந்தியாவுக்குத் திரும்புவார்கள். அதனால் இப்பொழுது தில்லிக்குத் திரும்ப வேண்டிய அவசியமில்லை என்று அவன் தீர்மானித்துக் கொண்டான். இந்த இடைவெளியில் பஞ்சாபின் எல்லா பாகங்களையும் சுற்றிப் பார்க்கலாம் என்று தோன்றிற்று. ஆனால் ஹிந்துக்களையும் சீக்கியர்களையும் தனித்தனியே சந்தித்துப் பேசப் பேச மனத்தில் நிராசை அதிகமாயிற்று. அவர்களிடையே ஏற்பட்டிருந்த விரிசல் பயங்கரமாக இருந்தது.

இதையெல்லாம் எத்தனை நாளைக்கு என்னால் தாங்க முடியும் என்று அவன் வியந்தான். முற்போக்குச் சிந்தனைக்கே வழியில்லாத பிற்போக்குப் பாதையில் இப்பொழுது சென்று கொண்டிருக்கும் பஞ்சாபில் நான் என்ன செய்ய முடியும்?

மதத்தின் அடிப்படையை வைத்து இயங்கும் கட்சிகளும், சிறையிலிருந்து வெளிப்பட்டிருக்கும் தலைவர்களும் ஜனங்களின் மன நிலைக்குத் தகுந்தபடி பேசிப் பலம் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களே எதிர்காலத்தில் பதவிக்கு வருவார்களானால் சீக்கிய மதத்தின் பெயரில் இயங்கும் ஒரு கட்சி ஹிந்து—சீக் பிளவைப் போற்றிக் காக்குமா அல்லது சீர்படுத்த முயலுமா? எதிர்கால நம்பிக்கைக்கு எங்கே ஆதாரம்? முன்பு அதற்கு சீக்கியர்களின் மொத்த ஆதரவு இல்லை.

இப்பொழுது, பொற்கோவிலுக்குள் ராணுவப் பிரவேசம் ஆனபிறகு, மதசார்பில்லாத சீக்கியனெல்லாம் மதசார்புடையவனாகிவிட்டான். மதசார்புடைய கட்சிக்குத்தான் ஆதரவு கொடுப்பான்.

இது எப்படிப்பட்ட தவிர்க்க முடியாத பிற்போக்குத் திருப்பம் பஞ்சாபுக்கு!

தில்லியில் இருக்கும் புதிய இளம் பிரதமர் பஞ்சாப் நிலைமையைச் சீர்படுத்தச் சலுகைகள் ஒவ்வொன்றாகக் காட்ட ஆரம்பித்திருப்பது தெரிகிறது. ஆனால் அதைப் பகிரங்கமாக அங்கீகரிப்பதுகூட அவமானம் என்கிற மெதப்பில் இங்கு தலைவர்கள் பேசுவது அவனுக்கு ஆயாசத்தை ஏற்படுத்திற்று.

அவன் குருசரன் ஸிங் வீட்டை அடைந்த போது இருட்டி விட்டது. ஷௌக்கீன் வந்திருந்தான் சண்டிகரிலிருந்து.

''விஷயம் தெரியுமா? தில்லியில் பஸ்ஸிலேயெல்லாம் பயங்கரவாதிகள் 'பாம்'களை வெச்சு ஏகக் கலாட்டாவாம். நூறு பேர் இறந்து போயிட்டாங்களாம்!''

''ஓ, காட்!''

அவனுக்குச் சட்டென்று ரஞ்சனியின் நினைவு வந்தது. பஸ்ஸில் சதா அங்கும் இங்கும் செல்பவள்....

அவனுக்குத் தொண்டை வறண்டது.

''இது பயங்கரவாதிகளுடைய டாக்டிக்ஸ்!'' என்றார் குருசரன் கோபத்துடன்.

''ஏதாவது சமாதானத்துக்கு வழி வரலாம் என்கிற சமயத்தில் இப்படித்தான் பயம் காட்டுவார்கள். அகாலிகள் எங்கே மத்திய அரசுக்குப் பணிந்து விடுவார்களோ என்கிற பயமுறுத்தல் இது. அந்தக் கும்பலுக்கு வெளி நாட்டு ஆதரவு நிச்சயம் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் நசுக்க நசுக்க முளைத்துக் கொண்டேயிருக்க முடியாது.''

''எனக்கு அலுத்துவிட்டது'' என்று ஷௌக்கீன் எழுந்தான். ''நான் கிளம்பறேன்!''

மன்மோஹன் மௌனமாக அவனுடன் வெளியில் வந்தான்.

''இந்தப் பஞ்சாப் பிரச்னைக்கு ஒரு முடிவு ஏற்படறதுக்குள்ளே எனக்கும் என் மனைவிக்கும் டைவோர்ஸ் வந்துவிடும் போலிருக்கு!'' என்றான் ஷௌக்கீன் தீவிரத்துடன்.

''யூ மஸ்ட் பீ ஜோக்கிங்!''

''ஆனஸ்ட்லி 'யார்'! அவள் ஹிந்து. நான் சீக். வீட்டிலே பல விஷயங்கள் என்னாலே பேச முடியல்லே! நான் மத்திய அரசைத் தப்புச் சொன்னா நான் ஹிந்து விரோதி என்கிறாள். அவள் பிந்திரன்வாலேயைத் திட்டினால் எங்கம்மாவுக்குக் கோபம் வரது. எங்க ரெண்டு பேருக்கும் நடுவிலே ஒரு சுவர் கிடுகிடுன்னு வளர்ந்து கொண்டே வரதை நான் ஒவ்வொரு நிமிஷமும் உணர்கிறேன். ஹிந்து சீக் என்கிற வித்தியாச நினைப்பே இல்லாமல் நானும் அவளும் காதலிச்சுக் கல்யாணம் செய்துண்டோம். இரண்டு பேரும் படித்தவர்கள், அரசியல் ஞானம் உள்ளவர்கள். ஆனால்

டாக்டர்: எங்கே 'ஆ' சொல்லு! பாப்பா 'ஆ' சொல்லு!

குழந்தை: எப்பவும் 'ஆ' மாத்திரம் சொல்லச் சொல்றீங்களே, இ, ஈ,உ, ஊ எல்லாம் உங்களுக்குத் தெரியாதா?

— அ. சுந்தரம்.

இப்ப நடுவிலே இளம்பற சுவரைத் தகர்க்க முடியல்லே. கான் யூ பிலீவ் இட்?''

இந்த மாதிரி ஒரு நிலையில் நானும் ஒரு நாள் அகப்பட்டுக் கொள்வேன் என்கிற பயத்தில்தான் நான் பஞ்சாபுக்கு ஓடி வந்து விட்டேன் என்று சொல்லத் தயக்கமாக இருந்தது. அவன் தோழமையுடன் ஷௌக்கீனின் முதுகை அணைத்தான்.

''நமக்கெல்லாம் இது ஒரு மோசமான கால கட்டம் 'யார்'. கொஞ்ச நாள்லே காலம் மாறலாம். கொஞ்சம் பொறுமையாய் இரு!''

''பொறுமை போய் ரொம்ப நாளாச்சு மன்மோஹன்! 'நல்ல காலம்' கண்ணுக்குத் தெரியற தூரத்திலே இல்லே! இங்கேதான் பார்க்கறியே. கொலை நடக்காத நாளே கிடையாது. வன்முறை என்கிறது நம்ம வாழ்வோட அத்யாவசிய அங்கமாய்ப்போய்விட்டது. பயங்கரவாதிகளைச் சொல்வானேன்? போலீஸ் இங்கே நடந்துக்கற விதத்தைப் பார்த்திருக்கிறயோ? வெறும் சந்தேகத்தும் பேரிலே பொடிப் பயல்களைப் பிடிச்சு அடி அடின்னு அடிச்சு..... ஹௌ கிவ்ஸ் தெம் தி ஸான்க்ஷன்? திறமையைவிட வன்முறை வழிகளைத்தான் போலீஸ் நம்புகிறது. அரசுகளுக்கு, அரசியல்வாதிகளுக்கு, எங்கே வேணும்னாலும் பாரேன் அதுதான் ஆயுதம்... ஒரு அமைப்பு முழுசும் உளுத்துப் போன போது, அதனுடைய அங்கங்கள் எப்படி ஆரோக்கியமாயிருக்கும்? அஸ்ஸாமைப் பாரேன், குஜராத்தைப் பாரேன், எத்தனை பயங்கரம்!

ஷௌக்கீன் சற்று நிறுத்தி ஒரு பெருமூச்சுடன் சொன்னான்.

''மற்ற மாநிலத்துப் பிரச்னைகள் தீர்ந்து விடும் 'யார்'. இங்கேதான் சந்தேகம். வியாதி புரையோடிப் போய்விட்டது. ஹிந்து—சீக் ஒற்றுமையைப் பற்றி இப்பத்தான் அகாலிகள் வாயைத் திறந்து பேச ஆரம்பித்தார்கள். உடனே இந்தப் பயமுறுத்தல்!''

சற்றுத் தூரம் ஷௌக்கீனுடன் நடப்பதற்குள் ஷௌக்கீன் இரண்டு சிகரெட்டுகளைத் தீர்த்துவிட்டு, மூன்றாவதைப் பற்ற வைத்து,

''நீ வீட்டுக்குத் திரும்பு!'' என்று மன்மோஹனிடம் சொல்லித் தன் வழி நடந்தான்.

குருசரன் ஸிங் இரவு முழுவதும் பேசவேயில்லை. தன்னுள் மூழ்கிய சோகத்தில் இருந்தார்.

மன்மோஹன் தூங்காமல் தீவிர யோசனையில் இரவைக் கழித்தான்.

காலையில் எழுந்ததும் குருசரன் ஸிங்கிடம், ''நான் கிராமங்களையெல்லாம் ஒரு பார்வைபார்த்துவிட்டு வரலாம்என்றுபார்க்கிறேன். கொஹாலி கிராமத்தில் என் தாத்தாவுடைய தம்பி இருக்கிறார். அவர் வீட்டில் கொஞ்ச நாட்கள் தங்கிவிட்டு வர்றேன்'' என்றான்.

''அதுதான் நல்லது. இங்கே உனக்கு மூச்சு முட்டிப் போகும்!''

ஒரு சின்ன ஏர் பாக்கில் தன் உடுப்புகளை எடுத்துக் கொண்டு அவன் கிளம்பினான். பஸ் நிலையத்தில் காத்திருக்கையில் வெய்யில் சுளீரென்று முகத்தில் அடித்தது. பெஞ்சில் அவன் அருகில் இரண்டு சிறுவர்களும் அவர்களுடைய பெற்றோர்களும் உட்கார்ந்திருந்தார்கள்.

திடீரென்று களேபரக் குரல்கள் கேட்டன. ஒரு சந்திலிருந்து ஐந்தாறு போலீஸ்காரர்கள் தடியால் அடித்து மிரட்டியபடி பத்து பன்னிரண்டு பையன்களை இழுத்து வந்தார்கள்.

பையன்கள் — சிலருக்கு மீசை முளைக்கவில்லை.

''எங்கள் மேல் தப்பில்லை!'' என்று சிலர் கத்தினார்கள். ''எங்களை விட்டு விடுங்கள்!''

மற்றவர்கள் இறுக்கமான பீதி நிறைந்த மௌனத்துடன் தொடர்ந்தார்கள். மன்மோஹன் திகைப்புடன் நிமிர்ந்து உட்கார்ந்தான். அவன் பக்கத்தில் இருந்த சீக்கியன் விருக்கென்று எழுந்து போலீஸிடம் சென்றான்.

''எதற்கு இவர்களை இழுத்துப் போகிறீர்கள்?'' என்றான்.

''இவர்கள் பயங்கரவாதிகளுடன் தொடர்புள்ளவர்கள். பாம்ப் கேஸில் சம்பந்தப் பட்டவர்கள்!''

''ருசு இருக்கிறதா?''

''சும்மாக் கிட சர்தார்ஜி. அதிகம் பேசினால் உன் பிள்ளைகளை அழைத்துப் போய் விடுவோம்!''

ஒரு போலீஸ் வேன் வந்தது. பையன்கள் கத்தக் கத்த அடைத்துக் கொண்டு கிளம்பிற்று.

அவன் பக்கத்தில் அமர்ந்திருந்த சிறுவர்கள் பெஞ்சில் உட்கார்ந்தபடியே கைகளைத் துப்பாக்கிபோல் வைத்துப்போலீஸ்வானைப் பார்த்துச் சுட்டார்கள். விடாமல் சுட்டார்கள்.

ஐந்து வயது. ஏழு வயது.

அந்தக் கண்களில் தெரிந்த மௌனப் புயலைக் கண்டு மன்மோஹன் அதிர்ந்து போனான்.

பஸ்ஸில் அமர்ந்து பயணிக்கும் சமயத்தில் அடிக்கடி கண்ணில் துளிர்த்த நீரைத் துடைத்தபடி தனக்குள் சொல்லிக் கொண்டான்.

''எனக்கு இங்குதான் வேலை. டில்லியில் இல்லை.''

(தொடரும்)

குல தருமம்

ஸ்வாமி

“ஹரே ராம ஹரே ராம ஹரே ராம
ஹரே ஹரே!
ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண
ஹரே ஹரே!”

—மஹா மந்திரமான இதைப் பலவிதமாக கீர்த்தனமாகப் பாடியபடி, உஞ்சவிருத்தி எடுத்துக் கொண்டே, ஸ்ரீ இராகவாச்சாரியார் கீழச் சித்திரை வீதியில் வந்து கொண்டிருந்தார்.

பத்தாறு காஞ்சிபுரம் பட்டைக்கரை வேஷ்டியில் ஆறு முழத்தால் தலையை மூடிக் கட்டிய பரிவட்டம். கழுத்தில் வாழை நார்க் கயிற்றால் கட்டித் தொங்கவிடப்பட்ட மன்னார்க் கோயில் சொம்பு. அதற்குத் திருமண் அலங்காரம். இடுப்பில் பத்து முழ வேட்டிப் பஞ்சகச்சம். மேலுடம்பை மறைத்த உத்தரீயம். நெற்றியில் பட்டை பட்டையாய்த் திருமண். மஞ்சளில் ஸ்ரீசூர்ணம். முகமெங்கும் வேத கால ரிஷி போலத் தோன்றச் செய்யும் தாடி மீசை வெள்ளை வெளேர் என்று.

ரெண்டாந் தடவை காப்பி கேட்ட தன் புருஷனிடம் “கொஞ்சம் இருங்கோ. அந்த உஞ்சவிருத்திப் பிராமணர் வந்துவிட்டார். அரிசி போட்டுட்டு வந்துடறேன்” என்று கூறிவிட்டு ‘கோமு’ அரைக்கால்படி அரிசியுடன் வீதிக்கு விரைந்தாள்.

யார் வீட்டிலும் நின்று கேட்காமல், இறைவனின் நாமத்தைச் சங்கீர்த்தனம் செய்து கொண்டே போன ஸ்ரீ இராகவாச்சாரியாரின் செம்பில் அரிசியைப் போட்டுவிட்டு ஆசீர்வாதம் வாங்கிக் கொண்டு வந்தாள் கோமு.

“உஞ்ச விருத்திப் பிராமணனுக்கு அரிசி போடறதுக்கு இவ்வளவு அவசரம் என்னடி?” என்றார் கணவர் கிச்சாமி.

“இந்த உஞ்சவிருத்திப் பிராமணன் இராகவாச்சாரியார் இருக்காரே, மஹா சாது. எந்த சந்நியாசியை விடவும் மேல். முன்னால நல்ல பணக்காரராத்தான் இருந்தார். ததியாராதனம் பண்ணியே, எல்லாருக்கும் சாப்பாடு போட்டே சொத்தைக் கரைச்சுட்டவர். பொண்டாட்டியைஎமன்கொண்டு போயிட்டான். ஒரே பிள்ளை நாராயணனைக் கஷ்டப்பட்டு வளத்துண்டிருக்கார். பையன் பி. ஏ. வாம். அதுவும் அப்பாவை மீறாத சத்து. இது தலை எடுத்துத்தான் கடைசிக் காலத்துல இராகவாச்சாரைக் கண் கலங்காம வச்சுக்கணும். அவர் அன்னிக்குச் செய்த தருமம்தான் இன்னிக்கு என்னைப் போல நாலு பேர் ஓடி வந்து அரிசி போடக் காரணம்.

“அது சரிடி. எல்லாருக்குந்தான் கஷ்டம் இருக்கு. ஆனா, பிராமணார்த்தம் இருக்கிறதும், உஞ்ச விருத்தி எடுத்தே பொழைக்கிறதும் கையாலாகாத்தனத்தைத்தானே காட்டுகிறது?”

“அந்தணர் என்றால் அன்றன்றைக்கு வேணுங்கிறதை அன்னன்னிக்கு பிக்ஷையா வாங்கி, சேர்த்து வைக்காம, சுயநலமற்று உயர்ந்த விஷயங்கள்ல மனசை செலுத்தி வாழறவான்னுதானே அர்த்தம் சொல்லியிருக்கு. அவர் அப்படித்தான் இருக்கார்.”

கிச்சாமி, “கோமு, வரப்போற தெவசத்துக்கும் அவரையே சொல்லிடு” என்று மனைவியை மகிழ்ச்சி செய்தார்.

“பார்த்தேளா, இராகவாச்சாரியார் மாதிரி பிராமணார்த்தம் இருக்க வர்றவா இல்லேன்னா நீங்கள்ளாம் எப்படி தெவசம் பண்ணுவேள்?” என்று மடக்கினாள் கோமு.

* * * * *

ஸ்ரீரங்கம் கீழச் சித்திரை வீதியில் உஞ்ச விருத்தியை முடித்துவிட்டு இராகவாச்சாரி, இடுங்கிய கண்களால் யாரையோ எதிர் பார்ப்பது தெரிந்தது.

அவருடைய பிள்ளை நாராயணன்தான், உத்திரை வீதி கோபுரம் நுழைந்து சித்திர வீதிக்கு வந்து கொண்டிருந்தான்.

அப்பாவிடமிருந்து செம்புடன் அரிசியை வாங்கிக் கொண்டான்.

“இன்னிக்கு காலேஜ் உண்டா?”

“ம். உண்டுப்பா.”

“ஒரு சாதத்தை வடிச்சு, எதையோ ஒரு புளித் தண்ணியைக் காய்ச்சி சீக்கிரமா சாப்பிட்டுட்டுப் போ!, ஒரு நாள்கூட காலேஜ்

போகாம இருக்கக் கூடாது! என்ன பாவம் பண்ணினியோ, என் வயத்தில வந்து பிள்ளையாய்ப் பிறந்து திண்டாடறே? நீயாவது, சுயமா படிச்சு முன்னுக்கு வா'' என்றார்.

தலையை ஆட்டிவிட்டு நாராயணன் ஓடினான்.

தாமரைப் பூவினுள் இருக்கும் 'கரணி' போல சுற்று வட்டமாக அமைந்த வீதிகளின் நடுவில் இருக்கும் பெரிய கோயிலுள் சென்று பெருமாளைச் சேவித்தார்.

''எல்லாவற்றையும் சொத்தாக உடைய ஸ்வாமியே, உன்னிரு பாத கமலங்களில் சரணம்; ஸ்ரீயப்பதியே, நீயாக எப்படி விட்டாலும் சரி!'' என்று நெடுஞ்சாண்கிடையாக விழுந்தார்.

* * * * *

''சிறு தொகையோர் என்று எங்களை அலட்சியப்படுத்தாதே!''

''மேட்டுக் குடியினர் என்று நசுக்காதே!''

— மேற்கண்ட கோஷங்களை எழுப்பிய படி பிராமண சங்க ஊர்வலம் ஒன்று வாசலில் போனது.

''பார்த்தியாடி கோமு! பிராமணனும் சங்கம் வச்சு கத்திண்டு போறதை!'' என்றார் கிச்சாமி.

''பிருமணு, உஞ்ச விருத்தி எடுத்துச் சாப்டுண்டு அக்கடான்னு இருந்தாலும் உங்களுக்குப் பிடிக்கலே; வேலே, வெட்டி கொடுங்கோ, எங்களை அடியோடு அநாதையாக்கிடாதேங்கோன்னு போராடினாலும் பிடிக்கலே; பாவம் அவா, என்னதான் பண்ணுவா?''

''கஷ்டப்பட்டு, படிச்சு முன்னேறணும்!''

''உங்க காலத்தை நெனைச்சிண்டு பேசறேள். இப்பல்லாம், தாழ்த்தப்பட்டவா, மலைவாசி, பின் தங்கினவா அது, இதுன்னு ட்டு எழுபது சதவீதத்துக்கு மேல லீட் போய்



டுது. படிக்க இடம்பிடிக்கத்தான் இப்படின்னு. அத்தனை சலுகை மறுபடியும். வேலைக்கு எடுக்கும்போதும்மத்தவாளுக்குப்போய்டுது. இதில எங்க பிராமணர்கள் படிக்கிறதும். முன்னுக்கு வரதும்?''

''முன்னுக்கு வரத் தகுதி உள்ளவாளை, யாரும் அமுக்க முடியாதுடி!''

''இதை, ஐயாயிரம் வருஷங்களுக்கு முந்தி மத்த ஜாதிக்காரங்களைப் பிராமணர்கள் முன்னுக்கு வரவிடாமல் அமுக்கி வைச்சான்னு சொல்றவாகிட்டே சொல்லுங்கோ."

* * * * *

அடையவளைஞ்சான் தெருவிலிருந்து கிளம்பி, உத்திரை, சித்திரை வீதிகளில் சுற்றி நாலு திசைகளிலும், இராகவாச்சாரியார் உஞ்சவிருத்தி எடுத்துக் கொண்டே இருந்தார். பஞ்சாதியோ, புருஷ ஸூக்தமோ, திருப்பாவையோ சொல்லிக் கொண்டே போவார்.

பெண்களிடம் உள்ள குல தருமம் அவரது சொம்பை அரிசியால் நிரப்பியது. அந்தந்த வீதிகளின் முனையில் குறித்த நேரத்தில் வந்து நாராயணன் அரிசியை வாங்கிக் கொண்டு போய், பொங்கிச் சாப்பிட்டுவிட்டு, அவருக்கும் வைத்து மூடி, கல்லூரிக்குக் கிளம்புவான். பெருமாள் சேவைக்குப்பின், சாப்பிட்டுவிட்டு சிரம பரிகாரம் செய்து கொள்வார் தந்தை. கல்லூரி விட்டுத் திரும்பி வந்து, பாத்திரங்களை அலம்பி வீட்டு வேலை செய்வான் நாராயணன். பிறகு பாடங்கள்.

மாலை வேளைகளில் தாயார் சந்நிதி வாயிலில், ''அழகிய மணவாளா'' என்று துதிப்பாடி அமர்ந்திருப்பார். யாரேனும் தெவசம் பண்ணி வைக்கும் வாத்யார் ஸ்வாமிக்கு வேறு யாரும் அகப்படாவிடில், மனமிருந்தால் இவருக்குச் சீட்டு விழும். 'இன்ன இடத்தில் தெவசம்; பிரமணார்த்தம் சாப்பிட இத்தனை மணிக்குள் வரவேண்டும்' என்று அழைக்கப்படுவார்.

அன்று தரப்படும் தட்சணைகளின் சேமிப்பும், பலரிடம் எடுக்கும் உபாதானமும் நாராயணனின் காலேஜ் ஃபீஸ். மற்ற செலவு, விசேஷங்களில் அவருக்குவரும்வேட்டிகளே நாராயணனுக்கும் உடுத்த. சில சமயம் மேலே போடும் ஜிப்பாவாகவும் ஆகும்.

பணமும், உடையும் பிரச்னையாக இருந்ததால், நாராயணன் கல்லூரியில் கிரிக்கட் போன்ற விளையாட்டு குழுக்களில் இடம் பெற முடியவில்லை.

'பிச்சை புகினும் கற்கை நன்றே' என்று படித்திருந்தசகமாணவர்களாலேயே,,'உஞ்ச விருத்தி', 'பிராமணார்த்தம்' என்று அழைக்கப்பட்டான்.

நல்ல மதிப்பெண்கள் பெற்றிருந்தும் அந்தண குலத்தில் பிறந்துவிட்டதால், சலுகைகள் மறுக்கப்பட்டன. இரக்கமனம்கொண்ட பலத்த சிபாரிசால், கல்லூரியில் இடம் பெற்றான். ஆனால் ஒரு பி. காம்.; பி. எஸ்ஸி, என்ஜினியரிங் போன்ற உபயோகமான கோர்ஸ் கிடைக்காமல் வெறும் பி. ஏ. பிலாஸபி கிடைக்க அதில் சேர்ந்து படித்து வந்தான்.

இப்படியே நாராயணனும் ஒரு பட்டதாரி ஆனான். வேதாந்தத்தில் பி.ஏ. முதல் வகுப்பு வேறு.

வேலை எதுவும் 'அவனுக்குக் கிடைக்கவில்லை.

''பி. ஏ. வேதாந்தமா? சந்நியாசியாகப் போகத்தான் உதவும்'' என்று ஏளனம் செய்யப்பட்டான்.

'இல்லையென்று கூறப்படும் ஜாதியே' குறுக்கே நின்றது. சடங்குகள், சட்ட விதிகள், சலுகை தராததால் மற்றெந்த சமுதாய வசதிகளும் அவனுக்கு உதவவில்லை. எப்போதும் போல உஞ்சவிருத்தி செய்யும் தந்தையின் நிழலிலேயே தானும் தள்ளாடினான்.

* * * * *

''ஏண்டாப்பா நாணி எங்க வந்தே?'' கிச்சாமி விசாரித்தார்.

'விழுந்து எழுந்தாள் அம்மன்!'

சக்கரங்களுடன் ஆலயத் தேர்களைத்தான் நாம் பார்த்திருக்கிறோம். ஆனால் திருவாரூர் அருகே உள்ள ''தப்பளாம்புலியூ''ரில் சக்கரங்கள் இன்றி வாரை வைத்து கட்டப்பட்ட தேரை பக்தர்கள் தோளில் சுமந்து வீதிகளிலும், வயல்களிலும் தூக்கிச் சென்று திரும்பும் காட்சியைக் காணலாம்.

தப்பளாம்புலியூர், ''அருள்மிகு பிடாரி ஸ்ரீ குளுந்தாள் அம்மன்'' கோவிலில் பல வருடங்களாக இப்படி நடைபெற்று வருகிறது. சுமார் 20 அடி உயரமும், 3 டன் எடையும் கொண்ட இத்தேர், பச்சை மூங்கிலாலும், தென்னங்கீற்றுகளாலும் வருடா வருடம் கட்டப்படுகிறது. தூக்கிச் செல்லும் போது பல இடங்களில் விழுந்து விழுந்து எழுந்து செல்வதால், அந்த அம்மனுக்கு, 'விழுந்து எழுந்தாள்' அம்மன் என்ற பெயரும் அவ்வூரில் வழங்கி வருகிறது!

— படம், தகவல்: டி. கணேசன்.



சிறிதே சாதுர்யம் தேவை, கேசம் பெறுகிறது இளமை!





வாழ்க்கையின் குறிப்பிட்ட ஒரு நேரத்தில் கேசம் நரைக்கத் துவங்குகிறது. இளமை அத்துடன் முடிவடைந்துவிட்டதாக நீங்களும் எண்ணி விடுகிறீர்கள். அது வெறும் பிரமைதான். சிறிதே சாதுர்யமாக செயல்பட்டால் இத்தகைய தவறான பிரமை விலகிவிடும்.

கேள்வி: கேசத்திற்கு ஹேர் டை எப்போது உபயோகிக்கத் துவங்கலாம்?

பதில்: கேசம் நரைப்பதற்கு குறிப்பிட்ட வயது என்று எதுவும் கிடையாது. அதனால், நரைக்கும் அறிகுறி தோன்றியதுமே கேசத்துக்கு ஹேர் டை உபயோகிக்கலாம்.

கேள்வி: ஆனால் ஹேர் டை செய்வது என்பது பெரும் தொல்லையும், மிகுந்த நேரம் தேவைப்படும் விஷயமும் அன்றோ?

பதில்: நீங்கள் கண்டகண்ட ஹேர் டைகளை வாங்கி உபயோகித்தால் அப்படி நேரக்கூடும். ஆனால் கோத்ரெஜ் ஹேர் டை உபயோகிப்பது மிகவும் எளிது காரணம் இது தானாகவே பரவி விடுகிறது.

கேள்வி: அடிக்கடி ஹேர் டை உபயோகித்தால் கேசத்திற்குக் கெடுதல் ஏற்படக்கூடுமா?

பதில்: உயர்ந்தரக ஹேர் டையாக இருந்தால் சிறிதும் கெடுதல் இல்லை. அதாவது, கோத்ரெஜ் ஹேர்டை கேசத்துக்குக் கருமை ஊட்டுவது மட்டுமல்லாது, அதை அழகுறச் செய்து பளபளப்பும் அளிக்கிறது.

கேள்வி: கோத்ரெஜ் ஹேர் டையினால் துணிகள், தலையணைகள் இவற்றில் கறைகள் ஏற்படுகின்றனவா?

பதில்: கோத்ரெஜ் ஹேர் டையினால் அப்படி ஏற்படாது. காரணம், அது மற்ற ஹேர் டைகளைப்போல் கேசத்தின் மேற்பகுதியில் தங்கி விடாமல் கீழ்ப்பகுதிவரை ஊடுருவிச் செயல்புரிகிறது.

கேள்வி: கோத்ரெஜ் ஹேர் டை எவ்வளவு நாட்களுக்கு செயல் திறனை நீடித்து வைக்கின்றது?

பதில்: குறைந்த பட்சம் மூன்று-நான்கு வாரங்களுக்கு.

கேள்வி: கோத்ரெஜ் ஹேர் டையின் மூலம் கேசத்தை டை செய்தபின் வழக்கம்போல் தலையை அலசிக்கொள்ள முடியுமல்லவா?

பதில்: ஆம். கேசத்தை நல்ல ஷாம்பூ போட்டு அலசவும். பிறகு அதன்மீது ஹேர் ஆயில் அல்லது க்ரீம் போட்டுக் கொள்ளலாம்.

கேள்வி: ஹேர் டையினால் ஒருவித துர்நாற்றம் வீசுகிறது என்கிறார்களே?

பதில்: வேறு ஹேர் டைகளைப் பொறுத்தவரை இவ்விதமாக இருக்கக்கூடும். ஆனால் கோத்ரெஜ் ஹேர் டையில் நல்ல நறுமணம் உண்டு. தவிர இதில் கண்டிஷனரும் உள்ளது.

கேள்வி: கோத்ரெஜ் ஹேர் டை பற்றி வேறு ஏதேனும் கூற முடியுமா?

பதில்: கோத்ரெஜ் லிக்விட் ஹேர் டை 20 மிலி மற்றும் 40 மிலி, பாட்டில்களில் கிடைக்கிறது. இரண்டு ஷேடுகளில், டார்க் ப்ரௌன் மற்றும் நேச்சுரல் ப்ளாக். உங்கள் கேசத்தின் இயற்கையான வண்ணத்துக்கேற்றதைத் தேர்ந்தெடுங்கள்.



Godrej

கோத்ரெஜ்
பர்மனெண்ட் லிக்விட்
ஹேர்டை

தெரிந்தவர்களுக்கு மட்டுமல்ல
உபயோகிக்க விரும்பும் புதியவர்களுக்கும்

கோத்ரெஜ் தயாரிப்பு.

CLARION/B/GS/22/203 TML



செல்லப் பிராணி

போட்டி : 25

உங்கள் வீட்டில் அல்லது உங்கள் நண்பர் வீட்டில் நாய், பூனை, ஆடு, மாடு, கிளி, முயல் என்று ஏதேனும் செல்லப் பிராணி வளர்ந்து கொண்டிருக்குமே? அல்லது உள்ளூர் கோயிலில் யானை இருக்கலாமே! இத்தகைய பிராணிகளின் சமர்த்து, சாமர்த்தியம், குறும்பு, அல்லது கெட்டிக்காரத்தனம் உங்களை வியக்க வைத்திருக்குமே! அது பற்றி கீழே வெற்றிடத்தில் எழுதி இந்த அரைப் பக்கத்தை முழுமையாகக் கத்தரித்து அனுப்புங்கள். பிரசுரமானால் பரிசு. தவிர ஒருவருக்குக் குலுக்கல் முறையில் விலையுயர்ந்த வி. ஐ. பி. ஸூட்கேஸ். உறையின் மேல் "செல்லப் பிராணி" என்று குறிப்பிட மறவாதீர்கள்.

முடிவு தேதி 4.11.85.

28 வி. ஐ. பி. ஸூட் கேஸ்கள் காத்திருக்கின்றன. அவற்றுள் ஒன்றை நீங்கள் பெற முடியாதா என்ன? வாரம் தவறாமல் போட்டிகளில் பங்கு பெறுங்கள்.

என் பெயர்: ....

விலாசம்: ....

....

வி.ஐ.பி. ஸூட்கேஸ் பரிசுத் திட்டம்

"மாமி கொஞ்சம் மோரும், சாதமும் இருக்குன்னு....."

நார்த்தங்காய்க்குருடன் சாதமும்மோரும் கொண்டு வந்து கொடுத்தாள் கோமு.

நாணி, நாணாமல் அதைவாங்கிக்கொண்டு போனதும், "ஏண்டி, இப்ப அந்த உஞ்ச விருத்தி வரவில்லே?" என்று கேட்டார் கிச்சாமி.

"அவருக்கு உடம்புக்கு வந்துடுத்து. இந்த நாணிதான் சிசுருஷை செய்துண்டிருக்கு. அந்த விதத்துலே அவர் கொடுத்து வைத்த பிராமணர். நாமும்தான் இருக்கோமே. நமக்குப் பொறந்தது பம்பாய்லே இஷ்டத்துக்கு அவுத்து விட்ட கன்னுக் குட்டி மாதிரி துள்ளிண்டிருக்கு."

* * * * *

"நாணி, வர பத்தாம் தேதி வீட்டிலே தெவசம். தோப்பனாரை வரச் சொல்லிடு. பிராமணார்த்தத்துக்கு அவரைத் தவிர நம்ம வீட்டில் யாரையும் சொல்றது இல்லே" என்றாள் கோமு.

இதை நாணி தந்தையிடம் சொன்னான்.

"பதினைஞ்சு ரூபா தட்சிணை கிடைக்கும். வேஷ்டி கெடச்சாலும் கெடைக்கும். என்னையே நம்பிண்டிருப்பா. அன்னிக்கு மட்டும் எப்படியாவது எழுந்து தீர்த்தமாடி அவர்கள் வீட்டுக்குப் போய்ச் சாப்ட்டுட்டு வந்துடணும்" என்றார்.

நாலுகால் மண்டபம் என்று பிரசித்தி பெற்றிருந்த 'பிரசன்ன வெங்கடேச ஆயுர்வேத வைத்தியசாலை'யிலிருந்து சூர்ணமும், கஷாயமும் வாங்கி வந்து, தேனோ, நெய்யோ இல்லாததால் நீரில் குழைத்துத் தந்தான். கிடையாய்க் கிடந்த தகப்பனார்க்குக் காலைப் பிடித்துவிட்டான்.

பத்தாந்தேதி ராகவாச்சார் எழுந்திருக்கவே இல்லை. சூடு இருந்தது. மூச்சு இழைந்தது. திடீரென்று மலங்க மலங்க விழித்து ஏதோ ஜாடை செய்தார்.

* * * * *

"ஏண்டா கொழந்தை. தோப்பனார் எங்கேடா? நீ மட்டும் வந்து நிக்கறே?" என்றாள் கோமு மாமி.

குளித்து, வேஷ்டி உத்தரீயத்தோடு திருமண் இட்டுக் கொண்டு வந்து நின்றான் நாராயணன்.

"அப்பாவால் எழுந்திருக்க முடியலே. சாப்பிட நான் வந்திருக்கேன்!"

கலியாணமாகாதவனானதால் பிரும்மச்சாரி இலையில் தேவஸ்தானத்தில் உட்கார்த்தி வைக்கப்பட்டான்.

அன்றைக்கு மறுநாள் இராகவாச்சார் தனது கடைசி மூச்சை விட்டார். 'பையனையும் அரங்கேற்றி விட்டோம்' என்றோ என்னவோ!

லக்கேஜ் பெட்டித் தயாரிப்புத்
தலைவர்களின் படைப்பு—


விஐபி
கன்கார்டு

வந்திறங்குது இப்போது—

இதோ, ஜெட் யுகக் கட்டழகுள்ள புதிய விஐபி கன்கார்டு! நாகரீக நரம்போடிய அலாதி ஸ்டைலிங். கண்டறியாத வர்ண வகைகள்: பீச க்ரீம் (செவ்விள மஞ்சள்), டெஸர்ட் பிரவுன் (மணற் கபில நிறம்), மிஸ்ட் க்ரே (பனிச் சாம்பல்), க்ரீம் சாக்கலேட், மேலும் பலப் பல. உட்புறமோ இடவசதி மிகுதி.

ஓடோடிப் பார்வையிடுவீர்: அருகிலுள்ள வியாபாரியிடம்... சொகுசு லக்கேஜ் புதுவரவுகள்.

ஆகாயமெட்டும் எங்கள் அதிநவீனக் கற்பனை.



தேர்ந்தெடுக்க மிகப் பல வகைகள்,
வருங்கால யோக வரவுகளோ மேலும் பலப்பல.

LINTAS VIP M 10 2013 TM

சித்திரஞ்சனி

12

அஞ்சன்வேல் கோட்டை!

காலம் அனுகூலமாயிருந்தாலொழிய மனிதன் போடும் எந்த கணக்கும் பலனளிப்பதில்லை. எந்தத் திட்டமும் உருப்படியாக நிறைவேறுவதில்லை. என்ற உண்மையைக் கௌதமிபுத்ரன் அந்த இரவின் நிகழ்ச்சிகளிலிருந்து புரிந்து கொண்டான். எத்தனையோ திறமையுடன் தான் படகோட்டியைப் பொட்டிலடித்து அவனைப் படகில் படுக்க வைத்து அவன் மீது ஏறி உட்கார்ந்துகொண்டதன்றி அவன் தலைப்பாகையையும் தான் தரித்துக் கொண்டதால், மலைக்குச் சென்று வந்த எதிரி வீரர்களைத்தான் ஏமாற்றிவிட்டதையும், இன்னொரு முறையும் அவனைப் பொட்டிலடித்துப் படகிலிருந்து பாய் மரக் கயிறு மூலம் மரக்கலத்தில் ஏறிக் குதித்துக் காஷ்டானனையும் சித்தரஞ்சனியையும் அழைத்து வந்ததையும் எண்ணி, இத்தனை திறமையுடன் சித்தரஞ்சனியை விடுவித்துங்கூட கடைசியில் நாகபாணனிடம் சிக்கிக் கொண்டதை நினைத்ததால் மனிதத் திறமை எதையும் சிதற அடிக்கக்கூடிய மகாசக்தி வேறொன்றிருப்பதை உணர்ந்து கொண்டான்.

சந்திர வெளிச்சம் இருந்தும் படகில் தான் படகோட்டியின் துணியைத் தலைப் பாகையாகச் சுற்றி மலையில் தன்னைத் தேடிப் பார்த்து வந்த வீரர்களை ஏமாற்றிய அதே வழியைப் பின்பற்றி மகாக்ஷத்ரபனான நாகபாணன் தன்னை ஏமாற்றிவிட்டதையும் நினைத்துப் பார்த்து, ஒரே வித்தையை இருவர் கையாள முடியுமென்பதைப் புரிந்து கொண்டதாலும், தான் நிராயுதபாணியாக்கப்பட்டிருப்பதை அறிந்து கொண்டதாலும் தனது நிலையை எடைபோடத் துவங்கினான். சித்தரஞ்சனியை முன்னால் அனுப்பி காஷ்டானனுக்குப் பின்னால்தான் மிகுந்த எச்சரிக்கையுடன் வந்தும் படகில் இறங்கிய சமயத்தில் தன்னுடன் லேசாக இழைந்த காஷ்டானன் தனதுகோடரியை எடுத்துக்கொண்டிருக்க வேண்டுமென்றும், மரக்கல அறையில் சித்தரஞ்சனியின் தளைகளை அறுத்த பிறகு குறுவாளை படுக்கை மீது எறிந்துவிட்டதால் காஷ்டானன் அதை எடுத்துக் கொண்டிருக்க வேண்டுமென்றும் உணர்ந்து கொண்ட கௌதமிபுத்ரன், காஷ்டானனும், தான் எடை போட்டது போல் அத்தனை அறிவிலி அல்ல என்றும் புரிந்து கொண்டான். தனது முதுகில் ஊன்றப்பட்டிருந்த குறுவாள் காஷ்டானனுடைய குறுவாளேயென்பதில் சதகர்ணிக்குச் சந்தேகமில்லாததால் தன்னைத்



திரும்பி நோக்கிய நாகபாணனைப் பார்த்து மெல்லப் புன்முறுவல் கொண்டான்.

அவன் தன்னைப் பார்த்துப் புன்முறுவல் செய்ததைக் கவனித்த நாகபாணன், சாதவாகனன் தைரியத்தை உள்ளூர மெச்சிக் கொண்டதன்றி, "கௌதமிபுத்ரா! உன் துணிவை நான் மிகவும் பாராட்டுகிறேன்" என்று கூறவும் செய்தான்.

இதைக் கேட்ட கௌதமிபுத்ரன், "மகா க்ஷத்ரபர், அபராந்தா என்ற சிறப்புப் பெயர் கொண்ட வட கொங்கணத்தை ஆளும் மகாராஜா, கேவலம் தலைப்பாகையணிந்து படகோட்டி வேஷம் போட முன்வந்தது எத்தனை விசித்திரம்" என்று நகைச்சுவையைக் காட்டினான்.

மகாக்ஷத்ரபனான நாகபாணனும் கௌதமிபுத்ரனுக்குச் சிறிதும் சளைக்காமல் "ஒரே வேஷம் இருவருக்கும் பொருந்துகிறது. ஆனால் கடைசியில் பலன் கிடைப்பது சாதவாகனருக்கல்ல, சாகர்களுக்குத்தான் கிட்டுகிறது. படகை மன்னர் இருவர் செலுத்தலாம் என்பதற்கு நாம் இருவருமே அத்

சாண்டில்யன்



தாட்சி. ஒரே ஒரு வித்தியாசம்....." என்று கூறியவன் வாசகத்தை முடிக்கவில்லை.

கௌதமிபுத்ரன் இதழ்களில் இளநகை அரும்பியது. "என்ன வித்தியாசமோ?" என்று வினவவும் செய்தான் புன்முறுவலினூடே.

"மரக்கலத்துக்கும் கோட்டைக்கும் உள்ள வித்தியாசம்" என்றான் நாகபாணன். மேலும் விளக்கினான்: "சாதவாகனா! நீ சித்தரஞ்சனியை விடுவிக்க மரக்கலத்தை நாடினாய். உங்களிருவரையும் அஞ்சன்வேல் கோட்டைக்குக் கொண்டு போக நான் முன்னதாகவே முடிவு செய்தேன். சித்தரஞ்சனி எப்பொழுது மரக்கலத்துக்குக் கொண்டு போகப்பட்டாளோ அந்தச் சமயத்திலிருந்து உன்னைக் கண்காணித்து வரு..றேன். நீ படகை ஓட்டி வந்ததை நான் மரக்கலத்திலிருந்தே கவனித்தேன். நீ மரக்கலத்தில் ஏறி உள்ளே சென்றதும் அடுத்து நீ சித்தரஞ்சனியுடன் வெளியே வருவாய் என்பதை அறிய பிரமாத அறிவு தேவையில்லை. நீ அறைக்குள் நுழைந்தவுடன் நான் இந்தப் படகை அவிழ்த்து மிதக்க விட்டுச் சித்தமாயிருந்தேன் உன் வருகையை எதிர்பார்த்து....."

இதைக் கேட்டு மகாக்ஷத்ரபன் சூக்ஷ்ம புத்தியை வியந்த கௌதமிபுத்ரன், "நான் அந்த இடத்தில்தான் இறங்குவேனென்பது எப்படித் தெரியும்?" என்று வினவினான்.

"மரக்கலத்தில் நான்கு நூலேணிகள் உண்டு. மூன்றை மறைத்துவிட்டேன். ஒன்றை மட்டும் கண்ணுக்குப் புலப்படும்படி போட்டு வைத்தேன். அது கிடந்த இடத்துக்கு நேர்கீழே இருந்த சமுத்திர மட்டத்தில் நான் படகுடன் நின்றேன்" என்றான் மகாக்ஷத்ரபன்.

"முந்தியே திட்டமிட்டுத்தான் செய்திருக்கிறீர்கள் உங்கள் அலுவலை. ஆனால் உங்கள் திட்டத்தை அறிந்த காஷ்டானன் ஏன் உடனடியாக என்னைப் பிடிக்க ஏற்பாடு செய்யவில்லை?" என்று கேட்டான் சதகர்ணி.

"திட்டத்தை நான் காஷ்டானனுக்குச் சொல்லவில்லை. சொல்லியிருந்தால் நீ இப்பொழுது என்னிடம் சிக்கியிருக்க முடியாது" என்ற நாகபாணன், "சாதவாகனா! கோட்டைக்குச் சென்ற பின் சில முடிவுகளை எடுக்கத் ீர்மானித்திருக்கிறேன். அவற்றுக்கு நீ இடைஞ்சலாக இல்லையென்றால் உன்னை உடனே விடுதலை செய்து அனுப்பிவிடுகிறேன். என்னுடைய விரோதத்தைவிட எனது நட்பு உனக்குப் பயனளிக்கும்" என்று கோட்டையில் நடக்கக்கூடியது என்னவென்பதைப் பற்றிச் சிறிது சூசகமும் காட்டினான்.

மகாக்ஷத்ரபன் சொற்களைக் கேட்ட சதகர்ணி லேசாக நகைத்தான். "ஏன் நகைக்கிறாய் சாதவாகனா?" என்று வினவினான் நாகபாணன்.

"எந்த திட்டமும் காலத்தின் அனுகூலத்தையோ பிரதிகூலத்தையோ பொறுத்தது. இந்தச் சமயத்தில் காற்று உமது பக்கம் வீசுகிறது. எந்த விநாடியில் அது என் பக்கம் திரும்புமென்று சொல்லமுடியாது. நாம் திட்டம் தீட்டலாம். ஆனால் முடிவு காலத்தைப் பொறுத்தது. நமது கண்ணுக்குத் தெரியாத, அறிவுக்கும் எட்டாத ஏதோ ஒரு சக்தியைப் பொறுத்தது" என்று சொன்னான் கௌதமிபுத்ரன்.

"வேதாந்தம் பேசுகிறாய்" என்று ஏளனக் குரலில் சொன்னான் சாகனான நாகபாணன்.

"தவறென்ன?" என்று சாதவாகனன் வினவினான்.

"வேதாந்தம் பேசும் வயதல்ல இது."

"வேதாந்தம் வயதைப் பொறுத்ததல்ல. சிந்தனையைப் பொறுத்தது. விவேகத்தைப் பொறுத்தது."

"தர்க்கத்திலும் பரிச்சயம் இருக்கிறது உனக்கு."

"மனித வாழ்க்கையே ஒரு பெரிய தத்வம். அதன் ஓட்டமே சிறந்த தர்க்கம். ஒவ்வொரு மனிதன் காலமும் முன்னேற்றமும் சாதக பாதகங்களைச் சீர்தூக்கிப் பார்த்துத் தர்க்கித்து எடுக்கும் முடிவைப் பொறுத்திருக்கிறது" என்றான் சதகர்ணி.

சதகர்ணியின் பேச்சுத் திறமையையும் தர்ப்பத்தின் நுனியைவிடக் கூர்மையான புத்தியையும் உள்ளூர வியந்து கொண்ட நாகபாணன் அவனிடம் மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டிய அவசியத்தைச் சந்தேகமறப் புரிந்து கொண்டான். அதன் விளைவாக மேற்கொண்டு பேச்சு கொடுக்காமல் "காஷ்டானா! துடுப்புகளை நீ வாங்கிப் படகைச் செலுத்து. நான் சதகர்ணியுடன் பேசிக்கொண்டு வருகிறேன்" என்று கூறவே சதகர்ணியின் முதுகிலிருந்த குறுவாளை எடுத்தான் காஷ்டானன். இருப்பினும் தான் துடுப்பு தள்ளப் படகின் நடுவுக்குப் போய்விட்டால் சாதவாகனன் சித்தரஞ்சனியுடன் நெருங்கி உட்கார்ந்து விடுவானே என்று நினைத்துச் சிறிது தாமதித்தான். "வா இங்கே" என்று நாகபாணன் கடுகுரல் அவனை நடு

அமெரிக்க அதிபர் ரேகன் அன்னை தெரஸாவுக்கு "விடுதலை விருது" என்ற சிறந்த கௌரவத்தை அளித்திருக்கிறார். ஜனாதிபதி மாளிகையில் அதைக் கொடுக்கும்போது, "இந்த மெடலைக் கூட உருக்கி, பணமாக்கி, ஏழைகளுக்கு உதவி அளிப்பார் இவர்" என்று 'விட்' அடித்தாராம் ரேகன்.



—எஸ். இந்திரா.

முதல் அரசியல்வாதி: "திடீர்னு கராத்தே, குங்ஃபூவெல்லாம் பழகறீங்களாமே எதுக்காக?"
இரண்டாவது அரசியல்வாதி: "தலைவர் கிட்டே சபாநாயகர் போஸ்ட் கேட்கத்தான்!"

—வரணி பாலன்.



வுக்குச் செல்ல உந்தவே ஏதோ முணுமுணுத்துக்கொண்டு துடுப்புகளை வாங்கித் துழாவலானான் காஷ்டானன். மெள்ள "மாமா!" என்றழைக்கவும் செய்தான்.

"என்ன?" கள்ளென்று வந்தது நாகபாணன் கேள்வி.

"சித்தரஞ்சனி....." முனகினான் காஷ்டானன்.

"அவளுக்கென்ன?"

"எனக்கு நிச்சயிக்கப்பட்டவள்."

"ஆம். ஒரு வருஷத்துக்கு முன்பு."

"நிச்சயதார்த்தத்துக்குக் காலாவதி உண்டா?"

"உலகத்தில் எல்லாவற்றுக்கும் உண்டு. அவனவன் சாமர்த்தியத்தைப் பொறுத்து."

"நீங்கள் பேசுவது நியாயமல்ல."

"இதில் நியாய அநியாயம் எங்கு வருகிறது?"

"வேறு என்ன வரும்?"

"சாமர்த்தியம், பெண்கள் மனத்தை ஈர்க்கும் கவர்ச்சி. இவற்றைப் பொறுத்தது பெண்ணின் இணக்கம். சித்தரஞ்சனி யார் பக்கம் சாய்வாளோ?" என்று கூறிய நாகபாணன் பெரிதாக நகைத்தான்.

அந்த நகைப்பின் விளைவாகச் சினம் தலைக்கேற வேகமாகத் துடுப்புகளைத் துழாவினான் காஷ்டானன். படகு அஞ்சன்வேல் நதிக்குள் பிரவாகத்தை எதிர்த்து வேகமாகச் சென்றது. அதற்கு மேல் படகிலிருந்த யாரும் பேசவில்லை. சமுத்திரத்தின் அலைகளும் அஞ்சன்வேல் நதியின் சிற்றலைகளுமே இரைந்து கொண்டிருந்தன.

படகு நதிப் பிரவாகத்தை எதிர்த்துச் செல்லச் செல்லத் துடுப்பு துழாவுவது சிறிது கஷ்டமாயிருந்ததால் துடுப்பிலொன்றைத் தானே பிடித்துத் துழாவலானான் நாகபாணன். இப்படி செலுத்தப்பட்ட படகிலிருந்து எதிரே தெரிந்த அஞ்சன்வேல் கோட்டையை நோக்கினான் கௌதமிபுத்ரன். இதே கோட்டை பிற்காலத்தில் மிகப் பிரசித்தி பெற்றதென்றாலும் இக்கதை நிகழும் காலத்தில் சிறிய கோட்டையாகவே இருந்தது. இருப்பினும் எதிரே எழுந்த தாபோல் மலையும் காடும், அஞ்சன்வேல் நதியென்ற வாசிஷ்டி நதியும் அதற்குச் சிறந்த அரண்களாக இருந்தபடியால் அப்படி சுலபமாக அடைய முடியாத கோட்டையாகவே காட்சியளித்தது. தவிர மகாக்ஷத்ரபன் அந்தக் கோட்டையைத் தனது வீரர்களால் பெரிதும் பலப்படுத்தியிருந்தான். தூரத்தே தெரிந்த கோட்டையில் அதிக விளக்குகள் எரியாததால் பெரிய பிசாசு நிற்பது போன்ற பிரமையை அளித்தது கோட்டைக் கட்டிடம். படகு அதை நெருங்க நெருங்கப் பல காவல் வீரர்கள் நதிக்கரையோரம் நடமாடிக் கொண்டிருந்ததைப் பார்த்த கௌதமிபுத்ரன் கோட்டைக்குள் ஒருமுறை போய்விட்டால் தப்புவது கடினம் என்பதை உணர்ந்து கொண்டான். அந்தச் சமயத்தில் சித்தரஞ்சனியின் கை அவன் கையை நோக்கி நகர்ந்து அவனது சிறு கோடரியை அவன் கைகளில் திணிக்கவே அதைத் தந்திரமாகத் தனது ஆடையால் மறைத்துக்கொண்டான். கோடரியை எடுத்தது காஷ்டானன் அல்ல என்பது புரிந்ததால் மகிழ்ச்சியும், எடுத்தது சித்தரஞ்சனி என்பதால் தனிப்பட்ட உற்சாகமும் ஏற்பட்டது சதகர்ணிக்கு.

மெள்ள மெள்ளப் படகு கோட்டையை நெருங்கியதும் காஷ்டானனும் நாகபாணனும் படகைக் கரை சேர்த்தனர். படகிலிருந்து கரையில் தாவி இறங்கிய நாகபாணன், "சாதவாகனரே! பிராசீனமான இந்தக் கோட்டைக்கு வர வேண்டும். உமது வரவு நல்வரவாகட்டும்" என்றுகூறித் தனதுகையை நீட்ட சாதவாகனன் அவன் கையைப் பற்றிக் கரையில் இறங்கினான். பிறகு தனது கையை நீட்டிச் சித்தரஞ்சனியையும் கரையில் இறக்கியதும் நாகபாணன் அவர்களைக் கோட்டைக்கு அழைத்துச் சென்றான். அங்கிருந்த ஒரு மாடி அறையைச் சதகர்ணிக்குத் திறந்துவிட்டு "நேரம் ஓடிவிட்டது. சிறிது நேரம் உறங்குங்கள். காலையில் பேசுவோம்" என்று கூறிச் சித்தரஞ்சனியை அழைத்துக் கொண்டு சென்றுவிட்டான்.

அறை நல்ல விசாலமாக இருந்தது. அதன் சாளரத்திலிருந்து தாபோல் மலைச்சிகரங்களையும் கடலலைகளையும் பார்க்க முடிந்தது. அப்படிப் பார்த்துக் கொண்டே நீண்ட நேரம் நின்ற சதகர்ணி அறைக் கோடியிலிருந்த கட்டிலில் சென்று படுத்துக் கண்ணை மூடினான். அப்படியும் உறக்கம் வராததால் சிந்தனை வசப்பட்டிருந்த சமயத்தில் அறைக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்த ஓர் உருவம் கதவை மூடிவிட்டுக் கட்டிலை நோக்கி வந்தது. அவனருகில் வந்ததும் சிறிது நேரம் அவன் உறக்கத்தைச் சோதித்து நின்றது. பிறகு குனிந்து அவன் கையொன்றில் எதையோ திணித்தது. பிறகு வந்தபடியே ஓசைப்படாமல் அறையை விட்டுச் சென்றுவிட்டது. அது சென்றதும் கையில் திணிக்கப்பட்டதைக் கவனித்தான் சதகர்ணி. அது ஒரு முத்திரை ஓலை. முத்திரையைப் பிரித்துப் படித்தான். தான் பெரிய ஆபத்தில் சிக்கியிருப்பதை உணர்ந்தான் சதகர்ணி.

(தொடரும்)

ஆளுனரிடம் தமிழக அரசு ஜகா வாங்கியது ஏன்?

* எஸ். வேங்கடேசன், கும்பகோணம்.

? மாற்றுக்கட்சிகளைச் சேர்ந்தவர்களை நிபந்தனையின்றி அ.தி.மு.க.வில் சேர்த்துக்கொள்வது என்று அக்கட்சித் தலைமை முடிவு செய்துள்ளது பற்றி?

! ஏதோ இது நாள் வரை அக்னிப் பிரவேசம் நடத்திப் பார்த்துச் சேர்த்துக் கொண்டது போல்தான் அறிக்கை அமர்க்களப்படுகிறது!

* கே. ஜி. எஃப். பழனிச்சாமி, பெங்களூர்

? வி. ஜி. பன்னீர்தாஸ் சகோதரர்களின் சாதனைகளைப் பற்றி ஏன் யாருமே எழுத மாட்டேன் என்கிறார்கள்?

! சரியாப் போச்சு போங்க!

* ஆர். சிவராஜ், லால்குடி *

? மதுரை பல்கலைகழகத் துணைவேந்தர் நியமனத்தில் ஆளுனரிடம் தமிழக அரசு ஜகா வாங்கியது ஏன்?

! தமிழக அரசின் பலவித பலவீனங்களைச் சுட்டிக் காட்டுகிற நிகழ்ச்சி இது. முடிவாகத் தகுதியின் அடிப்படையில் ஆளுனர் நியமித்த துணை வேந்தரையே அரசும் ஏற்கிறது என்றால் தமிழக அரசு சிபாரிசு செய்தவர்கள் தகுதியற்றவர்களா? அப்படியானால் அந்த சிபாரிசுகளுக்கு வேறு காரணங்கள் உள்ளனவா? தமிழக அரசு சிபாரிசு செய்த பெயர்களையெல்லாம் ஒதுக்கிவிட்டு வேறு ஒருவரை நியமிக்க ஆளுனரைத் தூண்டிய சக்தி எது? என்றிப்படி பல கேள்விகள் எழுகின்றன. ஆளுனரிடம் மோதி வெற்றி காண முடியாது என்ற நிலையில் மோதிப் பார்த்து நெற்றி வீங்கிப் புடைக்க நின்றிருக்க வேண்டாம். ஓசைப்படாமல் அவர் முடிவை முதலிலேயே ஏற்றுக் கொண்டு போயிருக்கலாம். ஆக மொத்தம் ஆளுனர் — அமைச்சரவை இடையே ஒவ்வாமை என்பது மட்டுமல்ல; அமைச்சரவையிலேயே ஒப்புரவு இல்லை!


* ஒவ்வாமை


* தலைமைப் பீடம்


* தோல்விக்குக் காரணங்கள்


* மனித மனம்

* ராம்தினகர், கவுந்தப்பாடி.

? நடிகை பத்மினி கவர்ச்சியாக நடிப்பேன் என்று சொல்வது பற்றி.....?

! கவர்ச்சி என்ற சொல்லை மிகவும் கேவலமான அர்த்தத்தில் சமீப காலமாக சினிமா எழுத்தாளர்கள் பயன்படுத்தி வருகிறார்கள். 'கவர்ச்சியாக நடிப்பேன்' என்றுதான் பத்மினி கூறியுள்ளார்; 'கவர்ச்சிகரமாக தோற்றமளிப்பேன்' என்றல்ல. பாட்டி வேஷத்தில்கூட ரசிகர்களைக் கவரும் விதமாக நடிக்க முடியும் என்பதைத்தான் அவர் நிரூபித்துவிட்டாரே!

* எஸ். ஆர். லதா, அய்யம்பேட்டை.

? மது விலக்கு அமலில் இல்லாதபோது மது விலக்கு அமைச்சர் என்று எப்படி கூறலாம்?

! 'மது விலக்கு கொண்டு வரப் போகிறேன்' என்று அவ்வப்போது ஒப்புக்குக் கூறிக் கொண்டிருக்கிறார் அல்லவா? அதற்காகத்தான் மது விலக்கு அமைச்சர்!

* அ. கா. முஹம்மது அயூப்கான், கொடைக்கானல்.

? கண்ணதாசனின் கிராமியப் பாடல்கள் வைரமுத்துவின் கிராமியப் பாடல்கள் — ஒப்பிடுக.

! மண் மணத்தோடு மனித மனத்தையும் அறிமுகப்படுத்தியவர் கண்ணதாசன்.

* எஸ். பாலாஜி, செங்கல்பட்டு.

? டி.கே.சி.—ம.பொ.சி. இருவரையும் ஒப்பிடுங்களேன்?

! இருவருக்கும்பெரியமீசைஎன்பதொன்று தான் ஒற்றுமை. மற்றபடி அவர் வேறே: இவர் வேறே.

* கவி கண்ணன், போடி நாயக்கனூர்.

? கொ.ப.செ. என்று குறிப்பிட்டால் ஜெயலலிதாவுக்குப் பிடிக்காதாமே?

! பிடிக்காது என்று தெரிந்தும் இப்படி எழுதியுள்ள கவி கண்ணனே, ஜா.இ.கொ.!

* ஆர். அரிகோபி, குடியாத்தம்.

? தமிழக அரசு நூலக வளர்ச்சியில் எவ்வித ஈடுபாடும் காட்டாது மெத்தனமாக இருப்பது ஏன்?

! வளர்ச்சியில் அக்கறை காட்டவே வேண்டாம் ஐயா, வீழ்ச்சிக்கு உதவாமல் இருந்தாலே போதும். நூலக வரி என்று ஒவ்வொரு நகராட்சியும் வசூலிக்கிறது. அந்த வரியை நூலக வளர்ச்சிக்கு ஒழுங்காகப் பயன்படுத்தினாலே போதும். அதைக் கூடச் செய்வதில்லையே இந்த அரசு!




* பெரிய...... ...... மீசை!

* தி. ஜம்புநாதன், பூவாளூர்.

? திண்டிவனம் ராமமூர்த்திக்கு மத்திய மந்திரி சபையில் இடம் கிடைக்காதது ஏமாற்றத்தைத் தந்துள்ளதா?

! அமைச்சராக்கி சில இலாக்காக்களைக் கொடுத்துவிட்டு அவற்றைத் திறம்பட அவரால் நிர்வகிக்க முடியுமா முடியாதா என்று பரீட்சித்துக் கூடப் பாராமல் மறுநாளே ஒரு இலாக்காவைப் பறித்துக் கொண்டு மட்டம் தட்டுவதைவிட அமைச்சர் பதவி தராமல் இருப்பதே மேல்!

* எம். இராஜேந்திரன், லால்குடி.

? கிரிக்கெட் ஆட்டத்தில் இலங்கையில் தங்கள் தோல்விக்கு அம்பயர்தான் காரணம் என்று கபில்தேவ் கூறுகிறாரே?

! அம்பயரும் ஒரு காரணம் என்றுதான் சொல்லியிருக்கிறார். அதில் குறை காணவும் முடியவில்லை. மற்ற காரணங்கள்: ஒன்று, போதிய முன்னறிவிப்பு, முன்னேற்பாடு, பயிற்சி ஏதுமின்றி, ஏனோதானோ என்று ஒரு குழுவை சேகரித்து அனுப்பியது. இரண்டு, இந்திய அணி சரியாக விளையாடாதது. மொத்தத்தில் 'ச்சூ, தம்மாத்தூண்டு இலங்கை தானே' 'என்று கிரிக்கெட் கண்ட்ரோல் போர்டு தலைவர் முதல் ரிசர்வ் ஆட்டக்காரர் வரை எல்லாருமே லேசாக எடுத்துக்கொண்டதானது பழி வாங்கிவிட்டது.

* கோ. சு. சுரேஷ், கோவை.

? கிரிக்கெட் போர்டு தலைமைப் பீடம் ஸ்ரீராமன் அவர்களுக்குக் கிடைத்துள்ளது பற்றி?

! எல்லாவிதத்திலும் தகுதியுள்ளவர், சந்தோஷம். அவரது அனுபவமும், செயலூக்கமும் இனிய சுபாவமும் இந்திய கிரிக்கெட்டில் "அரசியல்" ஒழியவும் ஒற்றுமை ஓங்கவும், ஊக்கம் பெருகவும் முயற்சி வெல்லவும் உதவட்டும்.

* எம். சம்பத், வேலாயுதம்பாளையம்.

? சுதந்திரத் தமிழ் ஈழத்திற்காகத் துப்பாக்கி ஏந்திப் போரிடவும் தயங்கமாட்டோம்! என்று கருணாநிதி கூறியுள்ளாரே?

! ஒன்று துப்பாக்கி பேச வேண்டும் அல்லது சமரசம் பேச வேண்டும். அஹிம்சா மார்க்க சத்தியாகிரஹத்தில் நம்பிக்கை கொள்ள வேண்டும் அல்லது ஆயுதம் தாங்கிப் போரிடுவதில் உறுதியாக இருக்க வேண்டும். "துப்பாக்கி ஜனநாயகம்" என்பது "ஜனநாயக சோஷலிஸம்" போன்று இரண்டுங்கெட்டானான அர்த்தமற்ற ஒன்று. இதைக் கருணாநிதி மட்டுமல்ல; பிரச்னையில் சம்பந்தப்பட்டிருக்கும் எந்தத் தரப்பினருமே புரிந்து கொண்டிருப்பதாய்த் தெரியவில்லை.

* ரூ 10 பரிசு பெறுபவர்:

ஆர். சிவராஜ்,
40, ஓமக்குளத் தெரு,
லால்குடி—621 601.

* கவர்ச்சி




* ஏமாற்றம்?



* சரியாப்......



...... போச்சு!









திருவிளையாடல் ஸ்டைல் இண்டர்வியூ

கிரேஸி மோகனின் புதிய நாடகம் **BEWARE OF MADHU**. அதில் ஒரு காட்சி:

'சிவாஜி ஸேல்ஸ் ஸ்டோர்ஸ்' என்கிற நிறுவனத்துக்குக்கதாநாயகன்மாது. இண்டர்வியூவுக்குப் போகிறான். சிவாஜியின் பரம ரசிகரான பாண்டியன்தான் கம்பெனியின் மானேஜர்.

மானேஜர்லேட்டாய்வருகிறார்.ஸ்டெனோ ஐக்கம்மா அவரைக் கேட்கிறாள். "ஏன் சார் லேட்டு?"

மானேஜர்: அம்மா....! அதை எப்படிம்மா சொல்லுவேன்? கைல ஆணி குத்தினா, டிங்க்சர் போடலாம்.... ஆனா அதே ஆணி கார் டயர்ல குத்தினா? பங்க்சர் போடணுமே! டிக்கில டயர் இருந்தது.... நான் இல்லேங்கலே! ஆனா அதுல காத்து இல்லையே! ஆயிரம் இருந்தும், வசதிகள் ஏராளமா இருந்தும், நோ பீஸ் ஆஃப் ஏர்!

☆ ☆ ☆ ☆ ☆

மானேஜர்: அந்தப் புள்ளையை உள்ளே அனுப்பும்மா, இண்டர்வியூவுக்கு!

(மாது உள்ளே வர, மானேஜர் பாண்டியன் கனைத்துவிட்டு, ஆரம்பிக்கிறார், இண்டர்வியூவை.)

பாண்டியன்: கேள்விகளைநீகேட்கிறாயா? இல்லே நான் கேட்கட்டுமா?

மாது: (ஓ! இன்னிக்குத் திருவிளையாடல் ஸ்டைல்லதான் இண்டர்வியூ என மகிழ்ந்து) நீங்களே கேளுங்க.

பா: பிரிக்க முடியாதது?

மா: காதல் காட்சியில் ஹீரோ – ஹீரோயினே!

பா: அதைப் பிரித்தெடுத்து எறிவது?

மா: கிழங்கள் நிறைந்த சென்ஸார் போர்டு!

பா: சேர்ந்தே இருப்பது?

மா: சினிமாவும், மசாலாவும்!

பா: சேராதிருப்பது?

மா: டப்பிங் வாய்சும், உதட்டசைப்பும்!

பா: சொல்ல முடியாதது?

மா: எந்தப் படம் ஓடுமென்று.

பா: சொல்லக் கூடியது?

மா: நல்ல படம் ஓடுமென்று. அதாவது ஒரே வாரத்தில் தியேட்டரை விட்டு!

பா: கேட்கக் கூடாதது?

மா: நடிகையின் வயசு.

பா: கேட்டு ரசிப்பது?

மா: நடிகையின் சைஸ்.

பா: பார்க்கக் கூடாதது?

மா: நீலப்படம்.

பா: பார்க்க முடியாதது?

மா: நீளப்படம் (28 ரீல்).

பா: பார்த்து ரசிப்பது?

மா: அனுராதா டான்ஸ்.

பா: கலைக்க முடியாதது?

மா: சோவின் தலை!

பா: கலைந்தே இருப்பது?

மா: டி. ராஜேந்தர் தலை!

பா: தேட வேண்டியது?

மா: படங்களில் கதை.

பா: அப்பட்டமாய்த் தெரிவது?

மா: படங்களில் சதை!

பா: புரொடியூஸர் என்பவர்?

மா: தோளில் போட்ட துண்டைத் தலையில் போட்டுக் கொள்பவர்.

பா: கலகலப்பான காமெடிக்கு?

மா: கவுண்டமணி.

பா: கனமான காமெடிக்கு?

மா: உசிலைமணி!

தொகுப்பு: **மௌஷ்மி.**

* 'மாது ஜாக்கிரதை' நாடகத்தில் பாண்டியனாக சுப்பிரமணியன், மாதுவாக பாலாஜி. படம்: தாமு.

ஜனனி

கதாநாயகியின் பெயரையே படத்தின் தலைப்பாக வைப்பது சமீபத்திய ஃபாஷன் போலும். அந்த ஃபாஷனின் அடிப்படையில் ஜெமினியின் ஜனனியின் பவனி.

ஏறக்குறைய முக்கிய பாத்திரங்கள் எல்லாமே புதுமுகங்கள்.

கல்லூரிக் காதலில் தொடங்கிக் கல்லூரிக் காதலிலேயே முடிவடையும், காதலில் தோய்க்கப்பட்ட ஒரு படம்.

கதாநாயகன் நாயகியின் கடைக்கண் பார்வைக்காகக் கழுத்தளவு பீப்பாய் தண்ணீரில் சாதகம் செய்வது, அப்புறம் எல்லா இசைக் கருவிகளாலும் உதைபடுவது என்று முதற் பகுதி முழுக்கக் கலகலப்பு.

ஜோலார்ப்பேட்டையை எழுப்ப காப்பி, ம. விற்பதும், ஆண்டு விழாக் கூத்தடிப்பதும் இயல்பான கல்லூரித்தனங்கள்.

பிற்பாடு கதாநாயகன், நாயகியின் நிச்சயித்த மாப்பிள்ளையைத் திருத்த சூதாடியாவதும், திருட்டுத்தனமாய் வீட்டுக்குள் நுழைந்து வில்லனின் தங்கையைப் பயமுறுத்துவதும், கடைசியில் வில்லன் திருந்திக் கடற்கரையில் அலைகளுக்கிடையே காதலர்களை ஒன்று சேர்த்துவிடுவதும், பரவாயில்லை. காதல் ஜெயிக்கிறாற் போல் காட்டிவிட்டார்கள்.

பவ்யா ஹீரோயின். மேல் வரிசைப் பல் கொஞ்சம் எடுப்புதான் என்றாலும், ஜீன்ஸும், ஷர்ட்டுமாய் நடக்கும்போது, ஒரு சிலிர்ப்பு சிலிர்த்துக் கொண்டு தொய்ந்தாற் போல் டான்ஸ் ஆடும்போது, அலட்சியமாய் மாருதியைத் திறந்து அமர்ந்து சிறிக்கொண்டு போகும்போது ரேஸ் குதிரையை நினைவுபடுத்துகிறார். கிளாமர் ரோல்களுக்கு வெகு பொருத்தம்.

உதயகுமார் சிரிக்க வேண்டிய நேரத்தில் இறுகிய முகம். வருத்தப்பட வேண்டிய காலத்தில் நகுமுகம் என்று பாவங்களை உல்ட்டா பண்ணி விளையாடி இருக்கிறார். ஒத்திகையை இன்னும் நன்றாகப் பண்ணியிருக்கலாம்.

வினோத்தான் வில்லன். முதலில் குடிகாரன். அப்புறம் நல்லவன். அப்புறம் வில்லன் என்று காரெக்டர் குழப்பம். ஆனால் ஆசாமி தளரவில்லை. கொடுத்த வரைக்கும் செய்துவிட்டார்.

மியூஸிக் முருகேஷ். புதிதாகத் திரைப் பிரவேசம் செய்திருக்கும் அப்பா காரெக்டர்காரர். ராகங்களில் வசனங்களைப் பிய்த்து உதறியிருந்தார். இதில் அப்படி இல்லாமல் கொஞ்சம் வழு வழு!

எம். எஸ். வி. மியூஸிக். 'மன்னிக்க மாட்டாயா' ஓ. கே. முதல் பாட்டில் உடுக்கை, கிடார் என்று இஷ்டத்திற்குக் கொட்டி, 'முதல் பாட்டின் இசை இனிமையானதா? இல்லையா?' என்று பட்டி மன்றம் வைக்கலாம் போலச் செய்துவிட்டார்!

கதை, திரைக்கதை, வசனம், பாடல்கள், டைரக்ஷன் (ஏதாவது விட்டுப் போயிருக்கிறதா என்ன?) என்று சகல சமாசாரங்களையும் தோளில் தாங்கியிருப்பவர் நேதாஜி. (ஏன் நடிக்கவில்லையாம்?) அருமையாகச் செய்திருக்கிறார் — என்று சொல்ல வைக்காவிட்டாலும் மோசமாகப் பண்ணியிருக்கிறார் என்று முணுமுணுக்கவிடாமல் செய்திருக்கிறாரே. அதுவே போதும்.

—ஜெயமன்மதன்.





புலி

இன்னும் ஒரு போலீஸ் ஆஃபீஸர். காக்கி உடுப்பு போடாமல், கௌபாய் ட்ரெஸ் போட்டு வில்லன்களேயும், அவர்களுக்குத் துணை போகும் அட்ஜெஸ்ட்மெண்ட் இன்ஸ் பெக்டர்களேயும் தீர்த்துக் கட்டும் டிபார்ட் மெண்ட் இளேஞன். சிரஞ்சீவியின் உடை யிலிருக்கும் முரட்டுத்தனம் முகத்தில் முழு தாய் வரவில்லே. இருந்தாலும் என்ன சுறு சுறுப்பு!

ஸீன் நம்பர் ஒன்று. கையில் மெஷின் கன்களோடு காத்திருக்கும் முரட்டுக் கூட் டத்தைநிராயுதபாணியாய்ச் சென்றுதீர்த்துக் கட்டுதல். ஓ. கே.

ஸீன் நம்பர் இரண்டு: நிறைய தெலுங்கு மேக்கப்பும், குறைச்சலாய் உடையும் போட்ட ராதாவோடு மலே, காடு, மேகம் என்று துரத் தித் துரத்தி சூப்பர் ஸ்பீடில் டான்ஸ் டூயட். ஓ. எஸ். ஸார்.

ஸீன் நம்பர் மூன்று: பாசமாய்க் காத்திருக் கும் தங்கையோடு கொஞ்சிக் குலாவிவிட்டு மாமா, மாமியிடமும் நகைச்சுவையோடு பாசம் காட்டிவிட்டு அவர்களே வில்லன்கள் அழித்தவுடன் அழத் தயாரா? நான் ரெடி ஸார்.

ஸீன் நம்பர் நான்கு: மறுபடியும் துப் பாக்கி வில்லன் — ஐந்தாவது ஸீனில் மறு படியும் டூயட், ஆறுவது ஸீனில் மீண்டும் பாசக் கண்ணீர் — என்று குடை ராட்டினம் மாதிரி ஸீன்களே அடுக்கிக் கொண்டே போகிறார்கள். சிரஞ்சீவி சளேக்க வேண் டுமே! ஊஹ்ஹூம்.

ஸ்டண்ட் ஸீன்களில் காமிரா அநாயாச மாய் விளேயாடுகிறது. புதையுண்ட இடத் திலிருந்து கல்லேயும், மண்ணேயும் புரட்டிக் கொண்டு கார் வெளியே வரும் அந்த ஸீன் ஒன்றே போதும்.

கனமான நாவல்களேப் படித்துக் களேத் திருக்கும்போது, கொஞ்சம் ஆசுவாசப்படுத் திக் கொள்ள காமிக்ஸ் படிப்பது போல் இந்தப் படம்.

இரண்டரை மணி நேரம் எல்லாவற்றை யும் மறந்த சுறுசுறு.

—ஜெயமன்மதன்.

ஒரு ரத்தப் பத்திரிகை

* இந்தியாவில் ரத்த சம்பந்தப்பட்ட செய்திகளே மட்டும் தாங்கி வரும் ஒரு பத்திரிகை வருகிறது என்றுல், வியப்பாக இல்லே? Blood Therapy Journal' என்ற இந்தப் பத்திரிகை புதுடெல்லியிலிருந்து வெளி வருகிறது. இதில் ஏராளமான மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் மருத்துவக் கட்டுரைகளே எழுதிக் கொண்டு வருகிருர்கள்.

—தகவல்: ஏ. கே. நாசர்.

உணர்வுகள் உறங்குவதில்லை

12. மௌனம் உரையாடும்

இந்திராணியின் வரலாற்றை எழுதத் தொடங்கியபோதுதான் பிரச்னை எழுந்தது. வரலாற்றில் எதைச் சேர்ப்பது, எதை விடுவது? இது பற்றிய விஷயத்தில்தான் முதலில் சந்திரசூடனுக்குக் குழப்பம் இருந்தது. பெரும் புகழும் பெற்ற நபர்களைப் பற்றி எழுதும் போது இதுதான் பிரச்னை. ஒருவருடைய புகழ் பெற்ற காலத்தை மட்டும் எழுதுவதா அல்லது பூர்வீகத்திலிருந்து தொடங்குவதா என்னும் பிரச்னை எழும். பூர்வீகத்தையும் எழுதுவதாயிருந்தால் அந்த நபரின் இருண்ட காலங்களைப் பற்றிக் கூற வேண்டியிருக்கும். புகழ் ஏணியில் ஏற அவர் பட்ட பாட்டையும், கையாண்ட வழிமுறைகளையும் கூற வேண்டியிருக்கும். வழிமுறை என்று வரும்போது அங்கேதான் சிக்கல் தோன்றும். வழிமுறை அசிங்கமாயிருக்கும். அதை எப்படி எழுதுவது? அதைப் பற்றிச் சொன்னால் அந்த நபர் பெற்றிருந்த புகழ் கறைபட்ட மாதிரி ஆகிவிடும். ஆகவே, பொய் சொல்ல வேண்டிய நிலை வரலாற்றை எழுதுபவனுக்கு வந்து சேரும். பலருடைய வாழ்க்கை வரலாற்றில் இந்தப் பொய்கள்தாம் மிகுதி.

இங்கே ஒரு பெண்ணைப் பற்றிக் கூற வேண்டிய கட்டம். ஒரு சிறு கிராமத்தில் பிறந்து வளர்ந்த ஒரு சாதாரணப் பெண், சினிமாத் துறையில் பரபரப்பையும், கிளுகிளுப்பையும் ஏற்படுத்திப் பெரும் புகழ் பெற்ற வரலாற்றை எழுதத் தொடங்கும் போது சந்திரசூடனுக்கு இந்தப் பிரச்னை வந்தது.

ஒருபெண்ணின் இரகசியங்களை வெளியே சொல்ல வேண்டியிருக்கிறதே என்றுதான் முதலில் குழம்பினார். ஆனால், முன்னேற்றம் என்பது இப்படி பல வழிகளில் வருவதுதான் என்பதால் சொல்ல வேண்டியவைகளைச் சொல்லியே தீர வேண்டும் என்ற முடிவுக்கு வந்து எழுதவும் தொடங்கிவிட்டார்.

கொஞ்சம் எழுதியதும் அலுப்புத் தட்டியது. நோட்டுப் புத்தகத்தை மூடி வைத்துவிட்டு, சற்று நேரம் வெளியே உலவி வர எண்ணி எழுந்தார். மாடியிலிருந்து இறங்கிய போதுகீழே வாசலில்பார்வதிநின்றுகொண்டிருந்தாள்.

"இந்திராணியின்வரலாற்றைத்தொடங்கிவிட்டீர்களா? நகல் எடுத்துத் தரட்டுமா?" என்று கேட்டாள்.

"எழுதிக் கொண்டிருக்கிறேன். இடையில் வண்டி சண்டித்தனம் பண்ணி நிற்கிறது" என்று கூறி சிரித்தார். பிறகு, "மேஜை மீது போட்டிருக்கிறேன். எடுத்துப் போய் நகல் எடுத்து வை. ஏதாவது பிழை இருந்தால் திருத்து." என்றார்.

"ஐயோ, நான் திருத்தவா? பிரும்மாவின் படைப்பில் நான் தலையிடக் கூடாது" என்றாள் பார்வதி.

"என்னுடைய எழுத்திலும் அவசரத்தில் எத்தனையோ பிழைகள் போட்டிருப்பேன். தேடிப் பார்த்தால் அகப்படும்" என்று சிரித்தபடியே வாசலைக் கடந்தார் சந்திரசூடன்.

சக்தி சிவத்தைப் பார்த்தால் மனத்திற்குத் தெம்பாயிருக்கும் என்று எண்ணியவராய்க் கோயிலை நோக்கி நடந்தார். கோயிலில் மூலஸ்தானத்தின் கதவு சாத்தியிருந்தது. சக்தி சிவத்தைத் தேடினார். பிராகாரத்தின் பின்புறத்துத் திண்ணையில் மாலை கட்டிக் கொண்டிருந்த பக்கிரிசாமியிடம் விசாரித்தார். அவனுக்கும் தெரியவில்லை. கோயிலை அடுத்திருந்த தோட்டத்திற்குள் சென்றார்.

அந்தமாதிரியான அந்தி வேளையில் தோப்பின் சூழ்நிலையில் சக்தி சிவத்தின் அருகே மௌனமாக அமர்ந்திருப்பது அவருக்கு ஓர் அனுபவம். அந்த வேளையில் மனம் இலேசாகி ஏதோ ஒருவித ஆனந்தச் சூழ்நிலையில் அமிழ்ந்து விடுவது போலிருக்கும். இருவரும் ஒரு வார்த்தைகூடப் பேசுவதில்லை. மௌனந்தான். ஆனால் அப்போது எவ்வளவோ விஷயங்கள் மனத்தில்புலனாகும்! அது ஒருசுகானுபவம். சொல்லிப் புரிய வைக்க முடியாது. மௌனம் உரையாடும் விந்தை இது!

ஒரு சமயம் பௌத்த ஞானி ஒருவர், சூன்யத்தைப் பற்றிய சிந்தனையில் ஒரு மரத்தடியில் அமர்ந்திருந்தார். ஒன்றும் இல்லாதது சூன்யம். ஆனால் அது இருக்கிறது! ஒன்றுமே இல்லாதது எப்படி இருக்க முடியும்?


அப்போது மரத்திலிருந்து மலர்கள் அவரைச் சுற்றிச் சொரிந்தன. "ஞானியே, சூன்யம் பற்றிய உன் உரையாடலுக்காக உன்னைப் போற்றுகிறேன்" என்று அந்த மரம் மெல்லச் சொல்லிற்று.

"நான் எதுவுமே பேசவில்லையே" என்றார் ஞானி.

"நீயும் பேசவில்லை, நானும் கேட்கவில்லை. இதுதான் உண்மையான சூன்யம்" என்று கூறி, மலர்களை மீண்டும் சொரிந்தது மரம்—

கோயில் தோட்டத்திலும் சக்தி சிவத்தைக் காணவில்லை. சந்திரசூடன் ஒரு மரத்தடியில் அமர்ந்தார். குளிர்ந்த மரங்கள் காற்று வீச

ர.சு.நல்லபெருமாள்



சுக்கு மெல்ல அசைந்து கொண்டிருந்தன.

குளிர்ந்த காற்று தோப்பினுள் வீசிக் கொண்டிருந்தது. சந்திரசூடன் சட்டென்று கைக்கடிகாரத்தைப் பார்த்தார். மணி ஆறு. இயற்கையின் வனப்பை ரஸித்ததில் ஒன்றரை மணி நேரம் போனதே தெரியவில்லையே!

சந்திரசூடன் வெறுப்புடன் முகத்தைச் சுளித்தவாறே மரத்தடியிலிருந்து எழுந்தார். கோயிலை நோக்கி நடந்தார். கோயிலுக்குள் இருட்டாயிருந்தது. இன்னும் விளக்கேற்றப் படவில்லை. பலி பீடத்திற்கு அருகே, தொடுத்திருந்த மலர் மாலைகளை வைத்துவிட்டு,பக்கிரிசாமி எங்கோ போய்விட்டான். கோயிலுக்குள் யாருமே இல்லை. சக்தி சிவம் எங்கே போய்விட்டார்? அதுவும் மாலை பூஜை வேளையில்?

மூலஸ்தானக் கதவு சாத்தியிருந்தது. கதவருகேசென்றுஇடைவெளிவழியாகஉள்ளே பார்த்தார் சந்திரசூடன். உள்ளே ஒரு அகல் விளக்கு மட்டும் எரிந்து கொண்டிருந்தது. கதவை மெல்லத் திறந்தார். உள்ளே கண்ட காட்சி அவருக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது.

நின்றகோலத்திலிருந்த அம்மன் சிலையைச் சக்தி சிவம் அணைத்தவாறு இருந்தார். சந்திரசூடன் பதற்றமடைந்தவராய்ப் பாய்ந்து சென்று சக்தி சிவத்தின் தோள்களைப் பற்றினார். சக்தி சிவத்திற்கு உணர்வில்லை. கண்கள் மூடியிருந்தன.

சிலையைச் சுற்றி வளைத்திருந்த சக்தி சிவத்தின் கரங்களை மெல்ல விலக்கினார். சக்தி சிவம் பிடிப்பற்று, சந்திரசூடன் மீது சரிந்தார். அவ்ரைத் தாங்கியபடி இரண்டு எட்டுக்கள் நடந்து சுவரில்சாய்ந்தப்படி அவரை அமர வைத்தார். அங்கிருந்த வேறு இரண்டு விளக்குகளை ஏற்றினார். விளக்குகளின் ஒளியில் சக்தி சிவத்தின் முகம் சிவந்து தோன்றியது.

சட்டென்று சக்தி சிவம் கண்களை விழித்தார். சற்று நேரம் பார்வை சந்திரசூடன் மீதே நிலைத்து நின்றது. பிறகு குறுநகை அவருடைய இதழ்களில் தோன்றியது. ஒரு நீண்ட பெருமூச்சுவிட்டார்.

''சாமி.....'' என்று சந்திரசூடன் மெல்ல அழைத்தார்.

சக்தி சிவம் திடீரென்று உற்சாகமடைந்தவராய் எழுந்து நின்றார். சந்திரசூடனின் தோள்களைப் பற்றியபடி, ''சேதி தெரியுமா? தேவி வந்தாள். என்னோடு பேசினாள். ஆடினாள். பாடினாள், விளையாடினாள். ஓ....! என்னைக் கட்டிப் பிடித்து அணைத்துக்கொண்டாள்! இதோ என் மார்பில் சந்தனம் வீசுகிறது பார். முகர்ந்து பார்'' என்று படபடப்புடன் பேசினார்.

சந்திரசூடன் அவருடைய மார்பை முகர்ந்து பார்த்தார். அரைத்த சந்தனத்தின் மணம் கமழ்ந்தது!

''சாமி, சாயரட்சை பூஜைக்கு நேரமாகிவிட்டதே'' என்றார் சந்திரசூடன்.

''ஆமாம், ஆமாம்'' என்று முணகியபடியே சக்தி சிவம் கர்ப்பகிருஹத்தை விட்டு வெளியே வந்து, அபிஷேகத்திற்கு நீர் எடுப்பதற்காகக் கிணற்றை நோக்கி நடந்தார்.

சந்திரசூடனுக்குத் திகைப்பு நீங்கவில்லை. நெஞ்சு படபடத்தது. சிந்தித்தவாறே வீட்டை நோக்கி நடந்தார். வீட்டை நெருங்கியபோது நன்றாக இருட்டிவிட்டது. முற்றத்துக்கு வந்தவர் கீழ் வீட்டின் ஜன்னல் வழியாகப் பார்த்த போது பார்வதி ஏதோ ஒரு நோட்டுப் புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தது தெரிந்தது. சந்திரசூடன் மாடிக்குச் சென்றார்.

அவருடைய காலடி ஓசையினால் கவனம் கலைந்த பார்வதி தலையை நிமிர்த்தி அவர் படியேறிச் சென்றதைக் கவனித்தாள். பிறகு மீண்டும் நோட்டுப் புத்தகத்தைப் படிப்பதில் ஆழ்ந்தாள். இந்திராணியின் வரலாறு அது. நகல் எடுப்பதற்காக எடுத்து வந்திருந்தாள். முன்னுரையை ஆவலோடு படித்தாள். இந்திராணியின் வரலாற்றிற்கு மிகச் சுருக்கமாக முன்னுரை அமைந்திருந்தது.

அவர் எழுதியிருந்தார்:—

'மனிதன் இரண்டு விதங்களில் முன்னேற முடியும். ஒன்று, திறமையினால்; மற்றொன்று அதிர்ஷ்டத்தினால். திறமையினால் முன்னேற மிகமிகச் சங்கடப்பட வேண்டும். அப்போதும்கூட கொஞ்சம் அதிர்ஷ்டமும் துணை இருக்க வேண்டும்.

ஆனால் நல்ல அதிர்ஷ்டம் இருந்துவிட்டால் திறமையே தேவை இல்லை. வெறும் அதிர்ஷ்டம் முட்டாள்களைக் கூடப் பெரிய பதவிகளில் இருத்தி வைத்திருக்கிறது! இதில் இந்திராணி எந்த விதம்? இதைப் பற்றிய விவரங்கள்தாம் இவளுடைய கதை...

முன்னுரையைப் படித்த பார்வதிக்கு இந்திராணியின் வரலாற்றில்ரசனை தோன்றியது. இந்திராணியின் கவர்ச்சியைப் பற்றி சந்திரசூடன் எழுதியபோது, அந்தக் கவர்ச்சி அவள் பாவாடை கட்டித் திரிந்த காலத்திலேயே அவளுக்கு மெருகூட்டத் தொடங்கி விட்டதையும், ரெங்கபுரம் கிராமத்து இளவட்டங்களை அது படுத்திய பாட்டையும் மிகுந்த சடுபாட்டுடன் எழுதியிருந்தார். அந்த வர்ணனைகளைப் படித்தபோது சந்திரசூடனின் ரசனையின் ஆழத்தையும், லயிப்பையும் உணர்ந்து பார்வதி வியந்தாள்.

ஓ! எவ்வளவு ஆழ்ந்த லயிப்புடன் அழகை வர்ணித்திருக்கிறார்! உண்மையிலேயே இந்திராணிக்கு அவ்வளவு அழகும் கவர்ச்சியுமா இருந்தன......?

இந்திராணியை சினிமாப் படங்களில் பார்த்திருக்கிறாள். ஆனால் சந்திரசூடன் கூறுவது போல் அவளுக்கு அவ்வளவு கவர்ச்சியா இருந்தது? எத்தனை முறை இந்திராணி அரைகுறை ஆடையுடன் சினிமாவில் தோன்றியதைக் கண்டு பார்வதி அருவருப்புடன் முகத்தைச் சுளித்திருக்கிறாள். ஏன்தான் இந்த ஆண்கள் இதைப் பார்த்துவிட்டு இப்படி ஆர்ப்பாட்டம் செய்கிறார்களோ? அப்படி என்ன யாருக்கும் இல்லாத அபூர்வமான கவர்ச்சி அவளுக்கு.....?

பார்வதி கட்டிலிலிருந்து எழுந்தாள். உள்

அறைக்குச் சென்று விளக்கை ஏற்றினாள். அங்கிருந்த பெரிய நிலைக் கண்ணாடியின் முன்பு நின்று கொண்டு தன்னைப் பார்த்தாள். பார்த்துக் கொண்டே இருந்தாள்.

இந்தக் கவர்ச்சிதானே இந்திராணிக்கும்? இதில் என்ன வித்தியாசம்? பார்வதிக்குப் புரியவில்லை.

திடீரென்று எதிரே இருந்த கண்ணாடி சலனப்பட்டது போலிருந்தது. கண்ணாடியில் முன் அறை வாசலை அடுத்திருந்த ஜன்னல் பிரதிபலித்தது. அந்த ஜன்னலில் ஏதோ ஓர் உருவம் தோன்றி மறைந்ததாக உணர்ந்தாள். திடுக்கிட்டவளாய்த் திரும்பிப் பார்த்தாள். ஜன்னலில் யாருமில்லை. மறுகணம் எட்டிப் பாய்ந்து விளக்கை அணைத்தாள். இருள் அவளை ஆடையாக மூடிக்கொண்டது. மீண்டும் ஜன்னலைப்பார்த்தாள். யாருமில்லை. கீழே கிடந்த ஆடைகளைப் பரபரப்புடன் அள்ளி உடுத்திக் கொண்டு முன் அறைக்கு வந்தாள். ஜன்னல்வழியாகவெளியேஎட்டிப் பார்த்தாள். மாடியில்விளக்குஎரிந்துகொண்டிருந்தது. மாடி ஜன்னலை அடுத்து சந்திரசூடன் நாற்காலியில் அமர்ந்தபடி வெற்றிலை போட்டுக் கொண்டிருந்தது தெரிந்தது. கீழே வராந்தாவில் பரணி, மேஜை விளக்கடியில் அமர்ந்திருந்தான். அவனுக்குமுன்னே ஏதோ ஒரு புத்தகம் திறந்துகிடந்தது. உயரே உத்திரத்தை வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தான்.

''சேச்சே, ஜன்னலை மூடாமலிருந்துவிட்டேன். நல்லவேளை யாரும் வரவில்லை. ஏதோ பிரமைதான்'' என்று முனகியபடியே நிம்மதியாகப் பெருமூச்சுவிட்டாள்.

(தொடரும்)

ஸ்பாட்லைட்



எம். ஜி. ஆர். பெயரைச் சொல்லாமல்
கடந்த தேர்தலில் நீங்கள் (இ. காங்கிரஸார்)
ஜெயித்திருக்க முடியாது. அவர் சுண்டு விரல்
அசைத்தால் நாடே அசையும்.

—ஜெயலலிதா.

எங்களுக்குப் பிச்சை போட்டதாகக் கூறு
கிறாயே! உன் தலைவனை அமெரிக்கா அனுப்பி
ய து யார்? புருக்ளின் மருத்துவமனைக்கு
அனுப்பியது யார்? பேச முடியாத எம். ஜி.
ஆரை முதல் அமைச்சர் ஆக்கியது யார்?
அது காங்கிரஸ் போட்ட பிச்சையாகும்!

—அகில இந்திய சிவாஜி ரசிகர் மன்றத்
தலைவர். தளபதி சண்முகம்.

தமிழகத்தில் காமராஜர் முதல்வராக
இருந்தார்; பக்தவத்சலம் முதல்வராக இருந்
தார். அப்போதெல்லாம் ஃபைல்கள் தேங்கிக்
கிடந்ததே இல்லை. அன்றன்றைய ஃபைல்கள்
அன்றே அனுப்பி வைக்கப்பட்டன.
ஆனால் இன்று? நூற்றுக்கணக்கான ஃபைல்
கள் தேங்கிக் கிடக்கின்றன.

—அனந்தநாயகி.

கமல் என் சித்தப்பா. அவரிடம் எனக்கு
மிகுந்த அன்பு உண்டு என்றாலும் அவர்
செய்கை கண்டனத்துக்குரியது. என்றாவது
ஒரு நாள் அவர் தனது செய்கைக்கு வருந்து
வார். ஸாரிகாவையும், அவர் குழந்தையை
யும் நான் ஒருபோதும் ஏற்க மாட்டேன்.

—சுஹாசினி.

பிறந்த நாள் விழா (பக்தவத்சலம் பிறந்த
நாள் விழா)வுக்கு வந்துவிட்டு இதுபோல
(ஃபைல்கள் பற்றி) இடித்துக் காட்டிப் பேசி
னால் பிறகு எப்படி அனைவரும் விழாவுக்கு
வருவார்கள்? இதையெல்லாம் பேசுபவர்கள்
உணர்ந்து கொண்டு பேச வேண்டும்.

—நாவலர் நெடுஞ்செழியன்.

மேக்கப் கலைப் பயிற்சிக்காக நான் அமெ
ரிக்கா சென்றிருந்த சமயத்தை ஸாரிகா
தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்
டாள். நான் வெளிநாடு போனது என்
போதாத வேளை. எல்லாம் என் தலைவிதி
என்றுதான் சொல்ல வேண்டும்.

—வாணி கமலஹாசன்.



ஜனநாயகப் போர்வையில் சர்வாதிகாரம்

சிறந்த படப்பிடிப்பு

* சென்ற வார கல்கியின் முகப்பில் நூற்றுக் கணக்கான குடங்களைக் குவித்து ஒரு வாழ்க்கைப் பிரச்னையை முன்னுக்கு நிறுத்தியிருந்தது சிறந்த படப் பிடிப்பு.

அல்லியகரம். உதயன்

தொண்டை வறண்டது!

* 'சுதந்திரமாம் சுதந்திரம்....' கட்டுரையைப் படித்தவுடன் தொண்டை வறண்டுவிட்டது போன்ற உணர்ச்சி! அட்டைப் படத்தை மீண்டும் ஒரு முறை புரட்டிப் பார்த்தேன்; விக்கலே எடுத்துவிட்டது!

தோழுந்தூர். சி. சுப்பு.

* அவசர நிலை அமலில் இருந்தபோது வீராணம் திட்டம் பற்றி ஆராய டெல்லியிலிருந்து அனுப்பப் பட்ட குழு அது நிறைவேறக்கூடிய திட்டம்தான் என்று அறிவித்தது. ஆனால் இன்றுவரை அது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

நாச்சியார் கோவில். எம். கல்யாணசுந்தரம்.

காவிரி பெருக்கெடுத்தாலும்......

* ஈரோடில் காவிரி பெருக்கெடுத்து ஓடுகிறது என்று பெயர். ஆனால் மத்திய பஸ் நிலையத்தில் ஒரு குடிநீர்க் குழாய்கூட கிடையாது. பொது மக்கள் கையில் குடத்தோடு நகராட்சி வண்டிக்காகக் காத் திருப்பதும், நகராட்சி தண்ணீரைக் காசுக்குக் குடம் குடமாய் விற்பதும்.... ரொம்பக் கேவலம்!

ஈரோடு. ஷோபா கல்யாணி.

அருமையான கருத்துத்தான். ஆனால்...

* 'அணுகுண்டுகளிலிருந்து நம்மைக் காப்பாற்றக் கூடியது நாம் தயாரிக்கக் கூடிய அணுகுண்டுகளல்ல, நம் தார்மீக பலமே.....' தலையங்கத்தில் அருமையான கருத்தைத்தான் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் அந்த வெற்றியைக் காண நாம் உயிரோடு இருக்க வேண் டுமே!

திருக்கோவிலூர். ஆர். சுப்பாராவ்.

ரசித்தேன்

* அன்பின் இயல்பையும் இலக்கணத்தையும் சுவை படத் தந்திருந்த கார்த்திகா ராஜ்குமாரின் 'மழைக்குப் பின்னும் பூக்கள்' படித்து மனம் மிக நெகிழ்ந்தேன்.

திண்டுக்கல். எம். தியாகராஜன்.

* ச்சூ அச்! அச்! சிவதாணுப் பிள்ளை அச்! இப் படி அச்! அச்! அறுப்பார் என்று அச்! அச்! நினைக்க வில்லை. அச்சு!

சீர்காழி. இரா. சுவாமிநாதன்.

* உண்ணாவிரதம் இருந்தவர்களின் உற்சாகம் குன்றி, சோர்வடைந்து 'ஏண்டா சாமி' என்ற வேளை யில் உமது காமெரா இயங்கியிருப்பது கண்டு ரசித் தேன்.

அரகண்டநல்லூர். ஆர். விஜி.

* 'ஒரு அங்காடியின் கும்பகர்ணத் தூக்கம்' என்ற செய்தி (கல்கி 29.9.1985) தொடர்பாக:

ஈரோட்டில் உள்ள கனி அங்காடி திறக்கப்படா மல் இருப்பதற்கு, இதற்கு முன் அப்பகுதியில் கடை வைத்திருந்தவர்கள் தங்களுக்கே வாடகைக்கு விடும் படி கேட்டார்கள். ஆனால் ஈரோடு நகராட்சி மறுத்து விட்டது. அதனால் ஈரோடு நகராட்சியின்மீது வழக்குப் போட்டுவிட்டார்கள், அப்பகுதி கடைக்காரர்கள் மற்றும் பெரும் வியாபாரிகள்.

ஈரோடு—10. மேஜர்தாசன்.

சென்னையில் அ.இ.அ.தி.மு.க. நடத் திய பேரணிக்கு கட்சித் தொண்டர்கள் ஓசியில் சென்று வர, ஒவ்வொரு தனி யார் பஸ் கம்பெனி முதலாளியும், தங் கள் பஸ்களை வாடகை ஏதுமின்றித் தந்ததோடு, தலா இரண்டாயிரத்திற்கும் குறையாமல் பணமாகவும், தர வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாயினர். மாண்பு மிகுக்களின் உத்தரவின் பேரில் நடத்திய இந்தக் கெடுபிடி வசூலுக்குச் சம்பந்தப் பட்ட இலாக்காவைச் சேர்ந்த சில அதி காரிகளும் அடி பணிய வேண்டியதாகி விட்டது. மூலை முடுக்குகளிலிருந்தெல் லாம் பஸ்கள் சென்னைக்குச் சென்று விட்ட காரணத்தினால் தமிழ் நாட்டில் மற்ற இடங்கள் முழுவதும் வழக்கமான போக்குவரத்துக்குப் போதிய பஸ்கள் இல்லாமல் மக்கள் அவதிக்குள்ளா யினர். அன்று எனது உறவினர் ஒரு வரது சமச்சடங்கிற்கு வெளியூர் சென்று வர நான் பட்ட சிரமம் கொஞ்சமில்லை. இத்தகைய அதிகார துஷ்பிரயோகங் களைக் கண்டிக்கவும் மக்கள் அஞ்சுகிறார் கள். உண்மை சர்வாதிகாரத்தைவிட ஜனநாயகப் போர்வையில் நடக்கும் சர் வாதிகாரம் கொடுமையானது; கேவல மானது.


இராசிபுரம். இரா. சம்பத்குமார்.

(இக்கடிதம் பரிசு பெறுகிறது)

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600032. (Phone: 431543)

Assistant Editor: P. S. Mani Editor: K. Rajendran

இளமையின் சின்னம்!



இளைஞர்கள் — மாணவர்களின் 12வது உலக விழா அண்மையில் மாஸ்கோவில் நடந்தது. "கட்யூஷா" என்ற பெயருடைய பெண் சின்னமே விழாவின் வரவேற்புத் தலைவர்! அந்தக் கட்யூஷாவின் உருவத்தை இளைஞர் அணி இரண்டு வண்ணமான விதத்தில் சித்திரிப்பதைக் காணலாம்.


பூம்பட்டாம்
மேனியால்
எழில்பெறவே
ஆசைப்பட்டு
மினுக்கும்
அணிகலனைப்
பார் தோழி!
பசும்பொன்னும் அசல் பட்டு வகைகளுக்கு:
குமரன் சில்க்ஸ்
(இந்தியாவில் பிரத்யேக பட்டு ஜவுளிக்கான
மிகப் பெரிய ஏர்கண்டிஷண்ட் ஷோரூம்)
பனகல் பார்க் எதிரில்,
12, ராகவைய ராவ் ரோடு,
தியாகராய நகர்,
சென்னை-600 017.
போன்: 443544